www.padippakam.com

1-15 ஜூன் 2001 ரூ. 5.00

# புதிய ஜனநாயகம்



**பட்டினிச் சாவின் பிடியில் வட இந்தியா**



## ஆளுநரும் ஆட்டுநரும்

www.padippakam.com

# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

## தாராளமய எதிர்ப்பில் இளைஞனின் துணிவு

கம்யூனிசப் பிடியில் இருந்து 'விடுதலை' பெற்ற போலந்து நாட்டின் அதிகாரிகளுக்கும், முதலாளிகளுக்கும் தாராளமயத்தின் நன்மை, தீமை பற்றி உபதேசிக்க அந்நாட்டுக்கு வந்த கிளிண்டன் மீது முட்டைகளை வீசியெறிந்து 'வரவேற்பு' கொடுத்திருக்கிறார், த்தொன்பதே வயதான துணிச்சல்மிக்க இளைஞர் கமில். கிளிண்டன் அது பரிவாரங்களோடு போலந்து தலைநகர் வார்சாவின் அழகை ரசித்துக் கொண்டிருந்த பொழுது, பாதுகாவலர்களின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு, திடீர் தாக்குதல் நடத்திய இந்த இளைஞனைக் கைது செய்துள்ள போலீசார், அவரை யாரும் நெருங்கி விடாதபடி இரகசிய கட்டுக் காவலில் வைத்திருக்கின்றனர். மேலும், கிளிண்டன் உரையாற்றவிருந்த அரங்கத்தின் முன் கூடியிருந்த நூற்றுக் கணக்கான போலந்து நாட்டு மக்கள் உலகமயமாக்கலுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தி, கிளிண்டனைக் கதிகலங்க வைத்துவிட்டனர்.

## தென்னை விவசாயத்திற்குச் சாவுமணி

மலேசியாவிற்குச் சுற்றுப்பயணம் போன வாஜ்பாயி, பல இலட்சக்கணக்கான (இந்திய) தென்னை விவசாயிகளின் வாழ்க்கைக்கே உலை வைத்துவிடும் ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்டுவிட்டுத் திரும்பியிருக்கிறார். இந்திய ரயில்வே கட்டுமானக் கழகத்திற்கு ஒரு ''காண்டிராக்டு'' கிடைக்க வேண்டும் என்பதற்காக, அடுத்த ஐந்து ஆண்டுகளில் மலேசியாவில் இருந்து 14 இலட்சம் டன் பாமாயிலை இறக்குமதி செய்ய சம்மதித்து, ஒப்பந்தம் போட்டுத் திரும்பியிருக்கிறார், வாஜ்பாயி. ஏற்கனவே, பாமாயில் இறக்குமதியால் தேங்காய் விலை சரிந்து மூச்சுத் திணறிக் கொண்டிருக்கும் தென்னை விவசாயிகள் பாமாயிலுக்குக் கூடுதல் வரி விதிக்க வேண்டும் எனக் கோரிப் போராடிக் கொண்டிருக்கின்றனர். ஆனால், வாஜ்பாயி பாமாயில் மீது விதிக்கப்பட்டு வரும் 85 சதவீத சுங்க வரியை, 45 சதவீதமாகக் குறைத்துக் கொள்ளவும் சம்மதித்துத் தலையாட்டிவிட்டுத் திரும்பியிருக்கிறார்.



போலந்து தலைநகர் வார்சாவில் நடந்த முட்டை வீச்சுத் தாக்குதலில் இருந்து பாதுகாக்கப்படும் கிளிண்டன்

## இந்து மதவெறிக்கு காங்கிரசின் சேவகம்

அம்பேத்கர் எழுதிய ''இந்து மதத்தின் புதிர்கள்'', பெரியார் எழுதிய ''இராமாயணம்'', கோவிந்த் பன்சாரே எழுதிய ''சிவாஜி யார்?'' ஆகிய நூல்களை விற்றதற்காக மும்பய் போலீசார் சலீம் சாபூவாலா என்பவரைக் கைது செய்து, இந்த நூல்களையும் பறிமுதல் செய்து விட்டனர். ''ஒரு முசுலீம், இந்துமதக் கடவுள்களை அவமதிக்கும் இந்த நூல்களை எப்படி விற்கலாம்?'' எனக் கூச்சல் போட்டுக் கொண்டு திரிந்த இந்துமத வெறியர்களைத் திருப்திபடுத்துவதற்காகவே, மகாராஷ்டிரத்தை ஆளும் காங்கிரசு கூட்டணி அரசு, சலீம் சாபூவாலாவைக் கைது செய்தது. இச்சட்ட விரோதக் கைதைக் கண்டித்து மனித உரிமை அமைப்புகள் நிர்மல் நகர் போலீசு நிலையத்தின் முன் ஆர்ப்பாட்டம் நடத்திய பிறகு, அவரை விடுதலை செய்த போலீசார், மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுத்து, பறிமுதல் செய்த நூல்களையும் திருப்பிக் கொடுத்தனர்.

## இந்திய இராணுவத்தின் 'மதச்சார்பின்மை'

காஷ்மீர் மாநிலத்திலுள்ள ஜம்மு பகுதியைச் சேர்ந்த அக்னூர் எனுமிடத்தில், கடந்த ஏப்ரல் மாத இறுதியில் இந்திய இராணுவத்திற்காக ஆளெடுக்கும் தேர்வு நடைபெற்றது. இதையொட்டி, இந்திய இராணுவம் வெளியிட்ட விளம்பரப் பிரசுரங்களில், ''முசுலீம்களுக்கும் வியாபாரிகளுக்கும் வேலை கிடையாது'' என அறிவித்திருந்தது. இந்திய இராணுவத்தின் இந்த வெளிப்படையான, திமிர்த்தனமான முசுலீம் விரோதப் போக்கை, காஷ்மீர் முதல்வர் பரூக் அப்துல்லா கூடச் சகித்துக் கொள்ள முடியாமல், அம்மாநில சட்டமன்றத்திலேயே கண்டித்துப் பேசினார். இதன்பிறகு, ''ஏற்கனவே நடந்த ஆளெடுப்புகளின் போது அதிக முசுலீம்களைச் சேர்த்துவிட்டதால்தான் இப்படி விளம்பரம் செய்தோம்'' என்ற அண்டப் புளுகை அவிழ்த்துவிட்டு, இந்திய இராணுவம் தனது இந்து மதவெறியை மறைத்துக் கொண்டது!

## தாய்ப்பாலின் எதிரிகள்

ஒவ்வொரு சிசுவும் குறைந்தபட்சம் ஆறு மாதங்களாவது தாய்ப்பால் குடிக்க வேண்டும்; அப்பொழுதுதான் குழந்தைகள் நோய் எதிர்ப்பு சக்தி பெற்று, உடல் நலத்தோடு வளரும்'' என்பது உலக சுகாதார நிறுவனத்தின் வழிகாட்டுதல். இந்த வழிகாட்டுதலால் தங்களது இலாபம் பாதிக்கப்படுவதாகப் பொருமிக் கொண்டிருந்த புட்டிப் பால் மாவு தயாரிக்கும் பன்னாட்டு நிறுவனங்கள், சிசுக்கள் நான்கு மாத காலம் தாய்ப்பால் குடித்தால் போதும் என இந்த வழிகாட்டுதலை மாற்றும்படி நிர்பந்தம் கொடுத்து வருகின்றன. மே 14-ம் தேதி தொடங்கி நடைபெறும் உலக சுகாதார நிறுவனத்தின் அனைத்துலக நாடுகளின் கருத்தரங்கில், இந்த வழிகாட்டுதலைத் தங்களின் விருப்பப்படி மாற்றிவிட பன்னாட்டு நிறுவனங்கள் தீவிர முயற்சியிலும் இறங்கிவிட்டன.

## மேற்கு வங்க 'மார்க்சிஸ்டு' ஆட்சி: சாதனையா? வேதனையா?

மேற்கு வங்கத்தில் 59,00[illegible] தொழிற்சாலைகள் நலிவடைந்து மூடியும் கிடக்கின்றன. மூடி கிடக்கும் 22 தொழிற்சாலைகளை சேர்ந்த 74 தொழிலாளர்கள் தற்கொலை செய்து கொண்டு இறந்து போயுள்ளனர்; 32 தொழிற்சாலைகளைச் சேர்ந்த 1560 தொழிலாளர்கள் அரைகுறைப் பட்டினியால் இறந்து போயினர். வேலையிழந்த தொழிலாளர்களின் வாழ்க்கை நிலைமை பற்றி ஆய்வு செய்த ''நாக்ரிக் மஞ்சா'' என்ற அமைப்பு ''இது 1995 ஆம் ஆண்டு நாங்கள் எடுத்த புள்ளி விபரம்; கடந்த ஐந்தாண்டுகளில் இந்தத் தற்கொலைகளும், பட்டினிச் சாவுகளும் இன்னும் அதிகரித்திருக்கக் கூடும்'' எனக் கூறுகிறது.

## மக்களின் வரிப் பணம் கிரிமினல்களைப் பாதுகாக்கவா?

உத்திர பிரதேச மாநிலத்தில் மட்டும் 266 கிரிமினல்கள் போலீசு பாதுகாப்போடு சுகபோகமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இப்படி போலீசு பாதுகாப்போடு வாழும் இக்கிரிமினல்களில் 70 பேர் சட்டமன்ற உறுப்பினர்கள்; 12 பேர் நாடாளுமன்ற உறுப்பினர்கள்; ஆறு பேர் அமைச்சர்கள்; 30 பேர் முன்னாள் நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள். இந்த 'மாண்புமிகு'க்கள் அனைவரும் திருட்டு, கொள்ளை, கொலை, பாலியல் வன்முறை உள்ளிட்ட பல கிரிமினல் குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகியிருப்பவர்கள்.


படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 16

**இதழ் 13-14**

16 மே 2001 - 15 ஜூன் 2001

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டு சந்தா: ரூ. 120.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 18

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்

புதிய ஜனநாயகம்
அஞ்சல் பெட்டி எண்: 6015,
அசோக் நகர்,
சென்னை - 600 083.


# தமிழகத் தேர்தல்கள் — ஜெயா பதவியேற்பு: அம்பலமானது அரசியல் சட்ட போலித்தனம்

ஜெயலலிதா - சசிகலா கும்பல் ஏற்படுத்தியிருக்கும் அரசியல் சட்ட நெருக்கடி நாடாளுமன்ற ஜனநாயகத்தின் சுய முரண்பாடுகளையும் பம்மாத்துகளை ஒரே சமயத்தில் அம்பலப்படுத்திவிட்டது. மக்கள் பிரதிநிதித்துவச் சட்டப்படியும் தேர்தல் ஆணையத்தின் 1997-ஆம் ஆண்டு ஆணைப்படியும் இரண்டாண்டுகளுக்கு மேல் தண்டனை பெற்றவர் தேர்தல்களில் போட்டியிட முடியாது. ஒரே சமயத்தில் இரண்டு தொகுதிகளுக்கு மேல் தாக்கல் செய்தவர்களின் வேட்பு மனுக்கள் அனைத்தும் நிராகரிக்கப்படும். அதன்படி ஜெயாவின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. ஆனால் அப்படி தண்டனை பெற்றாலும் பதவியில் இருக்கும் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினரின் வேட்பு மனுக்கள் செல்லுபடியாகும் என்ற இன்னொரு விதியின்படி கேரளத்தில் ஐந்தாண்டு சிறைத் தண்டனை பெற்ற பாலகிருஷ்ணப் பிள்ளையின் வேட்பு மனு ஏற்கப்பட்டது.

அரசியல் சட்டத்தின் விதிமுறைப்படி சட்டமன்ற, உறுப்பினரல்லாத ஒருவர் முதல் மந்திரியாக நியமிக்கப்படலாம். ஆனால் ஆறு மாதத்துக்குள் சட்டமன்ற உறுப்பினராகிவிட வேண்டும். இதன்படி தேர்தல்களில் போட்டியிடும் தகுதியில்லாத கிரிமினல் குற்றத்திற்காக தண்டிக்கப்பட்ட ஜெயலலிதா அவசர அவசரமாக முதல்வராகியுள்ளார். கிரிமினல் குற்ற வாளியே சட்டத்தை இயற்றுபவராகவும் போலீசு மந்திரியாகவும் ஆகியுள்ளார். தனது திருந்தாத குற்றக் குணப்படியே அரசியல் பழிவாங்குதல், நீதிதுறையின் கையை முறுக்கி காரியத்தை சாதிப்பது ஆகிய நடவடிக்கைகளில் இறங்கிவிட்டார்.

அதேசமயம் கிரிமினல் குற்ற வழக்கில் தண்டனை பெற்ற பாலகிருஷ்ண பிள்ளை மந்திரியாகும் முயற்சியை கேரள ஆளுநர் தடுத்துள்ளார். ஜெயா, பாலகிருஷ்ணப் பிள்ளை ஆகியோருக்கு ஆதரவாக, ''மக்கள் அமோக ஆதரவு பெற்று தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, சட்டம் - நீதிமன்றம் எப்படித் தடுக்க முடியும், அப்புறம் மக்களாட்சி, ஜனநாயகம் என்று எப்படிக் கூற முடியும். மக்கள் தீர்ப்பே சட்டத்தின் தீர்ப்பைவிட மேலானது என்பதுதான் ஜனநாயகம்'' என்று பலர் வாதிடுகின்றனர்.

முதலாளித்துவ ஜனநாயகமே இத்தகைய சந்து பொந்துகளையும் சுயமுரண்பாடுகளையும் கொண்டதுதான். தேர்ந்தெடுக்கப்படும் சட்டமன்ற - நாடாளுமன்ற அமைப்புகள், சட்டம் - நீதித்துறை, நிர்வாக அதிகார வர்க்கம் ஆகியவை சுயமாக இயங்கக் கூடியவை; ஒன்றின் தவறை மற்றொன்று களையும் அதேசமயம் ஒன்றுக்கு ஒன்று முரணாக செயல்படக் கூடாது என்றெல்லாம் தரப்படும் விளக்கங்கள் எல்லாம் கற்பனையானவைதான். மக்களை ஒடுக்குவதில் ஒன்றுபட்டு நிற்கும் இந்த அமைப்புகள், தங்களுக்குள் அதிகாரப் போட்டியில் ஈடுபட்டு அம்பலப்பட்டு நிற்கும்போது அவற்றின் போலித்தனங்களும் சுய முரண்பாடுகளும்தெரிகின்றன. ஊரறிய கிரிமினல் குற்றங்கள் புரிந்தவர்களைக் கூட உரிய காலத்தில் இந்த சட்ட அமைப்பின் கீழ் தண்டிக்க முடியாது; அப்படிப்பட்டவர்கள் ஆட்சிக்கு வருவதையும் தடுக்க முடியாது என்பதும் தெரிந்துவிட்டது.

★ ★ ★

தற்போது தமிழ்நாட்டு முதல் அமைச்சராகியிருக்கும் அ.இ.அ.தி.மு.க.வின் நிரந்தரத் தலைவி ஜெயலலிதாவை ஒரே ஒரு காரணத்திற்காக நாம் பாராட்டி வந்திருக்கிறோம். சில மாதங்களுக்கு முன்பு இரண்டு ஊழல் வழக்குகளில் இருந்து ஜெயலலிதாவை நிரபராதி என்று உயர் நீதிமன்றம் தீர்ப்புக் கூறி விடுவித்ததைத் தொடர்ந்து இதையே எழுதியிருந்தோம். இப்போதும் சொல்லுகிறோம்.

இந்த நாட்டின் சட்டங்கள் - நீதிமன்றங்கள் போன்றவற்றின் புனிதம், நாடாளுமன்ற ஜனநாயகத்தின் மேன்மை, பத்திரிகை - செய்தி ஊடகத்தின் நடுநிலைமை, நிர்வாக அதிகார வர்க்கத்தின் நேர்மை ஆகிய எல்லாமே போலியானவை என்பதைத் திரும்பத் திரும்ப நிரூபித்து வெளிச்சம் போட்டுக் காட்டுகிறார், ஜெயலலிதா. இதற்காக அவரைப் பாராட்டத்தான் வேண்டும்.

நாட்டிலேயே மிக அதிக ஊதியம் பெறும் திறமை வாய்ந்த சட்ட நிபுணர்களையும், உயர்நீதி மன்ற - உச்சநீதி மன்ற நீதியரசர்களையும் கூட விலைக்கு வாங்கவும் நீதியின் செங்கோலை வளைக்கவும் முடியும் என்று செய்து காட்டினார். மத்திய முன்னாள் சட்ட அமைச்சர் ராம் ஜேத்மலானியை புதுக்கோட்டை குற்றவியல் வழக்கு மன்றம் வரை கொண்டுவந்து வேலை வாங்கினான் போலி சாமியார் பிரேமானந்தா. அவனையும் விஞ்சும் வகையில், மாநில முதலமைச்சராகவும் மத்திய சட்ட அமைச்சராகவும், அமெரிக்காவில் இந்தியத் தூதராகவும் பதவி வகித்த சித்தார்த்த சங்கர் ரேயை தமிழ்நாட்டில் ஒரு கோட்டாட்சியர் முன்பாக வாதிடும்படி வைத்துவிட்டார், ஜெயலலிதா.

வழக்குகளை முடக்கி வைப்பது, இடைக்காலத் தடைகள் போடுவது, ஒரு தரப்பாகவும் - சட்டவிரோதமாகவும் தீர்ப்புகள் வழங்குவது ஆகியவற்றுக்காக உயர்நீதி மன்ற, உச்சநீதி

படிப்பகம்

www.padippakam.com

மன்ற நீதிபதிகளையும் விலைக்கு வாங்கினார். முன்னாள் தலைமைத் தேர்தல் அதிகாரி டி.என். சேசன் முதல் மலைச்சாமி, தேவாரம் ஆகிய முன்னாள் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகள் உட்பட இப்போது பதவியில் இருக்கும் அதிகாரிகளையும் தனது விசுவாச சேவகர்கள் ஆக்கிக் காட்டினார், ஜெயலலிதா. முன்னாள் குடிய ரசுத் தலைவர் வெங்கிடராமன், முன்னாள் ஆளுநர் பீஷ்ம நாராயணன் சிங் முதல் இன்னாள் அரசுத் தலைவர்களையும் தனது சேவையில் வைத்துக் கொண்டார்.

அரசியல் கட்சிகளைப் பொருத்தவரை, காந்தியம், பாரதீயம், திராவிடம், தமிழினம், தலித்தியம், மார்க்சியம் ஆகிய எல்லா பேச்சுக்களுமே வெறும் சவடால்கள்; எந்த ஓட்டுக்கட்சியையும் விலைக்கு வாங்கிவிட முடியும் என்று காட்டிவிட்டார், ஜெயல லிதா சில கோடி ரூபாய்களுக்கும் சில தொகுதிகளுக்கும் வேண்டி எத்தகைய அவ மானத்தையும் தாங்கிக் கொள்ளும் முதுகெ லும்பு இல்லாத கும்பல் தாம் எல்லா ஓட்டுக் கட்சிகளும் என்பதையும் நிரூபித்து விட்டார். ஜெயலலிதாவுக்கு எதிரணியில் நிற்கும் கட்சிகளும் இதற்கு விதி விலக்கல்ல. கருணாநிதியோ, வைக்கோவோ தனது கொள்கை, இலட்சியங்களை வீசிவிட்டு அவற்றுக்கு நேரெதிரான பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். கும்பலுக்கு விசுவாசிகளாக மாறியிருப்பதற்கும் ஜெயலலிதாவின் அர சியல் அணுகுமுறையும் ஒரு காரணம். தமி ழக அரசியல் - சமுதாய வாழ்வில் பாம்பும் கீரியுமாகக் கடித்துக் குதறிக் கொண்டிருந்த திராவிடர் கழக அய்யா வீரமணியையும், இந்து முன்னணியின் வீரத்துறவி ராம. கோபாலனையும் ஒரே மேடையில், ஒரே அணியில் கொண்டு வந்து நிறுத்தி ஒரே குரலில் பேச வைத்திருக்கிறாரே ஜெய லலிதா, அதைவிடப் பெரிய சாதனை என்ன வேண்டும்?

ஜெயலலிதா - சசிகலா கும்பலின் 1991-96 ஐந்தாண்டு கால ஆட்சியின் இலஞ்ச - ஊழல், அதிகார முறைகேடுகள், உல்லாச - ஊதாரித்தனங்கள், கிரிமினல் - ரௌடித்தனங்களையும் படம் பிடித்துக் காட்டியே பரபரத்து வந்த பத்திரிக்கை - செய்தி ஊடகங்களை அப்படியே புரட்டிப் போட்டு விட்டார் ஜெயலலிதா. ஜெயலலி தாவின் கிரிமினல் நடவடிக்கைகளை அம்பலப்படுத்தி ஆத்திரத்துக்கு இலக் கான அதே செய்தி ஊடகம், இப்போது அவரது அரசியல் நிர்வாகத் திறமையைப் பாராட்டும்படி செய்துவிட்டார். சந்தர்ப்ப வாதம் அரசியலில் மட்டுமல்ல, எங்கும் எதிலும் நிறைந்திருப்பதை மிகவும் பெரிய அளவில் வெளிச்சம் போட்டுக் காட்டியவர் ஜெயலலிதாதான்.

★★★

**சி**லியின் பினோசெட், பனாமாவின் நோரிகா, உகாண்டாவின் இடி அமீன், இந்தோனேசியாவின் சுகார்த்தோ, யூகோஸ்லாவியாவின் மிலோசேவிச் போன்ற பதவியிழந்த பாசிச கிரிமினல் குற்ற வாளிகள் மீண்டும் ஆட்சியைப் பிடிக்க விரும்பினால் நம்முடைய ஜெயலலிதா விடம் வந்து பாடம் கற்க வேண்டும். அதுவும் இரத்தம் சிந்தி அதிரடி ஆட்சிக் கவிழ்ப்புகளில் ஈடுபடாமல் அமைதி வழி யில், சட்டபூர்வமாகவே நாடாளுமன்ற ஜன நாயக முறை மூலமாகவே எப்படி ஆட்சியைப் பிடிப்பது என்பதை ஜெயல லிதா அவர்களுக்குத் தெளிவாகவே சொல்லிக் கொடுக்க முடியும்.

ஆனாலும், இந்திய நாடாளுமன்ற ஜன நாயகத்துக்கு ஜெயலலிதா, முன்னோடிகளே இல்லாத முற்றிலும் புதியதொரு பாத்திரம் அல்ல. அரசியல் கிரிமினல்மயமாவது இந்திய நாடாளுமன்ற ஜனநாயகத்தில் எப்போதோ தொடங்கிவிட்டது. அதாவது அரசியல்வாதிகள் கிரிமினல்களாக வளர் வதும், கிரிமினல்கள் அரசியல்வாதிகளா வது, இவ்விரு வகையினருடன் அதிகா ரிகள் கைகோர்த்துக் கொள்வதும் புதிதல்ல. இத்தகைய அரசியல் நிகழ்ச்சிப் போக்கில் ஒரு பரிணாமத் தோற்றந்தான் ஜெயலலிதா.

1996 நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் களில் போட்டியிட்ட 13,592 பேர்களில் 1,500 பேர் கிரிமினல் குற்றங்கள் பதிவு செய்யப்பட்டவர்கள் அல்லது கிரிமினல் குற்றங்களுக்காகத் தண்டனை பெற்ற வர்கள். அவர்களில் 40 பேர் நாடாளுமன்ற உறுப்பினர்களாகி விட்டனர். உத்திரப் பிரதே சத்தின் தற்போதைய 403 சட்டமன்ற உறுப் பினர்களில் 166 பேர், 100 மந்திரிகளில் 19 பேர் கிரிமினல் வழக்குகளை எதிர்கொண் டுள்ள குற்றவாளிகள். இவ்வாறு அரசியல் கிரிமினல்மயமாவதைக் கண்ட ஜனநா யகவாதிகள் பலரும் கூச்சல் போடவே, அது குறித்து விசாரிப்பதற்கு மத்திய போலீசுத் துறைச் செயலாளர் வோரா என்பவர் தலை மையில் கமிசன் போடப்பட்டு அறிக்கையும் வெளியிடப்பட்டது. ஆனால், மத்தியிலும் மாநிலங்களிலும் அரசியல்வாதிகளில் - அதிகாரிகளில் குறிப்பாக போலீசு அதிகாரி களில் எவ்வளவு பேர், யார் - யார் கிரிமினல் குற்றக் கும்பல்களோடு உறவு வைத்திருக் கின்றனர் என்கிற விவரம் மூடி மறைக்கப் பட்டது.

வோரா கமிட்டி அமைக்கப்பட்டதிலி ருந்து அரசியல் கட்சி சார்ந்த, கட்சி சாராத ஜனநாயகவாதிகள் எல்லாருமே அரசியல் கிரிமினல்மயமாவது குறித்து ரொம்ப வும்தான் கவலைப்பட்டார்கள். ஆனால், போலி கம்யூனிஸ்டுகள் தவிர, எல்லா அர சியல் கட்சிகளுமே கிரிமினல் குற்றங்கள் புரிந்து தலைமறைவானவர்கள், பிணையில் உலவுபவர்கள், சிறையில் உல்லாச ஓய்வு எடுப்பவர்கள் பலரையும் தேர்தல்களில் நிறுத்தி, அமைச்சர்களாகவும் வரச் செய்தனர். போலி கம்யூனிஸ்டுகள் தேர்தல் கூட்டணிகள் வைத்து, இவர்களை ஆதரித் தனர். இத்தகைய கிரிமினல்கள் பெரும் பாலும் கொலை, கொள்ளை, கற்பழிப்பு, சாதி - மத வெறிக் கலவரங்களை நடத்திய வர்கள். இன்னும் பலர் ஆள் கடத்தல், பணயத் தொகை பெறுவது, நிலக்கரி - இரயில் வாகனக் கொள்ளை போன்றவற்றில் ஈடுபடுபவர்கள். பால் தாக்கரே, முலயம் சிங், கன்ஷிராம், சௌதாலா, பஜன்லால் - பன்சிலால், லல்லு பிரசாத், சந்திரபாபு நாயுடு, ஜெயலலிதா இப்படிப் பலரும் தள பதிகள், மாவீரர்கள், ''சம்பா''க்களை வைத்தே கட்சி நடத்துகின்றனர்.

இப்படி கிரிமினல்கள் அரசியலுக்குக் கொண்டு வரப்படுவது ஒருபுறம் இருக்க, அர்ஜுன் சிங், சௌதாலா, பஜன்லால் - பன்சிலால்கள், சரத் பவார் - பங்காரப் பாக்கள் என்று இலஞ்ச - ஊழல் அதிகார முறைகேடுகள் செய்து கோடி கோடியாகக் குவித்து கிரிமினல்மயமானவர்களும் உண்டு. இவர்களெல்லாம் ஜெயலலிதா வுக்கு முன்னோடிகள் என்றால், குறிப்பாக, தேர்தல் தில்லுமுல்லுகள் செய்து தண்டிக்கப் பட்ட பின்னும், சட்ட விதிகளை வளைத்து ஆட்சித் தலைமையைக் கைப்பற்றுவதில் ஜெயலலிதாவுக்கு முன்னோடியாகத் திகழ்ந் தவரும் உண்டு. அவர்தான் ''அன்னை'' இந்திரா காந்தி.

1971 நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் களின்போது உ.பி. ரேபரேலித் தொகுதியில் போட்டியிட்டு வென்று பிரதமரான இந்திரா காந்தி அரசு இயந்திரத்தை முறைகேடாகப் பயன்படுத்தினார் என்பது நிரூபிக்கப்பட்டு, பதவி நீக்கமும் சிறைத் தண்டனையும் பெற்றார். உ.பி. உயர்நீதி மன்றத்தில் இத்தண் டனை பெற்ற இந்திரா, உச்சநீதி மன்றத்தில் இடைக்கால் தடையும் இரண்டும் கெட்டான் தீர்ப்பும் பெற்றார். அதாவது, இந்திரா பிர தமராக நீடிக்கலாம், ஆனால், நாடாளு மன்ற உறுப்பினருக்குரிய உரிமைகள் கோர முடியாது என்பதே தீர்ப்பு. இன்று மனித உரிமை பேசித் திரியும் முற்போக்கு வேடதாரி வி.ஆர். கிருஷ்ணய்யர்தான் (ஜெயலலிதாவுக்கு இப்போது வக்கா லத்து வாங்கும் சேசன், சோ. ராம கோ பாலன் வகையறாக்களை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.) அந்தத் தீர்ப்பை வழங்கியவர். அதன் பிறகு இந்திரா பதவி விலகக் கோரி எதிர்க் கட்சிகள் போராடி அரசியல் நெருக்கடி முற்றியது. தனக்கு எதிராக அமெரிக்க

> தேர்தல் தில்லுமுல்லுகள் செய்து தண்டிக்கப்பட்ட பின்னும், சட்ட விதிகளை வளைத்து ஆட்சித் தலைமையைக் கைப்பற்றுவதில் கிரிமினல் ஜெயலலிதாவுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தவரும் உண்டு. அவர்தான் ''அன்னை'' இந்திரா காந்தி.



படிப்பகம்

www.padippakam.com

சி.ஐ.ஏ. சதி செய்ததாகக் கூறி ''அவசர நிலை'' பாசிச ஆட்சியைப் பிரகடனம் செய்து, சட்டத்தைத் திருத்தி, தன் மீதான வழக்கில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டார். எதிர்த்த அனைவரையும் சிறை யிலடைத்தார்.

அதன் பிறகு 1977 பொதுத் தேர்தல் களில் ஆட்சிக்கு வந்த ஜனதா கூட்டாளிகள் இந்திரா - அவரது இளைய வாரிசு சஞ்சய் காந்தியின் அவசர நிலைக்கால அக்கிரமங் களை விசாரிப்பதற்கு கமிசன்கள் போடப் பட்டன. விசாரணைகள் முடிந்து தண்டனை பெறுவதற்கு முன்பாகவே ஜனதா அரசு கவிழ்ந்து மறுதேர்தல்கள் வந்தன. மீண்டும் ஆட்சியைப் பிடித்த இந்திரா - சஞ்சய் கும்பல் இலஞ்ச - ஊழல், அதிகார முறை கேடு வழக்குகளை யெல்லாம் இரத்து செய்தது.

அந்தக் காலம் முழுவதும் இந்திரா - சஞ்சய் கும்பலின் விசு வாசக் கூட்டாளியும் ஆலோசகருமாக இ ருந்த சித்தார்த்த சங்கர் ரே, மேற்கு வங்கத்தில் அரை பாசிச ஆட்சி நடத்தித் தமது கட்சியி னரைக் கொன்று குவித் தவர் என்று போலி கம்யூனிஸ்டுகளால் குற்றஞ் சாட்டப்பட் டவர். அதே சித்தார்த்த சங்கர் ரேதான் இப்போது ஜெயலலி தாவின் சட்ட ஆலோ சகர், அந்த ஜெயலலி தாவின் அணியில் சித்தார்த்த சங்கர் ரே யுடன் தோளோடு தோள் உரசுகிறார்கள், ''அந்தத் தோழர்கள்''.



பதவியேற்பு விழாவில் ஆளுநரும் ஆட்டுநரும்

இந்தக் கதை பழை யதென்றாலும், அப்போது இந்திரா ஏற்படுத்திச் சென்ற அவ சர நிலைக் காலச் சட்டம்தான் ஜெயலலிதா போன்ற அரசியல் கிரிமினல்களுக்குப் பாது காப்பாக இருக்கிறது. அரசுத் தலைவர், துணைத் தலைவர், பிரதமர், முதலமைச் சர்கள் மீது கிரிமினல் வழக்குத் தொடுக்க முடியாது என்று சட்டம் போட்டார் இந்திரா. பின்னர் அது எந்தக் கட்சி ஆட்சியிலும் நீக்கப்படவில்லை. அரசுத் தலைவர், மாநில ஆளுநர் அனுமதி பெற்று கிரிமினல் வழக்குப் போடலாம் எனத்தான் மாறியது.

இரயில் விபத்துக்கள் நடந்தாலோ, இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகள் எழுந் தாலோ தார்மீக அடிப்படையில் பதவி விலக வேண்டும் என்று சொல்லப்படும் மரபு இருந்ததாகக் கூறப்படுவது கூட உண்மையல்ல என்று காட்டத்தான் இந்தப் பழைய கதை. குற்றம் நிரூபிக்கப்பட்டு தண்டனை பெற்ற இந்திரா மீண்டும் பிரதம ராகவில்லையா? போபார்ஸ் பீரங்கி பேர ஊழல் ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்டு 15 ஆண்டுகளாகியும் ராஜீவ் காந்தி கும்பல் தண்டனை பெற்றதா, பதவி இழந்ததா? மீண்டும் தேர்தலில் நிற்கத் தடை வந்ததா? எவ்வளவோ மந்திரிகள், எம்.எல்.ஏ., எம்.பி.க்கள் மீது கிரிமினல் குற்றங்களுக்காக ''பிடிவாரண்ட்'' பிறப்பிக்கப்பட்டும் சிறப்புக் காவல்படை பாதுகாப்புடன் நடமா டுகின்றனர்; அதேசமயம் போலீசு அவர் களைத் தேடி வருகிறது; இன்னும் பிடிக்க முடியவில்லை என்று வழக்கு மன்றங்களில் பதிவாகிறது.

அரசியல்வாதிகள் மீது குற்றச்சாட்டுகள் வந்தால் அரசு பொறுப்புக்களைத் துறந்து கட்சிப் பொறுப்புகளை ஏற்பதும், சிறிது காலம் சென்று மீண்டும் அரசுப் பதவி ஏற்பதும் என்பதுதான் முன்பிருந்த மரபு. குற்றச்சாட்டுகள்தான் நிரூபிக்கப்பட்டு விட்டதா, வழக்கு ஏதும் இருக்கிறதா என்று கேட்கும் மரபு பின்னர் வந்தது. வழக்கு பதி வாகியிருக்கிறது, வழக்கு மன்றத்தில் குற்றம் பதிவாகியிருக்கிறதா என்று கேட்டு அப்படிப் பதிவான பிறகு பதவி விலகுவது மரபானது. அதன் பின்னர் குற்றம் பதிவா னாலும் அது நிரூபிக்கப்பட்டுத் தண்டிக்கப் படவில்லையே என்று கேட்பது அடுத்த மர பானது. தண்டிக்கப்பட்டாலும் கீழ் நீதி மன்றத் தீர்ப்புத்தானே மேல் முறையீடு செய்யலாம், உச்சநீதி மன்றத்தில் குற்றம் நிரூ பிக்கப்பட்டதா என்று கேட்பது மரபானது. உயர்நீதி மன்றமென்ன, உச்சநீதி மன்றமென்ன எங்கே தண்டிக்கப்பட்டாலும், மக்கள் மன்றத்தின் தீர்ப்புதான் இறுதியானது என்று சொல்லும் மரபு நீண்ட காலமோகவே இருந்து வருகிறது. இப்படிச் சொல்லித்தான் இந்திரா - சஞ்சய் கும்பல் மீதான வழக்குகள் 1980 தேர்தலுக்குப் பின்னர் இரத்துச் செய்யப்பட்டன.

ஆனால், மக்கள் தீர்ப்பை நாடாளுமன்ற ஜனநாயகவாதிகள் ஒரு போதும் மதித்த தில்லை. தேர்தல்கள் மூலம் பெரும்பான்மை பெற்று அமைக்கப்பட்ட ஆட்சியை 356-ஆவது சட்டப் பிரிவைப் பயன்படுத்தி 100-க்கும் மேற்பட்ட முறை கலைத்திருக்கி றார்கள். 1977-இலும் அதன் பின்னரும் போலி கம்யூனிஸ்டுகள் ஆதரவுடன் ஆட்சிக்கு வந்த ஜனதா வகையறாக்களும் இதைச்செய்துள்ளனர். மக்கள் தீர்ப்புக்கு மாறாக தி.மு.க., அ.தி.மு.க. ஆட்சிக் கவிழ்ப்புகள் - கலைப் புகளுக்கு இரண்டு கழ கங்களுமே மாறி மாறி ஆதரவு தெரிவித்தன, கோரிக்கை விடுத்தன. ஒரு கட்சியில் நின்று வெற்றி பெற்ற பின் மக்கள் தீர்ப்புக்குத் துரோகம் செய்து பணத்துக்கும் பத விக்கும் கட்சி மாறு வதும் மரபாக மட்டு மல்ல, நியதியாகவும் இருக்கிறது.

★★★

ஜெயலலிதா - சசிகலா கும்பலின் 1991-96 ஆட்சியின் போது இலஞ்ச - ஊழல் குற்றச்சாட் டுகள் எழுந்த காலத்தி லிருந்தே தன்னைக் காத்துக் கொள்வதற் காக அடுத்தடுத்து அர சியல் - சட்ட நெருக்கடிகளை எழுப்பி வரு கிறது. அப்போது முதல்வர் மீது வழக்குப் போடுவதற்கு அனுமதி தரும் உரிமை ஆளு நருக்குக் கிடையாது என்றுவழக்குப் போட்டு வாதாடி, இலஞ்ச - ஊழல் வழக்கு களை முடக்கி வைத்தது. பதவி இழந்த பிறகும் இப்படியே பல தடைகளை உரு வாக்கி, வழக்குகளை முடக்கி வைப்பது, தள்ளிப் போடுவது, அடுத்து வரும் தேர்தல் களில் எப்படியும் ஆட்சியாளர்கள் மீது வெறுப்படையும் மக்கள் தம்மை தேர்ந்தெ டுப்பர், வழக்குகளை இரத்து செய்து தப்பித்து விடலாம் என்று திட்டமிட்டது.

அது எதிர்பார்த்தபடியே வந்த 1998 தேர்தல்களில், பா.ஜ.க.வுடன் கூட்டுச் சேர்ந்து, கோவை குண்டு வெடிப்பைச் சாதக மாகப் பயன்படுத்தி தமிழ்நாட்டில் அதிக

www.padippakam.com

இடங்களைப் பிடித்து மத்திய ஆட்சியிலும் பங்கேற்றது. தனது எடுபிடி தம்பிதுரையை மத்திய சட்ட மந்திரியாக்கி அம்மணமான வழிமுறைகளைப் பயன்படுத்தி, சிறப்பு நீதி மன்றங்களைக் களைத்து, ஊழல் வழக்கு களில் இருந்து விடுபட எத்தணித்தது. உச்சநீதி மன்றமே, வெட்கக்கேடான முறையில் நடந்து கொண்டு, ஜெயா - சசி கும்பலுடன் ஒரு பேரம் நடத்தி அதன் எத்த ணிப்புகளைக் கைவிடும்படி செய்தது. தமிழ் நாட்டு நலன்களுக்கான கோரிக்கைகளை வலியுறுத்துவது என்ற பெயரில் பா.ஜ.க. கூட்டணி அரசின் கையை முறுக்கி காரியம் சாதிக்க முயன்றது. பா.ஜ.க. அரசு கால தாமதம் செய்வதாக எண்ணி அவசரமும் ஆத்திரமும் அடைந்த ஜெயலலிதா ஆட்சிக் கவிழ்ப்பு செய்தார். அடுத்து வந்த தேர்தல் களில் ஜெயலலிதா கூட்டணி பெரும் பான்மை பெற முடியாத நிலையில் அதி காரப் பங்கு கிடைக்காமல் தவித்த ஜெயல லிதா, சட்டபூர்வமான தடைகளைப் பெற சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடு பட்டார். கூடவே யாகங்கள், சோதிடங்கள் நடத்தியும் பார்த்தார். ஆனாலும், இரண்டு ஊழல் வழக்குகளில் சிறைத் தண்டனை பெறுவதில் இருந்து தப்ப முடியவில்லை.

புளுகு மூட்டைகளை அவிழ்த்துவிட்டு பிரச்சாரம் செய்வதில் தற்போதைய அரசி யலில் ஜெயலலிதாவுக்கு நிகரானவர் யாரு மில்லை. கோவில் பிரசாதத்தில் நஞ்சு வைத்தும், தனது கார் மீது லாரி விட்டு மோதியும் கொல்ல முயன்றனர்; சட்டமன் றத்தில் சேலை அவிழ்த்து மந்திரியும், ஆளுநர் மாளிகையில் தகாத முறையில் அணுகி ஆளுநரும் தன்னை மானபங்கப்ப டுத்தினர்; எம்.ஜி.ஆருக்கு நஞ்சு வைத்து அவர் மனைவியே கொன்றார்; தனது ஆட்சியில் நட்ட ஈடு பெறுவதற்காகவே காவல் நிலைய கற்பழிப்பு புகார்கள் கூறுகின் றனர்; தமிழ்நாட்டில் பிரிவினைவாத - தீவிர வாத ஆபத்து, துப்பாக்கிக் கலாச்சாரம் - வெடிகுண்டு கலாச்சாரம் பெருகி விட்டது; இதற்குக் காரணம் கருணாநிதிதான்; ராஜீவ் கொலை, கோவை குண்டு வெடிப்பு, வீரப்பன் - தமிழ்த் தீவிரவாதிகளின் ஆதிக்கம் ஆகியவற்றின் பின்னணியில் கரு ணாநிதி இருக்கிறார் - இப்படி அடுக்கடுக் காக இடைவிடாது புளுகி வருகிறார் ஜெய லலிதா. இந்த வகையில் இட்லரின் நாஜி பிரச் சார மந்திரிகள் கோயபல்சு, கோயரிங் ஆகியோர் ஜெயலலிதாவிடம் பிச்சை வாங்க வேண்டும்.

போயசு தோட்டத்து நீண்ட நெடிய சுவர் களுக்குள் உல்லாச - ஊதாரி வாழ்க்கை நடத்திக் கொண்டே, தனக்கென்ன பிள்ளையா, குட்டியா? அனாதையான தனக்கு மக்கள் சேவைதான் ஒரே இலட்சியம் என்று புளுகிப் புளுகி ஆட்சிக்கு வந்து கோடி கோடியாகக் குவித்து அம்பலமாகி, ஆட்சியிலிருந்து எட்டி உதைக்கப்பட்டு, போயசுத் தோட்டத்துப் புதையல்கள் வெளி யுலகிற்கு தெரிய வந்தபோது, எல்லாம் தனக்குத் தெரியாமல் சுற்றியிருந்தவர்கள் செய்துவிட்ட தவறு; இனி வளர்ப்பு மகனும் கிடையாது, உடன்பிறவா சகோதரியும் தள்ளி வைப்பு என்று நாடகமாடினார். ஆனால், மிகப்பெரிய கொள்ளைக்காரி ஜெயலலிதாதான் என்பதும் அம்பலமான போது, சிறைக் கொடுமை, பெண் என்பதால் இழைக்கப்படும் கொடுமை, அரசியல் சதி, பழிவாங்கும் முயற்சி என்றெல்லாம் பச்சை யாகப் புளுகி அனுதாபத்தைத் தேடுவதில் ஈடுபட்டார்.

தன்னை அரசியலில் இருந்து ஒழித்துக் கட்டுவதற்காக உருவாக்கப்பட்ட சிறப்பு நீதி மன்ற வழக்குகள் எல்லாம் பொய்யானவை; அவற்றை இரத்து செய்ய வேண்டும் என்று உயர்நீதி மன்றத்திலும் உச்சநீதி மன்றத்திலும் ஜெயலலிதா செய்த முறையீடுகள் மீண்டும் மீண்டும் அவரது முகத்தில் வீசியடிக்கப்பட் டன. விலைபோன நீதிபதிகளால் தற்காலிகத் தடைபோட்டு வழக்குகள் இழுத்தடிக்கப்பட் டதும் நடந்தன. ஒரு வழக்கில் தண்டனை பெற்றதும் கோரத் தாண்டவமாடிய ஜெயா விசுவாசிகள் மூன்று மாணவிகளை உயி ரோடு கொளுத்திய போதிலும், அதுவும் தன்னுடைய எதிராளிகள் செய்த சதிதான் என்று புளுகினார். மேலும் ஒரு வழக்கில் தண்டனை பெற்று, சட்டப்படி தேர்தலில் போட்டியிட முடியாது என்று தெரிந்தும் சட்டப்படி தான் போட்டியிட்டு வென்று முதல்வராக முடியும் என்று சாதித்து வந்தார்.

★ ★ ★

பொய் - புளுகு, பித்தலாட்டங்க ளையே அரசியல் மூலதனமாகக் கொண்டுள்ள ஜெயலலிதா, எல்லாவற் றுக்கும் சிகரம் வைத்தாற் போன்று தற்போ தைய தனது தேர்தல் வெற்றிக்கு ஒரு வியாக் கியானம் தந்து வருகிறார். ''ஜெயலலிதா - சசிகலா மீதான இலஞ்ச - ஊழல், சொத்துக் குவிப்பு, அதிகார முறைகேடுகள் என்ற வழக்குகள் எல்லாம் பொய்யானவை, அர சியல் பழிவாங்கும் நோக்கத்தோடு, புனை யப்பட்டவை, அதற்காகச் சட்ட விரோதமாக உருவாக்கப்பட்டவை தாம் சிறப்பு நீதிமன் றங்கள், ஆகவே எல்லா வழக்குகளில் இருந்தும் ஜெயலலிதா - சசிகலா மற்றும் அவர்களைச் சேர்ந்தவர்களைக் குற்றமற் றவர் என்று விடுவிக்க வேண்டும்'' என்று மக்கள் தீர்ப்பளித்து விட்டார்கள்; இதைத்தான் தன் தலைமையிலான அணியின் வெற்றி குறிக்கிறது என்று ஜெய லலிதா விளக்கமளிக்கிறார். இதையே வேறு வார்த்தைகளில் போலி கம்யூனிஸ்டுகள் உட்பட ஜெயலலிதா அணியினர் அனை வரும் கூறுகின்றனர்.

தேர்தல்களில் மக்கள் வாக்களிப்பது என்பது ஓட்டுப் பொறுக்கிகளின் பொய்யான வாக்குறுதிகளை நம்பி எழுதப் படாத வெற்றுப் பத்திரத்தில் கையொப்பம் போட்டுத் தருவதைப் போன்றதுதான். பிறகு அதில் அவர்கள் தமது நோக்கப்படி எழுதிக் கொண்டு, இதற்காகத்தான் தனக்கு மக்கள் ஓட்டுப் போட்டார்கள் என்று சொல்லுவதும் செய்வதும் தான் நடைமுறை என்பதை நாம அறிவோம். 1991 தேர்தல்களில் ஜெயலலிதா கட்சிக்கு ஓட்டுப் போட்டு ஆட்சிக்கு அனுப் பினார்கள். கோடி கோடியாக கொள்ளைய டித்து உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் சொத்துக்களைக் குவிப்பதற்கா அப்படி ஓட்டுப் போட்டார்கள்?

ஜெயலலிதா அணியின் இன்றைய வாதப்படியே பார்த்தாலும் 1996 தேர்தல்க ளில் எந்தப் பிரச்சாரத்தைக் கேட்டு ஓட்டுப் போட்டார்கள்? ஜெயா - சசி கும்பலின் கிரி மினல் குற்றங்களுக்குத் தண்டிக்கப்பட வேண்டும் என்பதற்காகத்தானே! மக்களு டைய அந்தத் தீர்ப்பை மட்டும் அவர்கள் ஏற்க மறுத்து, சட்டத்தின் சந்து பொந்துகளில் நுழைந்து, அரசியல் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி, கருணாநிதி அரசு மக்களுக்கு அளித்த ஏமாற்றங்களைப் பயன்படுத்திக் கொண்டு ஆட்சி வரத் துடித்தது ஏன்?

இது ஒருபுறமிருக்கட்டும்; 1996 தேர்தல் களில் ஜெயலலிதா உட்பட அவருடைய அணியினரை மண்ணைக் கவ்வச் செய்த அதே மக்கள், இப்போது மீண்டும் ஒரு ஐந்தாண்டுகள் ஜெயா - சசி கும்பல் தமிழ் நாட்டை ஆளுவதற்காக அமோக ஆதரவு தந்திருக்கிறார்கள். அது ஏன்?

1991-96 ஆகிய முதல் ஐந்தாண்டு கால ஆட்சியில் அக்கும்பல் நடத்திய இலஞ்ச - ஊழல், அதிகார முறைகேடுகள், உல்லாச - ஊதாரி வாழ்க்கைக் களியாட்டங்கள், இவை மட்டுமல்ல. அதே ஆட்சியில் நடந்த வாச்சாத்தி - சின்னாம்பதி, சிதம்பரம் பத்மினி பாலியல் வன்முறைகள், தராசு அலு வலகம் மற்றும் வழக்கறிஞர்கள், எதிர்க்கட்சி யினர் மீதான கொலைவெறித் தாக்குதல்கள், மீனவர் மீது, கொடியங்குளம் தாழ்த்தப்பட் டவர் மீது, வீரப்பனைத் தேடுவதாக மலைவாழ் மக்கள் மீதான போலீசின் படு கொலைகள் - கற்பழிப்புகள் - இப்படி எல்லா அக்கிரமங்கள் அட்டூழியங்க ளையும் தமிழ்நாட்டு மக்கள் மறந்து விட்டார்களா? அல்லது இவையெல்லாம் அரசியல் பழிவாங்கும் நோக்கத்தோடு கரு ணாநிதி குடும்பத்தினர் செய்யும் அவதூறு - பொய்ப் பிரச்சாரம் - பொய் வழக்குகள் என்ற ஜெயலலிதா அணியினரின் வாதத்தைத் தமிழ்நாட்டு மக்கள் நம்பிவிட் டார்களா?

அதெல்லாம் இல்லை. தேர்தல்களில் கரு ணாநிதி அணியைத் தோற்கடித்ததற்கும், ஜெயலலிதா அணியை வெற்றி பெறச் செய் ததற்கும் வேறு பல காரணங்கள் உள்ளன. ஜெயா - சசி கும்பலின் கிரிமினல் குற்றங் களை இன்னும் மக்கள் மறந்துவிடவில்லை என்பதால்தான் இந்த அளவாவது கருணா நிதி அணி சில இடங்களைப் பெற்றுள்ளது. ஜெயலலிதா அணியின் வாதத்தை மக்கள் அப்படியே ஏற்றிருந்தால் முந்தைய தேர்தல் களில் நடந்ததைப் போல ஒற்றை இலக்

தொடர்ச்சி 21-ஆம் பக்கம்

www.padippakam.com

# அர்சத் மேத்தா, கேதான் பரீக்......
# தாராளமயத்தின் வளர்ப்புப் பிள்ளைகள்

ஆந்திர மாநிலத்திலுள்ள சிர்சில்லா என்ற ஊரைச் சேர்ந்த நெசவாளிகள் தற்கொலை செய்து கொண்டு இறந்து போன செய்தி வெளியான அதே சமயத்தில் தில்லி, கல்கத்தா, மும்பய் நகரங்களில் சில தற்கொலைகளும், கொலைகளும் அடுத்தடுத்து நடந்தன.

★ வீரேந்திர குமார் அகர்வாலும் அவர் மனைவி ராம்காலியும் தில்லியில் ஒரு விடுதியில் விஷத்தைக் குடித்துத் தற்கொலை செய்து கொண்டனர்.

★ அபிஷேக் பங்கா கல்கத்தாவில் கங்கை நதியில் மூழ்கி உயிரை மாய்த்துக் கொண்டார்; அவரது மனைவி சோனா தனது குடியிருப்பின் ஒன்பதாவது மாடியில் இருந்து குதித்து இறந்து போனார்.

★ சஞ்சய் அகர்வாலும், அவர் மனைவி சுவப்னாவும், தங்களது இரு குழந்தைகளைக் கொன்றுவிட்டு, தூக்கு மாட்டிக் கொண்டனர்.

இப்படி அல்பாயுசில், பரிதாபகரமாக இறந்து போன இவர்கள், சிறிய பங்குச் சந்தை தரகர்கள். அல்லது திடீர்ப் பணக்காரர்களாக ஆசைப்பட்டு, பங்குச் சந்தையில் முதலீடு செய்த நடுத்தர வர்க்கத்தினர். மார்ச் முதல் வாரத்தில் இந்தியப் பங்குச் சந்தையில் ஏற்பட்ட திடீர்ச் சரிவு, இவர்களைப் போண்டியாக்கித் தற்கொலைக்குத் தள்ளி விட்டது.

இது, தாராளமயமாக்கலின் இன்னொரு முகம். ஆந்திரத்து நெசவாளிகள் தாராளமயத்திற்குப் பலியானவர்கள். இவர்கள் தாராளமயத்தை நம்பி மோசம் போனவர்கள்.

மார்ச் முதல் வாரத்தில் ஏற்பட்ட இந்தப் பங்குச் சந்தைச் சரிவால், 1,15,889 கோடி ரூபாய் பொருளாதார இழப்பு ஏற்பட்டுள்ளதாக ''இந்தியா டுடே'' வார இதழ் மதிப்பிட்டுள்ளது. ''அவுட்லுக்'' இதழின் கணிப்புப் படி இந்த இழப்பு கிட்டத்தட்ட இரண்டு இலட்சம் கோடி ரூபாய். குறைந்தபட்சமாக எடுத்துக் கொண்டால் கூட, இந்த 1 இலட்சம் கோடி ரூபாய் எங்கே மாயமாய் மறைந்து விட்டது? தானாகக் காற்றில் கரைந்து போய்விடுதவதற்கு, இந்தப் பணமொன்றும் சூடக்கட்டி கிடையாதே!

எல்லாம் முடிந்த பிறகு, இந்தச் சரிவு பற்றி விசாரணை நடத்திய பங்கு பத்திர பரிமாற்ற வாரியம் (செபி) மும்பயிலும், கல்கத்தாவிலும் கேதான் பரீக் என்பவரின் தலைமையில் இயங்கிய பங்குச் சந்தை தரகர் கும்பல்; ஃபர்ஸ்ட் க்ளோபல் தலைமையில் மும்பய் பங்குச் சந்தையில் இயங்கிய ஆறு தரகு நிறுவனங்கள்; ''ஜீ'' டி.வி. எச்.எஃப்.சி.எல்., உள்ளிட்ட சில இந்திய நிறுவனங்கள்; சில அந்நிய முதலீட்டு நிறுவனங்கள்; சில இந்திய நிதி நிறுவனங்கள்; அரசு, கூட்டுறவு, தனியார் வங்கிகள் - இவர்கள்தான் பங்குச் சந்தை சரிவுக்குக் காரணம் எனக் குற்றஞ்சுமத்தியுள்ளது.

ஆனாலும், இவர்கள் ஒருவர் மீதும் நோகாமல் ஒரு இலட்ச கோடி ரூபாயைச் சுருட்டிக் கொண்டதாகக் குற்றஞ்சுமத்தப்படவில்லை; அப்படி குற்றஞ்சுமத்தவும் மாட்டார்கள். ஏனென்றால், பொது மக்களின் பணத்தைக் கொண்டு சூதாடுவதுதான் பங்குச் சந்தையின் அடிப்படையான விதி. மாறாக, சில நிதி நிறுவனங்களின், வங்கிகளின் பணத்தைச் சட்ட விரோதமாகப் பயன்படுத்தி, பங்குச் சந்தையில் சூதாடியிருக்கிறார்கள் என்று மட்டுமே இவர்கள் மீது குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது.

பொருளாதார இழப்பு ஒரு இலட்சம் கோடி, இரண்டு இலட்சம் கோடி எனக் கூறிவிட்டு, கேதான் பரீக் வெறும் 3,000 கோடி ரூபாயை மோசடி செய்ததாக விசாரணை நடக்கிறது. இதைப் படிக்கும் போது, 1992-இல் நடந்த பங்குச் சந்தை மோசடி நினைவுக்கு வர வேண்டும். அன்று அர்சத் மேத்தா; இன்று, அவனது சீடன் கேதான் பரீக். மோசடியில் ஈடுபட்ட ஆட்களும், நிறுவனங்களும்தான் மாறியிருக்கிறதேயொழிய, மோசடி நடந்த முறையில், வழியில் எந்த மாற்றமும் இல்லை என ''செபி'' தனது முதல் கட்ட விசாரணை அறிக்கையில் கூறியிருக்கிறது.

★ ★ ★

கேதான் பரீக்கின் பங்குச் சந்தை மோசடிக்கும், தகவல் தொழில்நுட்ப புரட்சிக்கும் நெருங்கிய தொடர்புண்டு. இது, மொட்டையாக வைக்கப்படும் குற்றச்சாட்டல்ல.

முதலாவ்தாக, ''ஜீ டெலிஃபிலிம்ஸ், குளோபல் டெலி சிஸ்டம்ஸ், இமாச்சல் ஃப்யூச்சரிஸ்டிக் கம்யூனிகேஷன்ஸ் (எச்.எஃப்.சி.எல்), சத்யம் கம்ப்யூட்டர்ஸ், அஃப்டேக் இன்போஸிஸ், எஸ்.எஸ்.ஐ.; சில்வர்லைன் டெக்னாலஜிஸ், பென்டாமீடியா, டி.எஸ்.க்யூ. சாப்ட்வேர்'' என்ற தகவல் தொழில் நுட்ப நிறுவனங்களின் பங்குகளைத்தான் கேதான் பரீக் கடந்த ஒன்றரை ஆண்டுகாலமாக வாங்கிக் குவித்து, அவற்றில் மட்டுமே வர்த்தகம் நடத்தி இந்நிறுவனங்களின் பங்குகளின் மதிப்பை செயற்கையாக ஊதிப் பெருக்கினான். இதன் காரணமாகவே இப்பங்குகள் அனைத்தும் பங்குச் சந்தை வட்டாரத்தில் ''கே-10 பங்குகள்'' எனச் செல்லமாக அழைக்கப்பட்டன.

இரண்டாவதாக, கேதான் பரீக் ஏதோ குருட்டாம் போக்கில், இந்தத் தகவல் தொழில் நுட்ப நிறுவனங்களின் பங்குகளை வாங்கிக் குவிக்கவில்லை. கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளாகவே, விவசாயம், தொழிலை விட, சேவைப் பொருளாதாரம் தான் (மென்பொருள் தயாரிப்பு, மின்னணு வர்த்தகம் போன்றவை) இனி நமது நாட்டுப் பொருளாதாரத்தின் மையமாக இருக்கும் எனப் பொருள்தார வல்லுநர்கள் தொடங்கி அரசாங்கம்

சி.பி.ஐ.யால் கைது செய்யப்பட்டு, விசாரணைக்கு அழைத்துச் செல்லப்படும் கேதான் பரீக் (நடுவில்).



வரைப் பலரும் புள்ளி விவரங் களை எடுத்துப் போட்டு அடித்துக் கூறி வருகின்றனர். இதற்குத் தகுந்தாற் போல, நூற்றுக் கணக்கான மென்பொருள் தயா ரிப்பு நிறுவனங்களும், ("டாட் காம்") இணையத் தள நிறுவனங் களும் சந்தையில் நுழைந்தன. சோறு, தண்ணியைக் கூட கம்ப்யூட்டரில் கொண்டு வந்து விடலாம் என்ற மாயையில் நடுத் தர வர்க்கத்தை இது அடித்து வீழ்த்தியது.

குறிப்பாக, பெங்களூரில் ஒரு வரிடம் இருக்கும் ரொக்கப் பணத்தை விட, அவரிடம் இருக்கும் "இன்போஸிஸ்" நிறு வனப் பங்குகளின் எண்ணிக் கையை வைத்து அவரின் வச தியைத் தீர்மானிக்கும் அளவிற்கு இந்த மோகம் பிடித்தாட்டியது. அரசாங் கத்தின் பிரச்சாரத்தையும், நடுத்தர வர்க்கத்தின் இந்த மோகத்தையும் தான் கேதான் பரீக் தனது ஊக வாணிபத்திற்கு ஆதாரமாகக் கொண்டான்.



பங்குச் சந்தை மோசடிக்குப் பலியான தரகன் வீரேந்திர குமார் அகர்வால்.

வெறும் பத்து ரூபாய் முக மதிப்பு கொண்டு இந்துஸ்தான் ஃப்யூச்சரிஸ்டிக் கம்யூனிகேஷன்ஸ் என்ற (கே-10) நிறுவனத்தின் பங்குகளின் விற்பனை மதிப்பு கடந்த ஆண்டு மார்ச்சில் 1692 ரூபா யாக உயர்ந்தது. இது போலவே கேதான் பரீக்கின் பிடியில் இருந்த நிறுவனங்களின் பங்குகள் அனைத்தும், அவற்றின் முக மதிப்பை விட 100 மடங்குக்கு அதிகமான விற்பனை மதிப்பைக் கொண்டிருந்தன. "கே-10" நிறுவனப் பங்குகளின் விற்பனை மதிப்பை ஊதிப் பெருக்குவதற்காகவே, "ஆர்.பி.அண்ட் சி. இண்டர்நேஷனல்", "கிரெடிட் சுயிஸ்", "டூஷ் இண்டர்நேஷனல் டிரஸ்ட்", "அக்ரிகோல் லஸார்ட்" என்ற நான்கு அந்நிய நிதி நிறுவனங்கள், கேதான் பரீக்குடன் சேர்ந்து கொண்டு பங்கு விலையில் தில்லு முல்லு செய்தன; இதற்காக அந்நிறுவனங்கள் 1,47,000 கோடி ரூபாயை கேதான் பரீக் நடத்திய ஊக வாணிபத்தில் முத லீடு செய்தன என "செபி"யின் விசார ணையில் அம்பலமாகியுள்ளது.

இந்த நான்கு அந்நிய நிதி நிறுவ னங்களும் தங்களின் இலாபத்தின் மீது அரசு விதிக்கும் வரியைக் கட்டாமல் ஏய்ப்பதற்காக, மொரி ஷியஸ் தீவில் பதிவு செய்யப்பட்ட தங்களது துணை நிறுவனங்களின் பெயரில்தான் முதலீடு செய்து சூதாட் டத்தை நடத்தியுள்ளன. பங்குச் சந்தை மோசடியில் ஈடுபட்டதாக இந்த் நான்கு நிறுவனங்களின் மீதும் குற்றஞ்சுமத்தும் அரசாங்கம், அந்நிறு வனங்கள் வரி ஏய்ப்பு செய்ததை விசாரிக்க முடியாது. ஏன்னென்றால், மொரீஷியஸில் பதிவு செய்யப்பட்ட அந்நிய நிதி நிறுவனங்கள், இந்தியாவில் செய்யும் முதலீட்டிற்கு இலாப வரி கட்ட வேண்டியதில்லை என இந்த வரி ஏய்ப்பைச் சட்டபூர்வ சலுகையாகக் கொடுத்ததே பா.ஜ.க. கூட்டணி அரசாங்கம்தான்.

மேலும், இந்த நான்கு அந்நிய நிதி நிறு வனங்களும், தாங்கள் யாருக்குப் பங்கு களை வாங்குகிறோம் என்பதை வெளியே சொல்லாமல் இருப்பதற்காக, அரசாங்கம் கொடுத்துள்ள "பி.என்." என்ற சலுகையைப் பயன்படுத்தி, பங்குச் சந்தையில் சூதாடியுள் ளன. இதனால், இந்தியாவைச் சேர்ந்த முத லாளிகளே தங்களின் கருப்புப் பணத்தை இந்த அந்நிய நிதி நிறுவனங்களின் மூலம் முதலீடு செய்து, சூதாடி, கொள்ளை இலாபம் அடித்திருக்கலாம் எனக் குற்றஞ் சுமத்துகி றது, "செபி". இதன்படி பார்த்தால், இது வெறும் மோசடி மட்டுமல்ல; சொந்த நாட்டையே கொள்ளையிடும் அயோக்கியத்தனமாகும். இந்த அயோக்கியத்தனத்தை அர சாங்கம் சலுகைகள் வழங்கி சட்டப்பூர்வமாக்கிவிட்டது.

★ ★ ★

சென்ற வருடத்தின் மத்தியில் தகவல் தொழில்நுட்ப பங்கு களில் மட்டுமே வர்த்தகம் நடத்தும் அமெரிக்காவிலுள்ள "நாஸ்டாக்" பங்குச் சந்தை சரிந்த தையடுத்து, இந்தியாவிலும் பல இணையத்தள நிறுவனங்கள் மூடப்பட்டதோடு, தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களின் பங்கு விலையும் சரியத் தொடங் கியது. ஆனால், கேதான் பரீக் கும்பலோ, இச்சரிவைத் தூக்கி நிறுத்தும் முயற்சியில் இறங்கிய தோடு, மைய அரசின் பட்ஜெட் டுக்குப் பின் தங்கள் பங்குகளின் விலை உயரும் என நம்பிக் காத்திருந்தன. ஆனாலும் கேதான் பரீக்கின் கனவு நனவாக வில்லை.

பங்குச் சந்தைக் காளையான கேதான் பரீக்குக்கு எதிராக மும்பய் பங்குச் சந்தையைச் சேர்ந்த சில தரகர்கள் கூட்டாகச் சேர்ந்து கொண்டு குழிபறிக்கும் வேலையில் இறங்கினர். இந்தக் குழிபறிக்கும் வேலைக்கு மும்பய் பங்குச் சந்தையின் இயக்குனராக இருந்த ஆனந்த் ரதி உடந்தையாக இருந்தார். ஃபர்ஸ்ட் க்ளோபல் என்ற தரகு நிறுவனம் க்ளோபல் டெலி நிறுவனத்தின் 89,350 பங்குகளையும், எச்.எஃப்.சி.எல். நிறுவனத்தின் 2,12,876 பங்குகளையும் ஒரே சமயத்தில் விற்றுத் தீர்த்தது. இதே போல் கே-10 பங்குகளான சத்யம், டி.எஸ்.க்யூ, சாப்ட்வேர்ஸ், ஜீ டெலி பிலிம்ஸ் நிறுவனங்களின் பங்குகளையும் கொத்து கொத்தாக விற்றிருக்கிறது.



பங்குச் சந்தை சூதாட்டத்தில் தனது சேமிப்பு அனைத்தையும் பறிகொடுத்துவிட்ட ஓய்வு பெற்ற அரசு அதிகாரி பிசாரதி.

"ஃபர்ஸ்ட் க்ளோபல் 2001 சனவரி முதல் மார்ச் வரை பங்குகளை மொத்த மாக விற்பதையே நோக்கமாகக் கொண்டு செயல்பட்டதாக" செபி குற்றஞ் சுமத்தியுள்ளது. நிர்மல் பாங்க், சைலேஷ் ஷா குரூப் உள்ளிட்டு ஆறு தரகு நிறுவனங்கள் இந்தக் குழிபறிக்கும் வேலையில் ஃபர்ஸ்ட் க்ளோபலுக்குத் துணையாக இருந்துள்ளன.

இந்தக் குழிபறிக்கும் வேலையால் கே-10 பங்குகளின் விற்பனை மதிப்பு சரியத் தொடங்கியது. இந்தச் சரிவைத் தடுத்து நிறுத்த க்ளோபல் டிரஸ்டு வங்கி என்ற தனியார் வங்கி, ஜீ டி.வி., மற்றும் அதன் துணை நிறுவனமான சிட்டி கேபிள் நிறுவனத்தின் மூலம் கேதான் பரீக்குக்கு 200 கோடி ரூபாய் கடன் கொடுத்திருக்கிறது. இந்தக் கட னுக்கு அனுமதி வழங்குவது

www.padippakam.com

தொடங்கி பணப் பட்டுவாடா வரை அனைத்தும் ஒரே நாளில் நடத்து முடிந்தன.

இந்த ஆண்டு சனவரி தொடங்கி மார்ச் முடிய ஜீ குழு நிறுவனம் கேதான் பரீக்கிற்கு கடனாகக் கொடுத்த தொகை 340 கோடி ரூபாய். இதுபோல, எச்.எஃப்.சி.எல். நிறுவனம் 425 கோடி ரூபாய் கடனாகக் கொடுத்தது.

க்ளோபல் டிரஸ்டு வங்கி 256 கோடி ரூபாயும், பஞ்சாப் வங்கி, மற்றும் சென்சூரியன், ஐ.சி.ஐ.சி.ஐ. ஆகிய மூன்று வங்கிகள் இணைந்து 65 கோடி ரூபாயும், குஜராத்தில் இயங்கி வரும் கூட்டுறவு வங்கியான மாதவ்புரா வர்த்தகக் கூட்டுறவு வங்கி 798 கோடி ரூபாயும் கடன் கொடுத்துள்ளன. இந்தக் கூட்டுறவு வங்கி, பாங்க் ஆஃப் இந்தியா என்ற பொதுத்துறை வங்கியின் மூலம் கேதான் பரீக்குக்கு பங்குச் சந்தையில் சூதாட 660 கோடி ரூபாய் கடன் கொடுத்திருக்கிறது. இந்தக் கடனைப் பெற, கேதான் பரீக் அடமானமாக வைத்த பங்குகள் அனைத்தும் இன்று செல்லாக் காசாகி விட்டன.

பங்குச் சந்தை தரகனான கேதான் பரீக், தனியார் வங்கியான க்ளோபல் டிரஸ்ட் வங்கி, பொதுத்துறை நிறுவனமான யூனிட் டிரஸ்ட் ஆப் இந்தியா இவர்களுக்கு இடையேயான உறவு அலாதியானது. கேதான் பரீக் மூலம் மும்பய் பங்குச் சந்தையில் கடந்த வருடம் நவம்பர் 7 அன்று 53 இலட்சம் க்ளோபல் டிரஸ்ட் வங்கிப் பங்குகள் விற்பனையாயின. அவ்வங்கியின் பங்குகளின் விற்பனை மதிப்பு 59 ரூபாயில் இருந்து 113 ரூபாயாக உயர்ந்தது. இதையடுத்து, க்ளோபல் டிரஸ்டு வங்கி, யூனிட் டிரஸ்டு ஆஃப் இந்தியாவிற்குச் சொந்தமான யு.டி.ஐ. வங்கியுடன் இணையப் போகும் திட்டம் அறிவிக்கப்பட்டது. இந்த நன்றிக் கடனைத் தீர்ப்பதற்காக, க்ளோபல் டிரஸ்டு வங்கி நெருக்கடியான நேரத்தில் கேதான் பரீக்குக்குக் கடன் கொடுத்து உதவியிருக்கிறது.

இந்த நன்றிக் கடனைத் தீர்க்கும் விசயத்தில், யூனிட் டிரஸ்ட் ஆஃப் இந்தியாவும் சளைத்ததாகத் தெரியவில்லை. தனியார் பரஸ்பர நிதி நிறுவனங்கள் ஜீ டெலிஃபிலிம்ஸ் பங்குகளை விற்றுக் கொண்டிருந்த நேரத்தில், யூனிட் டிரஸ்ட் ஆஃப் இந்தியா ஒரு பங்குக்கு 500 ரூபாய் விலை கொடுத்து, அந்நிறுவனத்தின் 1.5 கோடி பங்குகளை விலைக்கு வாங்கியது. எச்.எஃப்.சி.எல். பங்கு சரிந்து கொண்டிருந்த பொழுது, அந்நிறுவனத்தின் கடன் பத்திரங்களில் 50 கோடி ரூபாய் மூலதனமிட்டது.

யூனிட் டிரஸ்டு ஆஃப் இந்தியா, கே-10 பங்குகளில் கடந்த ஆண்டு ஜூன் முடிய போட்ட மூலதனம் 4669.5 கோடி ரூபாய்; இன்று அதன் வசமுள்ள அப்பங்குகளின் மதிப்பு 1,054 கோடி ரூபாய் தான்.

இந்தப் பங்கு சந்தை மோசடி தாராளமயப் பொருளாதாரத்தில் சந்தை தான் பொருளில் / சரக்கின் விலையைத் தீர்மானிக்கிறது என்ற புளுகுணிப் பிரச்சாரத்தை அம்பலப்படுத்தி, சந்தையை முதலாளிகள்தான் தீர்மானிக்கிறார்கள் என்ற உண்மையைப் பளிச்சென எடுத்துக் காட்டி விட்டது. அந்நிய நிதி நிறுவனங்களும், இந்திய முதலாளிகளும் சேர்ந்து நடத்திய இம்மோசடியில், இலட்சக்கணக்கான நடுத்தர வர்க்கத்தினர் போண்டியாகிப் போனதோடு, கல்கத்தா பங்குச் சந்தையும் திவாலாகி விடும் அபாயம் ஏற்பட்டது. இப்பொழுது, கேதான் பரீக் கைது செய்யப்பட்டு, இம்மோசடியை விசாரிக்க நாடாளுமன்ற விசாரணைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.


★ ★ ★

இந்த ஊழல் அம்பலமான பிறகு, ''செபி, பங்குச் சந்தையைத் தீவிரமாகக் கண்காணிக்க வேண்டும்; அதன் விதிகளைக் கடுமையாக்க வேண்டும்'' என்று பலரும் பலவிதமான ஆலோசனைகளை அள்ளி வீசுகிறார்கள். அர்சத் மேத்தா ஊழல் நடந்த பிறகு, நாடாளுமன்றக் கூட்டு கமிட்டியெல்லாம் போட்டு, விசாரணை நடத்தி, ஆய்வு செய்து, பங்குச் சந்தை வியாபாரத்தைக் கண்காணிக்கும் செபியின் விதிகளைக் கடுமையாக்கிவிட்டதாகத்தான் கூறினார்கள். ஆனால், அதன் பிறகு இதுவரை சிறிதும், பெரிதுமாக 12 ஊழல்கள் பங்குச் சந்தை வியாபாரத்தில் நடந்துள்ளன. ஒன்பது ஆண்டுகள் ஆன பின்னும் கூட, இந்திய நீதிமன்றங்களால் அர்சத் மேத்தாவைத் தண்டிக்க முடியவில்லை. அப்படியிருக்கையில், கைது செய்யப்பட்டுள்ள கேதான் பரீக்குக்கு ஆயுள் தண்டனையா கிடைத்து விடப் போகிறது?

1998-ஆம் ஆண்டு அர்சத் மேத்தாவுடன் கூட்டுச் சேர்ந்து, தனது நிறுவனத்தின் பங்கு மதிப்பை ஊதிப் பெருக்கியது ஸ்டெர்லைட் நிறுவனம்; அதை விசாரணை செய்த செபி, ஸ்டெர்லைட் இரண்டு ஆண்டுகளுக்கு பங்குச் சந்தைக்குள்ளேயே நுழையக் கூடாது எனத் தடை விதித்தது. ஆனால், பா.ஜ.க. கூட்டணி அரசு, அந்த தண்டிக்கப்பட்ட ஸ்டெர்லைட் நிறுவனத்திற்கு தான் ''பால்கோ''வின் 51 சதவீதப் பங்குகளை விற்றது. தன் மீது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்காவிட்டால், நடப்பதே வேறு என மிரட்டிக் கொண்டு திரிகிறது, ஸ்டெர்லைட்.

கேதான் பரீக், ஊக வியாபாரம் நடத்துவதற்கு வசதியாக இருந்த, பின் தேதியிட்டு பணம் கொடுப்பதாக ஒப்புக் கொண்டு பங்கு வியாபாரம் செய்யும் முறையை (forward trading) ஜூலை 2 முதல் தடை செய்வதாக, ''செபி'' அறிவித்துள்ளது இந்த அறிவிப்பு வெளிவந்தவுடனேயே, கல்கத்தா பங்குச் சந்தை தரகர்கள், இதற்கு, கல்கத்தா பங்குச் சந்தையையே இழுத்து மூடி விடலாம் எனக் கதறி விட்டனர். அதாவது, ஊக வாணிபம் நடத்துவதற்கு வழியில்லை என்றால், பங்குச் சந்தை எதற்கு என்பதுதான் இதற்குப் பொருள்.

தாராளமயத்தின் தொடக்கத்தில் தேக்கு மரம் வளர்க்கிறோம், பன்றி வளர்க்கிறோம் எனக் கூறிக் கொண்டு, பங்குச் சந்தையில் நுழைந்த 653 மோசடி நிறுவனங்கள் 2,563 கோடி ரூபாயைச் சுருட்டிக் கொண்டன; மோசடி ஃபைனான்ஸ் கம்பெனிகள் 1,063 கோடி ரூபாயை விழுங்கின. இப்பொழுது 170 இணையத் தள நிறுவனங்கள் பங்குச் சந்தையில், தகவல் தொழில் நுட்ப பங்குகளில் நடந்த ஊக வாணிபத்தைப் பயன்படுத்திக் கொண்டு 2,111 கோடி ரூபாயை ஏப்பம் விட்டுள்ளன. இந்த மோசடிகள் அம்பலமாகாத வரை, இந்த ஊக வாணிபத்தைத்தான் தாராளமயத்தின் வெற்றியாக அரசாங்கமும், செபியும் காட்டின.



பங்குச் சந்தை மோசடியை விசாரிக்க அமைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற விசாரணைக் குழு: கண் துடைப்பு நாடகம்.

நடுத்தர வர்க்கத்தின் சேமிப்பு வங்கிகளுக்குப் போகக் கூடாது; பங்குச் சந்தைக்குத் திரும்ப வேண்டும் என்பதால் தான், வங்கியின் சேமிப்பு வட்டி வீதமும், பங்குகளின் லாப ஈவுத் தொகை மீது விதிக்கப்படும் வரியும் குறைக்கப்படுகின்றன. அந்நிய நிதி நிறுவனங்களின் மூலதனம் இந்தியப் பங்குச் சந்தையில் பாய்வதற்கு வசதியாக சலுகைகள் வாரி வழங்கப்படுகின்றன. இப்படி தாராளமயத்தின் மூலம் பங்குச் சந்தையின் ஊக வாணிபத்தை ஊட்டி வளர்த்துக் கொண்டே, அதை நாணயமாக மாற்றிவிட முடியும் எனக் கூறுவதை விட வேறு பித்தலாட்டத்தனம் இருக்க முடியுமா?

● சுப்பு

www.padippakam.com

# பரவுகிறது பட்டினிச் சாவு தொடங்கட்டும் உணவுக் கலகம்

பசிக்கு அழும் பிள்ளையைப் பாறையில் அறைந்து கொல்கிற கொடூரம் எங்காவது நடக்குமா? நடந்துள்ளது மத்தியப் பிரதேசத்தில்.

ஹசானாபாத் மாவட்டம் மால்னி கிராமத்தில் வசிக்கும் ராம்பால் நான்கு ஏக்கர் நிலத்துக்குச் சொந்தக்காரர். நிலமிருந்தென்ன? கடந்த இரண்டு அறுவடையும் வறட்சியால் பொய்த்துப் போனது. கூலி வேலைக்குப் போனார். வறட்சியைவிடக் கொடியதாய் வேலையின்மை வீதிக்குத் துரத்தியது. ராம்பால், மனைவி மற்றும் மூன்று குழந்தைகளோடு செய்வதறியாது திகைத்துப் போனார். இரண்டு நாள் கடும் பட்டினியோடு ஊர் கோயிலில் விழுந்து கிடந்த ராம்பால் வீட்டுக்கு வரும்போது குழந்தைகள் பசியால் அழுது கொண்டிருந்தன. மனைவியும் வீட்டிலில்லை. எரிச்சலடைந்த ராம்பால் ஆறு மாதமேயான கைக் குழந்தையைத் தன் மகளிடமிருந்து பிடுங்கி வீசியடித்தார். பாறையில் மோதி அக் குழந்தை செத்துப் போனது.

ஹசானாபாத் மாவட்டம் இந்த ஆண்டு சாதனை இலக்காக 12 இலட்சம் டன் கோதுமையை உற்பத்தி செய்து இருப்பு வைத்துள்ளது. மால்னியிலிருந்து நாற்பது கிலோ மீட்டர் தள்ளியுள்ள இடாரசி என்ற ஊரில் இந்திய உணவுக் கழகம் கோதுமையால் நிரம்பி வழிகிறது. ஆனால், மால்னி போன்ற பல கிராமங்களில் உணவுப் பஞ்சம். பேயாட்டம் போடுகிறது. இக்கிராமத்தில் உள்ள 350 பழங்குடியினர் மெல்ல மெல்லப் பட்டினியால் செத்துக் கொண்டிருப்பதற்கு எப்பொறுப்பும் எடுத்துக் கொள்ளாத அரசு, ராம்பாலைக் கொலை வழக்கில் கைது செய்துள்ளது.

★ கொஞ்சம் எலும்பும் அதை இழுத்துத் தைத்தாற்போல் கொஞ்சம் சதையும் கொண்ட பிண்டங்களை மனிதக் குழந்தைகளாக நினைத்துப் பார்க்க முடியுமா? இருக்கிறார்கள் மகாராஷ்டிராவில்.

நந்தர்புர் மாவட்டத்தில் நிலவும் கடும் வறட்சி மற்றும் பஞ்சத்தால் பிறக்கும் குழந்தைகள் இயல்பாய் இருக்க வேண்டியதைவிட மூன்று மடங்கு எடை குறைவாகப் பிறக்கின்றன. அதில் பல குழந்தைகள் பட்டினியாலேயே இறந்தும் விடுகின்றன. ஆரம்ப சுகாதார மையங்களில் தாய் - சேய் நலத்திட்டங்கள் பல பெயரளவில் இருந்த போதிலும், அவற்றால் எந்தப் பயனுமில்லை.

காட்லி கிராமத்தில் வசிப்பவர் கட்யா வால்லி. விவசாயக் கூலியான வால்லி வறட்சியால் வேலையிழந்தார். அரசின் வேலை உத்திரவாத திட்டத்தின் கீழ் சாலைக்குப் போடும் கற்களை உடைக்கும் வேலை தரப்பட்டது. அங்கே ஒப்பந்தக்காரர் வைத்ததுதான் சட்டம். அவர் அரசு நிர்ணயித்துள்ள கூலியைக் கொடுக்காமல் சுருட்டிக் கொள்வதும், எதிர்த்துக் கேட்டால் வெளியேற்றுவதும் நடந்தாலும், இந்த வேலைக்காகவே தன் சொந்த கிராமத்தைவிட்டு வால்லி நாடோடியாக மாற வேண்டியதாயிற்று. இதில் தனது மனைவி, மூன்று குழந்தைகளையும் பராமரிப்பதற்குத் திணறிக் கொண்டிருக்கும்போது அக்குழந்தைகள் மெலிந்து எலும்பும் தோலுமாய் இருப்பதைச் சகிக்காமல் அருகிலுள்ள அரசு மருத்துவமனையில் சேர்த்தார். சத்துணவு பற்றாக்குறை என்று மருத்துவர் சொல்வதைக் கேட்டு கட்யா வால்லி வெறுத்துப் போனார். சாதாரண உணவுக்கே வழியில்லாத போது சத்துணவுக்கு எங்கே போவது? பிழைப்புக்காக நாடோடியாய் அலையும்போது முறையாக மருத்துவமனையில் தங்கி உடம்பைத் தேற்றுவதுதான் நடக்கும் காரியமா?

எழுபது சதம் பழங்குடியினர் வசிக்கும் காட்லி கிராமத்தில் கிடைக்கும் அதிர்ச்சியூட்டும் புள்ளி விவரப்படி, கடந்த ஏப்ரல் - 2000 முதல் மார்ச் - 2001 வரையிலான ஒரு ஆண்டில் மட்டும் 1385 குழந்தைகள் இறந்துள்ளன. இதில் 783 குழந்தைகள் ஒரு வயதுக்கு உட்பட்டவை. அரசு மருத்துவமனையின் கணக்கு மட்டுமே இவ்வளவு எனில் அதற்குக் கூட வழியில்லாமல் போனவர்கள் எத்தனை பேரோ? நோய் தாக்கியிருக்கிறது; ஊட்டச் சத்துள்ள உணவு கொடுக்க வேண்டும் என்று திடீரென்று விழித்துக் கொண்டது போல் பத்திரிக்கைகள் ஆலோசனை சொல்லக் கிளம்பி விட்டன. ஆனால், கொத்துக் கொத்தாய் நிகழும் இப்பட்டினிச் சாவுகள், மேன்மைமிகு அரசாங்கம் நிகழ்த்தும் படுகொலைகள்

**எடை தட்டில் இட்டுப் பார்க்கவும் எதுவுமில்லாமல், இரண்டு வயதான கத்தியா வால்வி சூம்பிக் கிடப்பது, வறட்சியின் விளைவு அல்ல; ஆட்சியாளர்களின் பாராமுகத்தின் விளைவே.**



www.padippakam.com

என்று அவை ஒருபோதும் சொல்வதில்லை.

★ குடும்பத்தோடு சென்று கடுமையாக உழைத்துவிட்டு ஊருக்குத் திரும்பும்போது கந்து வட்டிக் கடன் வாங்கும் அவலத்தை யாரால் சீரணிக்க முடியும்? முடிகிறது மகாராஷ்டிராவில்.

மும்பய்க்கு அருகிலுள்ள தானே மாவட்டத்தில் வசிக்கக்கூடியவர் கோபால் சங்கர் போகி. அவரும் அவர் மனைவியும் வேலை உத்திரவாத திட்டத்தின் கீழ் பெரிய பாறைகளை சாலை போட பயன்படுத்தும் சிறு சிறு கற்களாக உடைக்கும் வேலை செய்கின்றனர். இதற்காக ரூ. 250 கொடுத்து பெரிய சுத்தியலை போகியும், ரூ. 30 கொடுத்த சிறிய சுத்தியலை அவர் மனைவியும் வாங்கினர். வேலை செய்யும் இடம் இருக்கும் இடத்திலிருந்து 11 கி.மீ. தூரம் உள்ளதால் போக்குவரத்துச் செலவுக்கே ரூ. 15 போய்விடுகிறது. எனவே போகியைப் போன்ற பல குடும்பங்கள் குழந்தைகளையும், பொருட்களையும் மூட்டைக் கட்டிக் கொண்டு வேலை செய்யும் இடத்திலேயே திறந்த வெளியில் தங்குகின்றனர். ஒதுங்கவும் மரங்கள் இல்லாத அந்த இடத்தில் குடிக்க தண்ணீர் மட்டுமே குறைந்த அளவிற்கு கிடைக்கும்.



வேலை உத்தரவாதத் திட்டத்தின் கீழ் கல்லுடைக்கும் கோபால் சங்கர் போகி: வீதிக்குத் துரத்தப்பட்ட வாழ்க்கை.

பதினைந்து நாட்களுக்கு தினம் எட்டு மணி நேரம் வேலை என்றுதான் ஒப்பந்தம் போடப்பட்டது. ஆனால், நடைமுறையோ வேறாக இருக்கிறது. தினமும் காலை எட்டு மணியிலிருந்து இரவு எட்டு மணி வரை ஓய்வின்றி உழைக்க வேண்டும். 15 நாள் வேலைக்குப் பிறகு கணவன், மனைவி கொண்ட ஒரு குடும்பத்துக்கு கூலி ரூ. 2260-ம், 15 கிலோ அரிசி மற்றும் 15 கிலோ கோதுமையும் வழங்கப்படும். அதன் பிறகு? பிழைக்க வழியில்லை. 1,50,000 மக்கள் பாதிக்கப்பட்டிருக்கும்போது அரசின் வேலை உத்திரவாத திட்டமோ வெறும் 36,000 பேரை இலக்கு வைத்து மட்டுமே செயல்படுத்தப்படுகிறது. சுத்தியல் வாங்கியதிலிருந்து 15 நாள் சாப்பிட்டது போக ஊருக்குத் திரும்பும் போது வேறு வழியில்லாமல் ரூ. 2000 கடன் வாங்குகிறார் போகி. ஐம்பது சதம் கந்து வட்டிக்கு பெற்ற கடனை அடைக்கும் வழியேதுமில்லாமல் திணறும் போகியைப் போல பல குடும்பங்கள் தவிக்கின்றன. ஆக, பட்டினி கிடந்து சாக வேண்டும்; இல்லையெனில், ஒப்பந்தக்காரனிடம் கொத்தடிமையாய், கந்து வட்டிக் கடனாளியாய்தான் இருக்க வேண்டுமென்பதே இவர்களின் நிலை.

★ ★ ★

“இந்தியா வல்லராசிக் கொண்டிருக்கிறது. முதலில் பொக்ரானில் அணுகுண்டு சோதனை நடத்தியதும், இப்போது ஜி.எஸ்.எல்.வி. ராக்கெட் தயாரித்து ஏவியதும் மகத்தான சாதனைகள். அது மட்டுமா? தகவல் தொழில் நுட்பத்தில் கிராமப்புற விவசாயிகளுக்குக் கூட கணிணியைக் கொண்டு செல்லப் போகிறோம்'' என்றெல்லாம் ஆட்சியாளர்களும் அவர்களது விசுவாசமான பத்திரிகைகளும், எடுபிடி ஊடகங்களும் பிரச்சாரம் செய்கின்றன. பெரும் முதலாளிகள், அதிகாரிகள், அரசியல்வாதிகள் போன்ற சில இலட்சம் நபர்களே 'இந்தியா' என்ற அவை கருதுகின்றன. ஆனால், நாட்டின் பெரும்பான்மை மக்கள் பஞ்சத்தால், வறட்சியால், வேலையின்மையால் செத்துக் கொண்டிருப்பதை இவர்கள் யாரும் பேசுவதில்லை. இந்த மௌனம் வக்கிரமானது.

மத்தியப் பிரதேசம், குஜராத், ஒரிசா, இர்ராசஸ்தான், மகாராஷ்டிரா ஆகிய வட மாநிலங்களில் வழக்கம் போலவே இந்த ஆண்டும் வறட்சி நிலவுகிறது. ஆனால், முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு இப்போது பட்டினிச் சாவுகள் அதிகரித்துள்ளன.

குறிப்பிட்ட பருவத்தில் மழை பெய்யாததாலும், சந்தையில் விலையில்லாததாலும் விவசாயத்தில் வெறும் இருபத்தைந்து சதமே விளைச்சல் நடந்தது. மகாராஷ்டிராவில் நிலத்தடி நீர்மட்டம் 200 அடியிலிருந்து 400 அடிவரை கீழிறங்கிவிட்டது. ஆனாலும், இப்போது நிகழ்கிற இப்பட்டினிச் சாவுகள் இந்த இயற்கையான வறட்சியால் மட்டுமே உண்டாகவில்லை. மாறாக செயற்கையாக மக்களின் மேல் திணிக்கப்பட்டுள்ளது.

இந்திய உணவுக் கழகக் கிடங்கில் குவிந்து கிடக்கும் உணவுப் பொருள்: அரசின் சட்டப்பூர்வ பதுக்கல்.



கிராமங்களில் வேலை கிடைக்காதவர்கள், நகரத்துக்குப் போகலாம். அங்கும் வாய்ப்பில்லையெனில் அடுத்த மாநிலத்தில் போய் பஞ்சம் பிழைக்கலாம். இங்கோ ஐந்து மாநிலங்களிலும் வறட்சி, வேலையின்மை. அதனால், சந்தையில் உணவுப் பொருட்கள் குவிந்துள்ள போதிலும் விலை கொடுத்து வாங்கும் சக்தி மக்களிடம்

தொடர்ச்சி 26-ஆம் பக்கம்


படிப்பகம்

www.padippakam.com

## இந்தியா — வங்கதேச எல்லை மோதல்கள்:

# கிழக்கிலும் தாழ்நிலைப் போர்?

கடந்த ஏப்ரல் மாதம் 18-ஆம் தேதியன்று இந்திய எல்லைப் பாதுகாப்புப் படையினர் 16 பேரை, வங்கதேச எல்லைக் காவற்படையினர் சித்திரவதை செய்து சுட்டுக் கொன்று, சிதைந்த நிலையில் பிணங்களை ஒப்படைத்ததைக் கண்டு இந்திய ஆட்சியாளர்கள் அதிர்ச்சியில் உறைந்து போயுள்ளனர். செத்த மாட்டைப் போல, கொல்லப்பட்ட இந்தியப் படை வீரர்களின் சடலங்களைக் கயிறு கட்டி வங்கதேச கிராம மக்கள் தூக்கி வரும் புகைப்படங்களை வெளியிட்டு, "இப்படி மனிதாபிமானமின்றி நடந்து கொள்வது நியாயமா? இப்படி அவமானப்படுத்தலாமா?" என்று தேசியப் பத்திரிகைகள் கண்ணீர் விட்டுப் புலம்புகின்றன. "இந்தியாவை ஒப்பிடும்போது வங்கதேசம் ஒரு சுண்டைக்காய் நாடு; அதன் தலையில் ஒரு குட்டு வைத்து அடக்க வேண்டும்; நாம் சமாதானத்தை நேசிப்பவர்கள் என்பதற்காக இப்படி மெத்தனமாக இருக்கக் கூடாது. அதன் அத்துமீறிய செயலுக்குப் பழிக்குப் பழி வாங்க வேண்டும்" என்று துக்ளக், இந்தியா டுடே முதலான பத்திரிகைகள் குறுகிய தேசிய வெறியைக் கிளறிவிட்டுக் கூச்சலிடுகின்றன.

இந்திய எல்லைப் பாதுகாப்புப் படையினரை இப்படிக் குரூரமாகச் சித்திரவதை செய்து சுட்டுக் கொன்று அழுகிய நிலையில் பிணங்களை ஒப்படைக்குமளவுக்கு நட்பு நாடான வங்கதேசம் நடந்து கொள்ளக் காரணம் என்ன? இது வங்கதேச இராணுவத்தின் அத்துமீறிய வெறியாட்டமா? அல்லது இந்தியாவின் வட்டார மேலாதிக்க அட்டூழியங்களின் எதிர் விளைவா?

வங்கதேச எல்லையில் இந்தியாவின் மேகாலயா மாநில எல்லையோரத்தில் உள்ளது பியர்திவா கிராமம். இது வங்க தேசப் போரின் போது 1971-இல் இந்திய இராணுவம் முகாம் அமைத்துப் பயன்படுத்திய வங்கதேசக் கிராமம் ஆகும். போர் முடிந்து பாகிஸ்தானிடமிருந்து துண்டாடப்பட்டு வங்கதேசம் உருவான பின்னரும், இந்த முகாமை விட்டு வெளியேறாமல் இந்திய இராணுவம் தொடர்ந்து பயன்படுத்தி வந்தது. இதை வங்கதேச கிராம மக்கள் தொடர்ந்து எதிர்த்து வந்தனர். இந்நிலையில் கடந்த ஏப்ரல் மாதத்தில் இந்த முகாமை மேகாலயா மாநிலத்துடன் இணைக்கும் தார்ச் சாலைகளை இந்திய எல்லைப் பாதுகாப்புப் படை அமைத்தது. இதற்கு வங்கதேச அரசு ஆட்சேபம் தெரிவித்தது.

வங்கதேச வெளியுறவுச் செயலரான சையத் மௌஜம் அலி, "1971-லிருந்து இந்திய எல்லைப் பாதுகாப்புப் படை பியார்திவா பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது. பல முறை இந்திய அரசிடம் முறையிட்ட போதிலும் இன்று வரை இராணுவத்தினர் வெளியேறவில்லை. இப்போது இந்தப் பகுதியை இந்தியாவுடன் இணைக்க சாலைகள் போடப்படுகின்றன. எல்லைக் கோட்டு பகுதியில் சாலைகள் அமைப்பதோ, கட்டிடங்கள் எழுப்புவதோ சர்வதேச விதிகளுக்கு எதிரானது" என்று வெளிப்படையாகவே குற்றம் சாட்டினார்.

அதைத் தொடர்ந்து ஏப்ரல் 15-ஆம் தேதியன்று நள்ளிரவில் வங்கதேச எல்லைக் காவற்படையினர் பியார்திவாவை முற்றுகையிட்டு இந்தியப் படையினரை விரட்டியடித்து விட்டு முகாமைக் கைப்பற்றிக் கொண்டனர். உள்ளூர் வங்கதேச மக்களின் ஆதரவு - பங்கேற்புடன் நடந்த இந்த அதிரடி நடவடிக்கைக்குப் பின், வங்கதேசப் படையினர் இப்பகுதியில் பதுங்குக் குழிகள் - தடுப்பு அரண்களை அமைக்கத் தொடங்கினர்.

பியார்திவா வங்க தேசத்துக்குச் சொந்தமான பகுதி; அங்கு இந்தியப் படைகள் 30 ஆண்டுகளாக முகாம் அமைத்துக் கொண்டு வெளியேறாமல் கொட்டமடித்தது, வங்கதேசத்தின் சுயாதிபத்திய உரிமையை மறுக்கும் அத்துமீறிய செயல். ஒரு சுண்டைக்காய் நாடு நம்மை எதிர்த்து என்ன செய்துவிட முடியும் என்ற ஆணவத்தில் அத்துமீறி சாலை அமைத்தது, இந்தியாவின் மேலாதிக்கச் செயல். அதை எதிர்த்து வங்கதேச எல்லைக் காவற்படையினர் தமது பாரம்பரிய பகுதியை மீட்டதும், இந்திய இராணுவத்தை விரட்டியடித்ததும் நியாயமான நடவடிக்கைதான்.

ஆனால், வட்டார மேலாதிக்கவாதிகளான இந்திய ஆட்சியாளர்கள், யானை பலமிக்க நம்மை ஒரு சுண்டெலி எதிர்ப்பதா என்ற வெறியோடு, இதற்குப் பதிலடி கொடுத்துப் பழிவாங்கத் துடித்தனர். வங்கதேச எல்லை விளிம்பு இந்தியப் பகுதியில் இருக்கும் இடத்தை இந்திய எல்லைப் பாதுகாப்புப் படை கைப்பற்றுவது என அதிரடித் திட்டம் வகுக்கப்பட்டது. வெளியுறவுத் துறை அமைச்சகத்துக்கோ, இராணுவத் தலைமையகத்துக்கோ, மைய அரசின் அமைச்சரவைக்கோ தெரிவிக்காமல், அத்வானியின் பொறுப்பிலுள்ள உள்துறை அமைச்சக அதிகாரிகள் மூலம் எல்லைப் பாதுகாப்புப் படைக்கு வாய்வழி உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன.

இதன்படி ஏப்ரல் 18-ஆம் தேதியன்று பியார்திவா பகுதிக்கு மேற்கே 300 கி.மீ. தொலைவில் அசாம் மாநில எல்லை விளிம்பிலுள்ள வங்க தேசத்தின் போராய்பரி முகாமை அதிரடித் தாக்குதல் நடத்தி கைப்பற்றத் தீர்மானிக்கப்பட்டது. எல்லைப் பாதுகாப்புப் படையின் அதிரடிக் குழு தளபதி மண்டல் தலைமையிலான 16 பேர் கொண்ட படைக் குழு, போராய்பரியில் தாக்குதலில் இறங்க முற்பட்டதும் 700-க்கும் மேற்பட்ட வங்கதேச கிராம மக்கள் அவர்களைச் சுற்றி வளைத்து சிறை பிடித்து, தமது நாட்டின் எல்லைக் காவற் படையினரிடம்

செத்த மாட்டைப் போல, கொல்லப்பட்ட இந்தியப் படைவீரரின் பிணத்தைத் தூக்கி வரும் வங்கதேச கிராம மக்கள்: இந்திய மேலாதிக்கத்துக்குக் கிடைத்த 'பரிசு'.



www.padippakam.com

ஒப்படைத்தனர். வங்கதேசப் படையினர் இவர்களைச் சித்திரவதை செய்து சுட்டுக் கொன்று பின்னர் சிதைந்த நிலையில் உடல்களை இந்தியாவிடம் ஒப்படைத்துள்ளனர்.

இந்த உண்மைகளை மூடிமறைத்து விட்டு, வங்கதேசம் வாலாட்டுவதாகவும், அநியாயமாக இந்திய வீரர்களைச் சுட்டுக் கொன்று வெறியாட்டம் போட்டதாகவும் 'தேசிய'ப் பத்திரிகைகள் கூசாமல் புளுகி வருகின்றன. மறுபுறம் இந்திய விசுவாசியான வங்கதேசப் பிரதமர் ஷேக் ஹசீனா இந்தியாவுடன் நட்புறவையே நாடுவதாகவும், அவரை மீறிக் கொண்டு வங்கதேச இராணுவம் செயற்கையாக எல்லைப் பிரச்சினையை உருவாக்கி மோதலைத் தூண்டுவதாகவும் ஊகங்களை வெளியிடுகின்றன.




**வங்கதேசத் தலைநகர் டாக்காவில் நடந்த இந்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்: கிழிபடும் முகத்திரை.**

ஆனால், இப்போது எல்லையில் நடந்துள்ள மோதல் முதன் முறையாக நடப்பதல்ல. கடந்த 30 ஆண்டுகளில் இருதரப்புக்குமிடையே பல முறை மோதல்களும் துப்பாக்கிச் சண்டையும் நடந்து நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டுள்ளனர். கடந்த ஈராண்டுகளில் மட்டும் 53 மோதல்கள் நடந்துள்ளன. இதில் வங்கதேசப் படையினரும் கிராம மக்களுமாக 70 பேர் பலியாகியுள்ளனர். இம்மோதல்களை நிறுத்தக் கோரியும் எல்லைத் தாவாவை தீர்க்கக் கோரியும், பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் அளிக்கக் கோரியும் இந்திய ஆட்சியாளர்களிடம் வங்கதேச அரசு பல முறை வலியுறுத்திய போதிலும் இந்திய அரசு இந்த விவகாரத்தை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. குறைந்தபட்சம் வருத்தம் கூட தெரிவிக்காமல் வட்டார மேலாதிக்க நாடு என்ற ஆணவச் செருக்கில் அலட்சியப் படுத்தியே வந்துள்ளது.

ஏறத்தாழ 4000 கி.மீ. நீளம் கொண்ட இந்திய - வங்கதேச எல்லையானது, தெளிவாக வரையறுக்கப்படாத சிக்கலான சில பகுதிகளைக் கொண்டதாகவே நீடித்து வருகிறது. குறிப்பாக தீஸ்தா ஆற்றையொட்டிய சில எல்லைப் பகுதிகளில், முப்புறமும் இந்தியப் பகுதிகள் சூழ்ந்துள்ள திட்டுத் திட்டான வங்கதேசப் பகுதிகள் உள்ளன. அப்பகுதியிலுள்ள மக்கள் ஆற்றின் வழியே குறிப்பிட்ட தொலைவு சென்றால்தான் தமது தாய்நாட்டுடன் தொடர்பு கொள்ள முடியும். இன்னும் சில பகுதிகளில், வங்கதேச மக்கள் வாழும் இரு கிராமங்களுக்கு இடையே ஒரு துண்டு நிலப்பகுதி இந்தியாவுக்கானதாக இருக்கும். அங்கு இந்திய இராணுவம் சாவடியை நிறுவி இரு கிராமங்களில் தொடர்புக்கு இடையூறாக இருக்கும்.

பிரிட்டிஷ் காலனியவாதிகள், முஸ்லிம்கள் நிறைந்த பகுதியை பாகிஸ்தான் என்றும் இந்துக்கள் நிறைந்த பகுதியை இந்தியாவுக்கானதென்றும் வகுப்புவாத அடிப்படையில் பிரிவினை செய்ததன் விளைவு இது. 1947-லிருந்தே இந்த எல்லைப் பிரச்சனை தீர்க்கப்படாமல் தொடருகிறது.

பாசிச இந்திராவின் ஆட்சியில் அன்றைய கிழக்கு பாகிஸ்தானில் நடந்த விடுதலைப் போராட்டத்தை ஆதரிப்பதாகக் கூறிக் கொண்டு, இந்திய இராணுவம் தலையிட்டு இன்றைய வங்க தேசத்தை உருவாக்கியது. இந்திய விசுவாசியான ஷேக் முஜிபுர் ரஹ்மான் அதிபராக்கப்பட்டார். அதைத் தொடர்ந்து இந்தியாவும் வங்க தேசமும் 1974-இல் ஒரு நட்புறவு ஒப்பந்தத்தைப் போட்டன. அதில், 'எல்லைப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும்; இந்தியா வசமுள்ள பகுதிகளில் இடைவழிப் பாதைகளை வங்க தேச மக்கள் போக்குவரத்துக்குப் பயன்படுத்த நீண்ட கால குத்தகைக்கு விட வேண்டும்; கங்கை நதி நீரைச் சமத்துவமாகப் பங்கிட வேண்டும்; சாக்மா அகதிகள் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் - ஆகியன முக்கிய அம்சங்களாக இருந்தன. ஆனால், வங்க தேசத்தில் இந்திய விசுவாச பொம்மை அதிபரான முஜிபுர் ரஹ்மான் சுட்டுக் கொல்லப்பட்டு அடுத்தடுத்து இராணுவ சர்வாதிகாரிகள் ஆட்சிக்கு வந்ததும் இந்த ஒப்பந்தத்தை இந்தியா கிடப்பில் போட்டது. இன்றுவரை ஒப்பந்தத்தில் உள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படவில்லை.

**அண்டை நாடுகளுடன் நட்புறவையும், சமாதானத்தையும் பேணும் நாடு இந்தியா என்பது அப்பட்டமான புளுகுனிப் பிரச்சாரம் என்பதை வங்கதேச எல்லையில் நடந்த இந்த மோதல் அம்பலப்படுத்தி விட்டது.**

அதேசமயம் இந்தியா, ஒருதலைப்பட்சமாக கங்கை நதியின் குறுக்கே பராக்கா அணையை எழுப்பியது. இதனால் வங்கதேசத்துக்கு உரிய அளவுக்கு நதி நீர் இல்லாமல் அதன் பொருளாதாரம் பாதிப்படைந்தது. கல்கத்தா துறைமுகத்தை வங்கதேசம் பயன்படுத்துவதற்கான சலுகைகள் படிப்படியாக குறைக்கப்பட்டன. 1974-இல் போடப்பட்ட ஒப்பந்தப்படி பேருபரி உட்குழிப் பகுதியை இந்தியாவுக்கு வங்க தேசம் அளித்த போதிலும் அதற்கீடாக பல்வேறு இடைவழிப் பாதைகளை வங்கதேசத்துக்கு இன்றுவரை இந்தியா கையளிக்கவில்லை. வளர்ந்த நாடுகளுக்கு அப்பால் தெற்காசிய வட்டாரத்தில் வங்கதேசம் இந்தியாவின் முக்கிய சந்தையாக உள்ள நிலையில், சுங்க வரி, கட்டுப்பாடுகளை இரு நாடுகளும் குறைத்து வர்த்தகத்தை மேம்படுத்தும் திட்டத்துடன் வங்கதேசம் முன் வந்தபோதும் இந்தியா அதை ஏற்கவில்லை. வங்க தேச அரசு தானே முன்வந்து சுங்க வரிகளைக் குறைத்த பின்னர் வேறு வழியின்றி இந்திய அரசு பெயரளவுக்கு வரிக் குறைப்பு - கட்டுப்பாடு நீக்கத்தை அறிவித்தது.

எல்லாவற்றுக்கும் மேலாக, வங்க தேசப் போரின் போது எல்லையில் முகாமிட்ட பகுதிகளிலிருந்து இந்திய இராணுவம் வெளியேற மறுப்பது, எல்லையிலுள்ள வங்கதேச கிராம மக்களிடம் இந்திய இராணுவம் நடத்தி வரும் அத்துமீறல் அட்டூழியங்கள், இடைவழிப் பாதையினூடாகச் செல்லும் வியாபாரிகள், மக்களிடம் எல்லைப் பாதுகாப்புப் படையினர் நடத்தும் மாமூல் வேட்டை முதலான அனைத்தும் சேர்ந்து இந்திய மேலாதிக்க அரசு மீது வங்கதேச மக்கள் வெறுப்பும் ஆத்திரமும் கொண்டுள்ளனர்.

இதைச் சாதகமாக்கிக் கொண்டு, வரும் அக்டோபரில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் அரசியல் ஆதாயமடையும் நோக்கத்துடன் எதிர்க்கட்சித் தலைவியான பேகம் கலீதா ஜியா, தற்போதைய இந்திய விசுவாசப் பிரதமரான ஷேக் ஹசீனாவை "வங்கதேசத்தை இந்தியாவுக்கு அடிமைப்படுத்தும் துரோகி!" என்று வெளிப்படையாகக் குற்றம் சாட்டுகிறார். பாபர் மசூதி இடிப்பைத் தொடர்ந்து இந்தியா மீது வெறுப்பை உமிழும் இஸ்லாமிய அடிப்


படிப்பகம்

www.padippakam.com



படைவாதிகள், இழந்த சொர்க்கத்தை மீட்கத் துடிக்கும் இராணுவ சர்வாதிகாரிகள் ஆகியோரின் துணையோடு கலீதா ஜியா அதிகாரத்தைக் கைப்பற்ற எத்தனிக்கிறார். தோல்வி பீதியில் உள்ள பிரதமர் ஷேக் ஹசீனா, வேறு வழியின்றி தமது நாட்டு எல்லைக் காவற்படையின் நடவடிக்கையை நியாயப்படுத்தியுள்ளார். இந்திய மேலாதிக்கவாதிகள், வங்க தேச அரசு இப்படுகொலைகளுக்குப் பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும் என்று எச்சரித்த போதிலும், அவர் இன்றுவரை மன்னிப்பு கேட்க மறுத்து விட்டார். வழமையான முறையில் நடந்த சம்பவத்திற்கு வருத்தம் தெரிவித்ததோடு நின்றுவிட்டார்.

மூக்கறுபட்ட இந்திய மேலாதிக்கவாதிகள், ''ஐயோ இப்படி ஆகிவிட்டதே!'' என்று பதறுகிறார்கள். மறுபுறம், வங்கதேசத்தை அடக்கிப் பழி வாங்க வேண்டும் என்றும் குறுகிய தேசிய வெறியைக் கிளறிவிட்டு குமுறுகிறார்கள். அப்படி ஏதாவது அதிரடி நடவடிக்கை எடுத்து எல்லையில் போர் மூளுமானால், இந்தியாவின் மேலாதிக்கம் உலக அரங்கில் மேலும் அம்பலப்பட்டுப் போய்விடுமே என்று அஞ்சுகிறார்கள்.

ஏனெனில், இந்தியா தனது ஆக்கிரமிப்பு மேலாதிக்கப் போர் நடவடிக்கைகளால் அண்டை நாடுகளுடன் தீராப் பகையை வளர்த்துக் கொண்டு தனிமைப்பட்டுப் போய் நிற்கிறது. சீனா மற்றும் பாகிஸ்தான் மட்டுமின்றி, நேபாளமும் அண்மையில் இந்திய மேலாதிக்கத்துக்கு எதிராகப் பொங்கி எழுந்தது. இப்போது வங்கதேசமும் இந்திய மேலாதிக்க எதிர்ப்பு அணியில் சேரத் தொடங்கியுள்ளது.

இவையனைத்தும் தெற்காசிய வட்டாரத்தில் ஒரு கட்டைப் பஞ்சாயத்துக்காரனாக இந்தியா மேலாதிக்கம் செய்து வருவதன் எதிர் விளைவு. இந்தியப் படைவீரர்கள் எல்லையில் சுட்டுக் கொல்லப்பட்டிருப்பது, இம்மேலாதிக்க நடவடிக்கைகளுக்குக் கிடைத்த 'பரிசு'. இந்தியா, அண்டை நாடுகளுடன் நட்புறவையும் சமாதானத்தையும் நேசிக்கும் நாடு என்ற ஆளுங் கும்பலின் பசப்பல்களை எல்லையில் நடந்த கொலைகள் மீண்டும் திரைகிழித்துக் காட்டிவிட்டன.

நிலைமைகள் இவ்வாறிருக்க, ''இந்தியப் பிரதமர் வாஜ்பாய் இலங்கைக்கு இந்திய இராணுவத்தை அனுப்புவதில்லை என்று அறிவித்து விட்டார்; இலங்கை அரசுக்கு எச்சரிக்கை விடுக்கிறார்; இதற்காக இந்தியப் பிரதமரின் கருத்துக்கு நாம் தந்திர உத்தி (Tactical Support) வகைப்பட்ட ஆதரவை வழங்க வேண்டும்'' என்று விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களும் தமிழினப் பிழைப்புவாதிகளும் கொள்ளியை எடுத்துக் கூந்தலைச் சொறிந்து கொண்டிருக்கிறார்கள்.

● மனோகரன்

# தாராளமயத் தாசர்களும் நவீன எட்டப்பர்களும்

இந்திய வரலாற்று ஆராய்ச்சி கவுன்சில் வெளியிடயிருந்த ''சுதந்திரத்தை நோக்கி'' எனும் இந்திய சுதந்திரப் போராட்டம் தொடர்பான வரலாற்று ஆவண நூல்களை, அவை அச்சாகிக் கொண்டிருந்த தருணத்தில், அவற்றை வெளியிடக் கூடாது எனத் தடை செய்தது, பா.ஜ.க. கூட்டணி அரசு. ''இந்த வரலாற்று ஆவணங்களைத் தொகுப்பதில் கால தாமதமாகி விட்டது; கையாடல் நடந்து விட்டது'' என்று பா.ஜ.க.வின் அமைச்சர்கள் நூல்களை வெளியிடாமல் தடுத்ததற்குக் காரணங்களை அடுக்கினர்,

வரலாற்று ஆவணங்களைத் தொகுப்பதில் கையாடல் நடந்திருந்தால், கையாடல் செய்தவனைக் கைது செய்துவிட்டு, நூலை வெளியிடுவதுதான் நாணயமாக இருக்கும்; கால தாமதத்தைக் காட்டி வரலாற்று நூலை இருட்டடிப்புச் செய்வதை பாசிஸ்டுகளால் மட்டும்தான் நினைத்துப் பார்க்க முடியும். இந்துமதவெறி பாசிஸ்டுகள் இந்த அற்பத்தனமான காரணங்களைக் கூறி, இந்திய சுதந்திரப் போராட்டம் தொடர்பான ஆவண நூல்கள் வெளிவராமல் தடுத்துவிட்டதன் நோக்கம், அவர்கள் அணிந்து கொண்டுள்ள ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசபக்த முகமூடி மேலும் கிழிந்து போய்விடக் கூடாது என்பதைத் தவிர வேறில்லை.

சுதந்திரப் போராட்ட நாட்களின் பொழுது, காங்கிரசுக் கட்சி, தன்னையும் ஆங்கில ஏகாதிபத்திய எதிர்ப்பாளனாகக் காட்டிக் கொள்ள, சாத்வீகப் போராட்டங்களை நடத்தி இந்திய மக்களை ஏய்த்தது. இந்துமதப் பரிவாரங்களோ காங்கிரசைப் போன்று ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்து சாத்வீகப் போராட்டங்களைக்கூட நடத்தியது கிடையாது; ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்த எந்தப் போராட்டத்திலும் பங்கெடுத்துக் கொண்டதுமில்லை.

''சுதந்திரத்தை நோக்கி'' என்ற வரலாற்று ஆவண நூலைத் தொகுப்பதில் பணியாற்றிய தில்லிப் பல்கலைக் கழக வரலாற்றுப் பேராசிரியர் சுமித் சர்கார்,'' ஆங்கில ஏகாதிபத்தியத்தின் அடக்குமுறைக்கு ஆளாகாத பெருமைக்குரிய இரண்டு அமைப்புகளுள் ஒன்று, முசுலீம் லீக்; மற்றொன்று, இந்து மதவாத அமைப்புகள்'' எனக் குறிப்பிடுகிறார்.

எதிரியோடு அட்டைக் கத்திச் சண்டை போடுபவர்கள் கூட சில சமயங்களில் எதிரியின் கோபத்துக்கு ஆளாக நேரிடும். இதற்கு, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் காந்தியை பிர்லா மாளிகையில் சிறை வைத்ததை உதாரணமாகச் சொல்லலாம். அந்தச் 'சிறை கொடுமை'யைக் கூட இந்து மத வெறியர்கள் அனுபவிக்கவில்லையென்றால், அவர்கள் வெள்ளையனுக்கு வெஞ்சாமரத்தைத்தான் வீசியிருக்க வேண்டும்.

இந்து மதவெறியர்களால் தேசபக்த திலகங்களாகப் புகழப்படும் வாஜ்பாயி, அத்வானி போன்ற பா.ஜ.க. தலைவர்களுக்கெல்லாம் தலைவர்களான வீ.டி. சாவர்க்கர், எம்.எஸ். கோல்வால்க்கர், ஷியாம பிரசாத் முகர்ஜி, ஹெட்கேவர் ஆகியோரின் தேசபக்த யோக்கியதையை முதலில் எடுத்துக் கொள்வோம்.

''பகத் சிங், ராஜகுரு போன்றவர்களை விட, மிகப் பெரும் புரட்சியாளர் வீர் சாவர்க்கர்'' என்று இந்து மதவெறியர்கள் தம்பட்டம் அடித்துக் கொள்வதுண்டு. ''பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான தனது புரட்சிகர நடவடிக்கைகளுக்காக மன்னிப்புக் கோர வேண்டாம்'' என்று தனது தந்தைக்குக் கடிதம் எழுதியவர் பகத் சிங். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் பகத் சிங்கைத் தூக்கிலிட்டுக் கொல்ல முடிவு செய்த பொழுது, ''கிரிமினல்களைப் போலத் தங்களைத் தூக்கிலிட்டுக் கொல்லாமல், போர்க் கைதியைப் போலச் சுட்டுக் கொல்லுமாறு'' அஞ்சாமல் கூறியவர் பகத்சிங். அப்படிப்பட்ட பகத் சிங்கை விடப் பெரும் புரட்சியாளர் சாவர்க்கர் என்றால், அவர் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்குச் சிம்ம சொப்பனமாக இருந்திருக்க வேண்டும். ஆனால், உண்மையோ இதற்கு நேர்மாறானது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம்தான் சாவர்க்கருக்குச் சிம்ம சொப்பனமாக இருந்தது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் சிறைக் கொடுமைகளைத் தாங்கிக் கொள்ள முடியாமல், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து தனது நடவடிக்கைகளை மன்னித்து விடுமாறுக் கடிதம் எழுதிக் கொடுத்துவிட்டு அந்தமான் சிறையில் இருந்து விடுதலையானவர்தான் இந்த 'வீர' சாவர்க்கர்.

நாசிக் மாவட்ட ஆட்சியாளராக இருந்த ஜாக்சன் என்ற வெள்ளை அதிகாரியைக் கொன்ற வழக்கிலும்; ''சட்டபூர்வமாக உருவாக்கப்பட்ட அரசாங்கத்தைத் தூக்கியெறிய முயன்றதாகக்'' குற்றஞ் சாட்டப்பட்ட சாவர்க்கருக்கு ஐம்பதாண்டு காலச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. 1911-ஆம்



படிப்பகம்

www.padippakam.com

ஆண்டு தொடங்கி பதிமூன்று ஆண்டு காலம் சிறையில் இருந்த அவர், 1924-ஆம் ஆண்டு மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுத்துவிட்டு விடுதலையானார்.

சாவர்க்கரின் குடும்பம் 1920-ஆம் ஆண்டு தொடங்கியே, சாவர்க்கரை மன்னித்து விடுதலை செய்து விடுமாறு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திடம் மன்றாடியது. தொடர்ந்து நான்காண்டுகள் அவர்கள் கெஞ்சிக் கூத்தாடிய பிறகு, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் சாவர்க்கரை விடுதலை செய்ய இரண்டு நிபந்தனைகளை விதித்தது. ஒன்று, பம்பாய் மாகாணத்தில் உள்ள ரத்னகிரி மாவட்டத்தில்தான் சாவர்க்கர் தங்க வேண்டும்; அரசின் அனுமதியின்றி அவர் அந்த மாவட்டத்தை விட்டு வெளியேறக் கூடாது; இரண்டாவது, சாவர்க்கர் எந்தவிதமான அரசியல் நடவடிக்கையிலும் ஈடுபடக் கூடாது. மேலும், சாவர்க்கர் மீது நடந்த விசாரணை பாரபட்சமின்றி நடந்ததாகவும், அவருக்கு விதிக்கப்பட்ட தண்டனை நியாயமானதுதான் என அவர் ஒப்புக் கொள்ள வேண்டும் என்றும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் கூறினாலும், இதனை நிபந்தனையாக விதிக்கவில்லை.

ஆனால், சாவர்க்கரோ, ''என் மீதான விசாரணை பாரபட்சமின்றி நடந்தது; எனக்கு விதிக்கப்பட்ட தண்டனை நியாயமானது என்பதை நான் ஒப்புக் கொள்கின்றேன்; கடந்து போன காலங்களில் நான் பின்பற்றிய வன்முறைப் பாதையை மனதார வெறுக்கின்றேன்; எனது சக்திக்குட்பட்ட வரையில் சட்டத்தைம், அரசியல் சாசனத்தையும் உயர்த்திப் பிடிப்பது எனது கடமை என்று உணர்கிறேன்....'' என்று எழுதிக் கொடுத்துவிட்டு, துரோகியாய் விடுதலையானார்.

1911-க்கு முன்பு நாட்டின் விடுதலைக்காக ''அபினவ் பாரத்'' என்ற அமைப்பைக் கட்டிய சாவர்க்கர், 1935-இல் இந்து மகா சபை என்ற ஐந்தாம் படை அமைப்புக்குத் தலைவரானார். சாவர்க்கர் அரசியல் ரீதியாக இயங்குவதற்குத் தடை விதிக்கப்பட்டிருந்த பதினொரு ஆண்டுகளில் (1924-1935), சட்ட மறுப்பு இயக்கம் உள்ளிட்டு பல்வேறு ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கங்கள் நடந்தன. அதையெல்லாம் ஆதரிக்காத சாவர்க்கர், 1925 பிப்ரவரியில் வடமேற்கு எல்லை மாகாணத்திலும், அன்றைய பஞ்சாபின் மேற்குப் பகுதியிலும் நடந்த இந்து - முசுலீம் கலவரத்தில், இந்து மதவெறியர்களை ஆதரித்து எழுதினார். இதை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் கண்டித்தபொழுது, சாவர்க்கர், ''எனது கட்டுரையில் பயன்படுத்தப்பட்டிருக்கும் சுயராஜ்ஜியம் என்ற சொல் எனது கருத்தல்ல...'' என விளக்கமளித்து, தனது ஏகாதிபத்திய விசுவாசத்தைக் காட்டிக் கொண்டார்.

இப்படி நாட்டின் விடுதலைக்குத் துரோகமிழைத்த சாவர்க்கரின் ஆசியோடுதான், ஹெட்கேவர் ஆர்.எஸ்.எஸ். அமைப்பை 1925-ஆம் ஆண்டு தொடங்கினார். 1927-ஆம் ஆண்டு ''சைமன் கமிஷனை'' எதிர்த்து நாடு தழுவிய அளவில் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்கள் வெடித்தபொழுது, ஆர்.எஸ்.எஸ். இயக்கமோ, இப்போராட்டங்களைச் சிதைத்துத் திசை திருப்பும் சதித்தனத்தில் இறங்கியது. 1927-ஆம் ஆண்டு செப்டம்பரில் நாக்பூரைச் சுற்றியுள்ள பகுதிகளில் இந்து மத வெறிக் கலவரங்களைத் தூண்டிவிட்டு நடத்தியது. இதன் மூலம் நாக்பூரைச் சுற்றி ஆர்.எஸ்.எஸ். கிளைகளை உருவாக்கிக் கொண்டது. உப்புச் சத்தியாக்கிரக போராட்டம் நடந்து கொண்டிருந்த



> இந்து மகாசபையின் தலைவராக இருந்த சாவர்க்கர் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் சிறைக் கொடுமைகளைத் தாங்கிக் கொள்ள முடியாமல், ''என் மீதான விசாரணை பாரபட்சமின்றி நடந்தது; எனக்குக் கொடுக்கப்பட்ட தண்டனை நியாயமானது'' என எழுதிக் கொடுத்துவிட்டு, துரோகியாய் விடுதலையானார்.

பொழுது, ஆர்.எஸ்.எஸ். புல் அறுக்கும் 'போராட்டத்தை' நடத்தியது.

சாவர்க்கரின் சிஷ்யக் கோடிகளில் மிகவும் முக்கியமானவர் ஷியாமா பிரசாத் முகர்ஜி. இவர்தான், இந்துமகா சபையினையும், ஆர்.எஸ்.எஸ்.ஐயும் சேர்ந்த இந்து மதவெறியர்களைக் கொண்டு ஜனசங்கத்தை உருவாக்கினார். அந்த ஜனசங்கம்தான் 1980-இல் பாரதிய ஜனதாக் கட்சியாக மறு அவதாரம் எடுத்தது.

ஷியாமா பிரசாத் முகர்ஜி 1940-களில் வங்காள மாகாணத்தில் நிதி மந்திரியாக இருந்தார். அம்மாகாணத்தின் முதலமைச்சராக இருந்தவர் முசுலீம் லீக்கைச் சேர்ந்த ஃபஸ்லுல் ஹக். அப்பொழுது, முசுலீம் லீக்கும், இந்து மகாசபையும் கூட்டணி கட்டிக் கொண்டு, வங்காள மாகாணத்தின் அதிகாரத்தைப் பங்கு போட்டுக் கொண்டன.

1942-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் ''வெள்ளையனே வெளியேறு'' இயக்கம் தொடங்கிய பொழுது, வங்காள மாகாணத்தின் ஆளுநர் சர் ஜான் ஹெர்பார்ட், அமைச்சரவையைக் கூட்டி, ''இந்த இயக்கத்தை ஒடுக்க நினைக்கும் அரசை ஆதரிக்காதவர்கள், பதவியில் இருந்து விலகி விடுங்கள்'' எனக் கூறினார். ஷியாமா பிரசாத் முகர்ஜி உள்ளிட்டு, இந்து மகாசபை, முசுலீம் லீக் அமைப்புகளைச் சேர்ந்த எவரும் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை ஆதரித்துப் பதவி விலகவில்லை.

இந்து மகாசபைக்கும், முசுலீம் லீகுக்கும் இடையே நடந்து வந்த பதவி அதிகாரப் போட்டியில், முதலமைச்சர் நாற்காலி மீது கண் வைத்திருந்த ஷியாமா பிரசாத் முகர்ஜி, ''போர் நடந்து கொண்டிருக்கும் போது, மக்களின் உணர்வுகளைத் தூண்டிவிட்டு, உள்நாட்டில் குழப்பத்தையும், பாதுகாப்பின்மையையும் ஏற்படுத்துகின்ற யாரையும், எந்தவொரு அரசாங்கமும், அது தற்காலிகமான அரசாங்கமாக இருந்தாலும் சரி, தடுத்தேயாக வேண்டும். சுதந்திரத்திற்காக இந்த இயக்கத்தை காங்கிரசு தொடங்கியிருக்கிறது. அந்த சுதந்திரம் ஏற்கனவே மக்கள் பிரதிநிதிகளின் கைகளுக்கு வந்துவிட்டது என்று மக்களிடம் எடுத்துச் சொல்லுவது அமைச்சர்களாகிய எங்களின் பொறுப்பு'' எனக் கங்காணிகளுக்கே உரிய விசுவாசத்தோடு மாகாண ஆளுநருக்குக் கடிதம் எழுதினார்.

வெள்ளையனே வெளியேறு இயக்கம் நடந்தபொழுது சாவர்க்கரின் தலைமையில் இருந்த இந்து மகாசபை, ''மகாசபையைச் சேர்ந்தவர்கள் அரசாங்கப் பதவிகளில் இருந்து விலகி விடாமல், ஒட்டிக் கொள்ளுமாறு'' கட்டளை பிறப்பித்தது. ''சங்கம், சட்டத்திற்கு உட்பட்டு நடந்து கொண்டதோடு, குறிப்பாக 1942 ஆகஸ்டில் வெடித்த கலகங்களில் பங்கு பெறுவதைத் தவிர்த்துக் கொண்டது'' என பிரிட்டிஷ் இந்திய அரசின் உள்துறை அமைச்சகம் ஆர்.எஸ்.எஸ்.ஐப் பற்றிக் குறிப்பு எழுதியிருக்கிறது.

இந்து மதவெறி அமைப்புகள் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய அரசின் விசுவாசிகளாக, காவல் நாய்களாக நடந்து கொண்டது ஒருபுறமிருக்க, பிரிட்டிஷ் ஏகாதிபத்திய முதலாளிகளிடமும், அவர்களின் மூலதனத்திற்காக, தொழில் நுட்பத்[illegible]காக மண்டியிட்டுக் கிடந்தன.

முதல் உலகப் போருக்குப் பின் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந்தியாவில் மூலதனமிட்டுச் சுரண்டுவதற்கு வாய்ப்புகளை ஆராய்ந்தபொழுது, இந்து மகாச


படிப்பகம்

www.padippakam.com

பையின் தலைவர்களுள் ஒருவரான மதன் மோகன் மாளவியா, ''இந்தியாவைத் தொழில்மயப்படுத்த இந்தியர்கள் கொண்டிருந்த நம்பிக்கை, பிரிட்டனின் இந்தத் தாராள குணத்தால் மேலும் வலுவடைந்து விட்டதாக'' காலனியவாதிகளைப் புகழ்ந்து தள்ளினார்.

கிழக்கிந்திய கம்பெனி நமது நாட்டினுள் நுழைந்தபொழுது, இங்கிருந்த கைத்தொழில்/சிறுதொழில்களை அழித்தது; ''மஸ்லின்'' துணியை நெய்த வங்காள நெசவாளர்களின் பெருவிரல்களை வெட்டியெறிந்தது. ஆனால், அதே பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் 1920-க்குப் பின்பு இந்தியாவில் தொழில் தொடங்கிய ஜீஜீப்பாய், டாடா, பிர்லா, சிங்கானி, தாப்பர், கோயங்கா, பாங்கூர் மற்றும் ராசபுதனத்தையும் குஜராத்தையும் சேர்ந்த பனியா முதலாளிகளைத் தங்களின் தொழில் எதிரிகளாகக் கருதவில்லை. இதற்குக் காரணம் இவர்கள் பிரிட்டனைச் சேர்ந்த ஏகபோக முதலாளிகளிடம் கூட்டுச் சேர்ந்து தொழில் தொடங்கினார்கள் என்பது மட்டுமல்ல; இவர்கள் அனைவருமே கிழக்கிந்திய நிறுவனத்திடம் தரகு வணிகர்களாய் இருந்து பின்னர் தொழில் முதலாளியானவர்கள்; அல்லது, இந்தியாவில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் காலனி ஆட்சி தொடருவதற்கு ஆதரவு கொடுத்த நிலப்பிரபுக்கள்; லேவாதேவிக்காரர்கள்.

'சுதந்திர'த்துக்கு முன்பு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துடன் மட்டும் கூட்டணி சேர்ந்திருந்த இம்முதலாளிகள், 'சுதந்திர'த்துக்குப் பின்பு அமெரிக்கா, ஜப்பான், ஜெர்மனி உள்ளிட்ட அனைத்து ஏகாதிபத்தியங்களுடனும் கூட்டணி சேர்ந்தனர். பிரிட்டிஷ் காலனி ஆட்சியின் பொழுது காங்கிரசு இந்த முதலாளிகளை ''சுதேசி'' என்று கூறி ஏய்த்தது போலவே, இப்பொழுது, நாடு மறுகாலனியாக்கப்பட்டு வரும் வேளையில், இந்து மதவெறியர்கள், இத்தரகு முதலாளிகளை 'சுதேசி' முதலாளிகளாகக் காட்டுகின்றனர்.

சுதந்திரப் போராட்டக் காலந்தொட்டே காங்கிரசுக் கட்சி தரகு முதலாளிகள்/நிலப்பிரபுக்களின் அரசியல் பிரதிநிதியாகத்தான் செயல்பட்டு வருகிறது. சுதந்திரப் போராட்டத்தின் பொழுது காங்கிரசு கட்சி பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து, சாத்வீகப் போராட்டங்களை நடத்தியதன் மூலம், ஒரு புறம் மக்கள் மத்தியில் தன்னை சுதந்திரத்துக்கு நிற்பதாகக் காட்டிக் கொண்டது; இன்னொரு புறமோ, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திடம் பேரம் பேசி, மக்களின் உரிமைகளைப் பலியிட்டு, தரகு முதலாளிகள்/நிலப்பிரபுக்களின் நலன்களைச் சாதித்துக் கொண்டது.

ஆனால், இந்து மதவெறி அமைப்புகளோ, 1990-கள் வரையிலும் கூட, காங்கிரசைப் போல, அரசியல் அரங்கில் தரகு முதலாளிகளின்/நிலப்பிரபுக்களின் அரசியல் பிரதிநிதியாய்ச் செயல்பட்ட



The Hindu Photo / lbr.

வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போது கூட, வெள்ளையனுடன் கூடிக் குலாவிய ஆர்.எஸ்.எஸ்.இன் தலைவர் கோல்வால்கர்.

தில்லை. அவர்களின் காவல் நாயாக, அடியாள் படையாகத்தான் செயல்பட்டு வந்தார்கள். மதன்மோகன் மாளவியா போன்ற இந்து மதவெறி அமைப்புகளைச் சேர்ந்த தலைவர்கள் காங்கிரசுக் கட்சிக்குள் இருந்து கொண்டு வட இந்திய இந்துத் தரகு முதலாளிகளின் நலன்களுக்கு எவ்விதப் பாதிப்பும் வந்து விடாதபடி காங்கிரசின் ''இடது'' தன்மையைக் கண்காணித்துக் கொண்டனர். இதனால், இந்து மதவெறி அமைப்புகளுக்கு சுதந்திரம் பற்றிப் பேசவோ, தங்களுக்கென்று தனி அரசியல் - பொருளாதாரக் கொள்கைகளை வகுத்துக் கொள்ளவோ தேவையில்லாமல் போய்விட்டது. ''கோயிலைக் காப்போம்'', ''பசுவைக் காப்போம்'' எனப் போராட்டம் நடத்தும்

> ''இந்திய அரசு உலக வர்த்தகக் கழகத்தில் சரியான முறையில் பேரம் பேசாததுதான், பிரச்சினைகளுக்குக் காரணம்; உலக வர்த்தகக் குழுவிற்கான இந்தியக் குழுவில் தனியார் முதலாளிகளையும், வியாபாரிகளையும் இணைத்துக் கொண்டு பேரம் நடத்தினால், பிரச்சினை தீர்ந்து விடும்'' என்கிறது சுதேசி விழிப்புணர்வு இயக்கம்.

இவர்கள், மக்களின் தேவைகளை, அடிப்படை பிரச்சினைகளை முன்வைத்துப் போராடியதாக வரலாறே கிடையாது. இந்து மதவெறிக் கலவரங்களைத் தூண்டிவிட்டு நடத்துவதன் மூலமே, ஏகாதிபத்திய எஜமானர்களுக்கும், தரகு முதலாளிகளுக்கும் விசுவாசமாக நடந்து கொண்டனர்.

ஆர்.எஸ்.எஸ்.-ம் இந்து மகாசபையும் பின்னிருந்து ஷியாமா பிரசாத் முகர்ஜி தலைமையில் ஜனசங்கத்தை உருவாக்கிய பொழுது, அக்கட்சி அப்பொழுது காங்கிரசை எதிர்த்து ராஜாஜி தலைமையில் இயங்கிய சுதந்திராக் கட்சியின் அமெரிக்க பாணி வலதுசாரி பொருளாதாரக் கொள்கைகளுக்கு வால் பிடித்தது. இந்திரா காந்தி தன்னை இடதுசாரியாகக் காட்டிக் கொள்ள, முன்னாள் சமஸ்தான மன்னர்களுக்கு வழங்கி வந்த நிதி உதவியை நிறுத்திய பொழுது, அதை எதிர்த்து சமஸ்தான மன்னர்களுக்காக வக்காலத்து வாங்கியது, ஜனசங்கம். நிலப்பிரபுக்களுக்கு ஆதரவாக, நிலச்சீர்திருத்தத்தை வெளிப்படையாகவே எதிர்த்த கட்சி ஜனசங்கமாகத்தான் இருக்க முடியும். ஜனசங்கத்தின் பீகார் மாநிலத் துணைத் தலைவராக இருந்த தாகூர் பிரசாத், ''நிலச்சீர்திருத்த இயக்கத்தை ஆயுதப் போராட்டம் மூலம் தடுத்து நிறுத்த வேண்டும்'' என அறைகூவல் விடுத்தார்.

1980-களில் ஜனசங்கம் பா.ஜ.க.வாக அவதாரமெடுத்தபொழுது, காந்திய சோசலிசம்தான் தனது பொருளாதாரக் கொள்கை என்று அறிவித்தது. 1990-இல் காங்கிரசு தாராளமயப் பொருளாதாரக் கொள்கையை அறிவித்த பொழுது, தனது பொருளாதாரக் கொள்கையைக் காங்கிரசு திருடிக் கொண்டு விட்டதாக பா.ஜ.க. புலம்பியது. பாபர் மசூதி இடிக்கப்பட்ட பிறகு வட இந்திய மாநிலத் தேர்தல்களில் படு தோல்வியடைந்தது பா.ஜ.க. அதன் பின் ஆட்சியைப் பிடிக்க ''ராமர் கோயிலைக் கட்டுவோம்'' என ஓதிக் கொண்டிருந்தால் மட்டும் போதாது எனப் புரிந்து கொண்ட ஆர்.எஸ்.எஸ். தாராளமயத்தை எதிர்க்கும் சுதேசியாகத் தன்னைக் காட்டிக் கொண்டது.

இந்தச் சமயத்தில்தான் தரகு முதலாளிகளுள் ஒரு பிரிவினர், பன்னாட்டு நிறுவனங்கள் தரகு முதலாளிகளின் நிறுவனங்களையும் கைப்பற்றத் தொடங்கியதை எதிர்த்துக் கூப்பாடு போடத் தொடங்கினர். பன்னாட்டு நிறுவனங்களுக்கு இணையாகத் தங்களுக்கும் களம் அமைத்துத் தர வேண்டும் என 'உரிமைக் குரல்' எழுப்பினார்கள். ராகுல் பஜாஜ், டால்மியா உள்ளிட்ட தரகு முதலாளிகளின் ஒரு பிரிவு அரசியல் அரங்கில் பா.ஜ.க.வை ஆதரிக்கத் தொடங்கியது.

சுதேசி விழிப்புணர்வு இயக்கத் தலைவர்களுள் ஒருவரும், இந்து மதவெறி அமைப்பின் பொருளாதார நிபுணருமான குருமூர்த்தி, உலகமயத்தைக் கண்டித்து எழுதியுள்ள ''நமது பொருளாதாரம்: நேற்று,



படிப்பகம்

www.padippakam.com

இன்று, நாளை'' என்ற நூலில், இந்தியப் பொருளாதாரத்தை இப்படி மாற்றியமைக்கலாம் என்று ஆலோசனை கூறுகிறார்.

''ரயில்வேயை எடுத்துக் கொண்டால் கூட, தண்டவாளங்கள் போடுவது, 'ரயில்வே ஸ்டேஷன் அமைப்பது போன்ற விசயங்கள் அரசின் கையிலும், ரயில் வண்டிகள் விடுவது தனியார் கையிலும் என்ற நிலை தோன்றினால், அது பொது மக்களுக்கு நன்மை பயக்கும்''





தாராளமயத்தை எதிர்த்து ஆர்.எஸ்.எஸ்.இன் தொழிற்சங்கம் பாரதீய மஜ்தூர் சங்கம் தில்லியில் நடத்திய பேரணியில் சுதேசி விழிப்புணர்வு இயக்கத் தலைவர் தத்தோபந்த் தெங்காடி உரையாற்றுகிறார் (வலது படம்): மோசடி நாடகம்!

மேலும், ''இந்திய அரசு திறமை வாய்ந்த வியாபாரிகளை ரத்தம் குடிக்கும் இடைத்தரகர்கள் என்னும், மதிநுட்பம் வாய்ந்த வட்டிக் கடைக்காரர்களையும், வங்கி அதிபர்களையும் சுரண்டல் பேர்வழிகள்; செல்வத்தையும் அதிகாரத்தையும் குவித்து வைத்துக் கொள்பவர்கள் என்றும, திறன் வாய்ந்த தொழில் அதிபர்களை ஏகபோகவாதிகள், இலாபவெறியர்கள் என்றும் வெறுத்து ஒதுக்கியது. இந்திய வணிகர்கள் விரும்பத் தகாதவர்களாக, இன்னும் சொல்லப்போனால் தீண்டத்தகாதவர்களாக நடத்தப்பட்டனர்'' என்கிறார் குருமூர்த்தி.

பொதுத் துறை நிறுவனங்களைத் தனியார்மயமாக்கக் கூடாது எனப் போராடுகிறார்கள் தொழிலாளர்கள். ஆனால், சுதேசி விழிப்புணர்வு இயக்கமோ இந்தியப் பொருளாதாரத்தையே தனியார் முதலாளிகளிடம் தூக்கிக் கொடுத்துவிட வேண்டும் என ஆலோசனை கூறுகிறது.

பா.ஜ.க. கூட்டணி அரசு தொழிற்சங்கச் சட்டத்தைத் திருத்தி, தொழிலாளர்களின் உரிமைகளை ஒவ்வொன்றாகப் பறித்து வருகிறது. அதை எதிர்த்து ஒரு வார்த்தைக் கூடப் பேசாத குருமூர்த்தி, கந்துவட்டிக் கும்பலின் உரிமைகளுக்காகப் பரிந்து பேசுகிறார்.

விவசாயிகளிடமிருந்து நெல், கோதுமையைக் கொள்முதல் செய்வதைக் கைவிடுவதற்குத் தகுந்த தருணம் பார்த்து வருகிறது மைய அரசு. குருமூர்த்தியோ, அரசின் கொள்முதல் கொள்கைகளால், வியாபாரிகளின் கள்ளச் சந்தை - பதுக்கல் திறமையெல்லாம் வீணாகிக் கொண்டிருப்பதாகப் புலம்புகிறார்.

அதாவது, ஆர்.எஸ்.எஸ். கும்பலின் 'சுதேசி', தாராளமயத்தை எதிர்த்துப் போராடும் தொழிலாளர்களின் - விவசாயிகளின் நலன்களை முன்னிறுத்துவது கிடையாது. மாறாக, ஏகாதிபத்திய நிறுவனங்கள் அடிக்கும் கொள்ளையில் பங்கு கேட்கும் தரகு முதலாளிகள், பதுக்கல் வியாபாரிகள், கந்து வட்டிக் கும்பலுக்காகப் பரிந்து பேசும் மோசடித்தனம் நிறைந்தது.

அதனால்தான், உலகமயத்தை எதிர்ப்பதாகக் கூறும் சுதேசி விழிப்புணர்வு இயக்கம், ''உலக வர்த்தகக் கழகத்தில் இருந்து இப்பொழுது வெளிவரத் தேவையில்லை. இந்தியா, உலக வர்த்தகக் கழகத்தின் செயல் துடிப்பு மிக்க உறுப்பினராக இயங்குவது, நமது தேசிய நலன்களுக்கு ஏற்றது. உலக வர்த்தகக் கழகத்தால் நமது நாட்டில் ஏற்பட்டு வரும் பிரச்சினைகளுக்குக் காரணமே, இந்திய அரசு உ.வ.க.வில் சரியான முறையில் பேரம் பேசாததுதான். உலக வர்த்தகக் கழகத்திற்கான இந்தியக் குழுவில், தனியார் முதலாளிகளுக்கும், வியாபாரிகளுக்கும் போதிய இடம் வேண்டும்'' எனக் கூறுகிறது.

ஸ்டாண்டர்டு அண்டு புவர் (Standard and Poor) என்ற பன்னாட்டு நிதி ஆலோசனை நிறுவனம், ''(ஆர்.எஸ்.எஸ்.இன்) பொருளாதார தேசியத்தால் மேற்கத்திய முதலீட்டாளர்களுக்கு எவ்விதப் பிரச்சினையுமில்லை'' எனக் கூறியிருக்கிறது. இந்தியாவிற்கான முன்னாள் அமெரிக்க தூதர் ஃபிராங்க் விஸ்னர், ''சுதேசி மையமானதன்று; ஒருவன் என்ன சொல்லுகிறான் என்பதைவிட என்ன செய்கிறான் என்பதைக் கவனியுங்கள்'' என்கிறார்.

சொன்னவர் வாய்க்குச் சர்க்கரைதான் போடவேண்டும். எதிர்க்கட்சியாக இருந்த பொழுது 'சுதேசி' சவடால் அடித்து வந்த பா.ஜ.க. தாராளமயத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நாடாளுமன்ற வெளிநடப்பு, வெற்றுக் கூச்சல் மூலம் மறைமுக ஆதரவு கொடுத்தது. அக்கட்சி ஆட்சியைப் பிடித்த பிறகு, இரண்டாம் கட்ட சீர்திருத்தத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது. ஆனாலும் பா.ஜ.க.வின் தாய் அமைப்பான ஆர்.எஸ்.எஸ்., தனக்கும் பா.ஜ.க. அரசுக்கும் சம்பந்தம் இல்லாதது போல, 'சுதேசி' சவடாலைத் தொடர்ந்து வருகிறது.

ராமர் கோயில் பிரச்சினையில் ஆட்சி அதிகாரத்துக்கு அப்பால் இருக்கும் பஜ்ரங் தள், விசுவ இந்து பரிசத் மூலம் இந்து மதவெறியைத் தூண்டி விடும் ஆர்.எஸ்.எஸ்., இன்னொருபுறம் ஆட்சியில் உள்ள பா.ஜ.க.வை அடக்கி வாசிக்க வைத்து இரட்டை வேடம் போட்டு வருகிறது. அது போலவே, ஆட்சியில் இருக்கும் பா.ஜ.க. தாராளமயத்தைத் தீவிரமாக நடைமுறைப்படுத்தும் பொழுது, அதற்கு எதிரான எதிர்ப்புகளை அறுவடை செய்து கொள்வதற்காகவே, சுதேசி விழிப்புணர்வு இயக்கத்தை நடத்தி வருகிறது, ஆர்.எஸ்.எஸ்.

இவர்களின் 'சுதேசி' ஒட்டுப் பொறுக்கவும், அதன் மூலம் ஏகாதிபத்தியங்களுடன் பேரம் நடத்தவும், ஏகாதிபத்தியத்துக்கு எதிரான மக்களின் போராட்டங்களைச் சிதைத்துத் திருப்பவும்தான் பயன்படுகிறது என்பது ஏற்கனவே என்ரான் விவகாரத்தில் அம்பலப்பட்டு போய்விட்டது.

கலாச்சார தேசியமும் (இந்து மதவெறி), பொருளாதார தேசியமும் (சுதேசி) இரு கண்கள் என ஆர்.எஸ்.எஸ். கூறிக் கொண்டது. கலாச்சார தேசியத்திற்காக இலட்சக்கணக்கான கர சேவகர்களைத் திரட்டி, 'தேசிய அவமானச் சின்னம்' பாபர் மசூதியை இடித்துத் தரைமட்டமாக்கிய ஆர்.எஸ்.எஸ்., பொருளாதார தேசியத்திற்காக என்ரான் மீது ஒரு சிறு கல்லைக் கூடத் தூக்கிப் போட்டது கிடையாது. கலாச்சார தேசியத்திற்காக ஸ்டேன்ஸ் பாதிரியாரையும், அவரது இரு மகன்களையும் எரித்துக் கொன்ற இந்து மதவெறி கும்பல், அமெரிக்க அதிபரின் கொடும்பாவியைக் கூட எரிக்கத் துணிவது கிடையாது. கலாச்சார தேசியத்தை நிலைநாட்ட வெறிகொண்டு திரியும் ஆர்.எஸ்.எஸ்., பொருளாதார தேசிய விவகாரங்களில் அடக்கி வாசிப்பது ஏன் என்ற பதிலில்தான் அவர்களின் கபடத்தனம் அடங்கியிருக்கிறது.

**(தொடரும்)**



படிப்பகம்

www.padippakam.com

# முட்டுச் சந்தில் திணறும் சி.பி.எம்.

இந்தியக் கம்யூனிச இயக்கம் குறித்த சி.பி.ஐ. கட்சியை வழி நடத்திய டாங்கேயிசம், உலகக் கம்யூனிச இயக்கம் மற்றும் சோசலிசக் கட்டுமானம் குறித்த குருச்சேவ் - பிரஷ்நேவிசம் ஆகிய திருத்தல்வாதக் கோட்பாடுகளின் மறுபதிப்புத்தான் சி.பி.(எம்) கட்சியின் நிலைப்பாடுகள் என்று கடந்த இதழில் குறிப்பிட்டிருந்தோம். அவை பற்றி இப்போது விரிவாகக் கவனிப்போம்.

ஸ்டாலின் மரணத்துக்குப் பிறகு கட்சியையும் ஆட்சியையும் கைப்பற்றிய குருச்சேவ் தலைமையிலான திருத்தல்வாதத் தலைமை சோவியத் ஒன்றியத்தின் பொதுவுடைமைக் கட்சித் தலைவர்கள் பலரைப் படுகொலை செய்து அதிரடி எதிர்ப் புரட்சி மூலம் தனது ஏகபோக ஆதிக்கத்தை நிறுவியது. அப்போது கூட்டப்பட்ட கட்சியின் 20-வது காங்கிரசில் ஸ்டாலின் மீதான "இரகசிய அறிக்கை" என்கிற பெயரில் ஒரு அவதூறுத் தொகுப்பை குருச்சேவ் வெளியிட்டார். அதன் மூலம் மார்க்சிய - லெனினிய சித்தாந்தத்தைக் கைவிட்டு ஏகாதிபத்தியத்துடன் கைகோர்த்துக் கொள்ளும் தனது பிரபலமான திருத்தல்வாதக் கோட்பாடுகளை அறிவித்தார்.

ஏகாதிபத்தியத்துடன் சமாதான சக வாழ்வு, சமாதான வழிப் பொருளாதாரப் போராட்டம், சமாதான வழி சமூக மாற்றம் ஆகிய மூன்று கொள்கை முடிவுகளையும் சோவியத் ஒன்றிய பொதுவுடைமைக் கட்சியின் 20-வது காங்கிரசில் குருச்சேவ் பிரகடனம் செய்தார். ஸ்டாலின் மீதான இரகசிய அறிக்கையோடு இந்தப் பிரகடனம் ஏகாதிபத்தியம் மற்றும் அந்நாடுகளின் கம்யூனிசக் கட்சிகள், உலகம் முழுவதுமுள்ள திருத்தல்வாதக் கம்யூனிசக் கட்சிகளால் வரவேற்கப்பட்டன.

அதேபோல சோவியத் ஒன்றியப் பொதுவுடைமைக் கட்சியின் 22-வது காங்கிரசில் மேலும் சில முக்கிய முடிவுகளைக் குருச்சேவ் கும்பல் பிரகடனம் செய்தது. அதுவரையில் சோவியத் ஒன்றியத்தில் இருந்த பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசை அனைத்து மக்கள் அரசாகவும், பாட்டாளி வர்க்கத்தின் முன்னணி படையான கம்யூனிஸ்டுக் கட்சியை அனைத்து மக்கள் கட்சியாகவும் மாற்றப்பட்டது. முதலாளித்துவ இலாப ஊக்கம் பொருளாதார வளர்ச்சி - முன்னேற்றத்துக்கான அடிப்படையாக வைக்கப்பட்டது.

இவ்வாறு 20-வது மற்றும் 22-வது கட்சி காங்கிரசில் பிரகடனப்படுத்தப்பட்ட கோட்பாடுகள்தாம் அடுத்த 35 ஆண்டுகள் சோவியத் ஒன்றியத்தில் கட்சி, அரசு மற்றும் சமூக பொருளாதாரத்தை வழி நடத்தின. கோர்பச்சேவ் - யெல்த்சின் கும்பல் 1990-களில் நடத்திய அதிரடி ஆட்சிக் கவிழ்ப்பு வரை இந்தக் கோட்பாடுகள்தாம் அதிகாரபூர்வ நிலைப்பாடாக நடைமுறையிலிருந்தன.

இவற்றின் விளைவாக, சோவியத் ஒன்றியம் உள்நாட்டில் அதிகார வர்க்க முதலாளித்துவ பாசிச ஆட்சியாகவும், உலக அளவில் சமூக ஏகாதிபத்தியமாகவும் உருவானது. "சமாதான சக வாழ்வு, சமாதானப் பொருளாதாரப் போட்டி மற்றும் அமைதி வழிமாற்றம்" என்கிற முக்கொள்கைக்கு சமூக ஏகாதிபத்திய நோக்கிலான விளக்கமும் நடைமுறையும் மேற்கொண்டது.

ஏகாதிபத்தியங்களுக்கு இடையிலான உறவு எப்போதும் பகைமை பாராட்டுவதாக இருப்பதில்லை. கூட்டும் போட்டியும் ஆகிய இரண்டு அம்சங்களைக் கொண்டிருக்கிறது. அத்தகைய உறவையே அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் சோவியத் ஒன்றியம் கொண்டிருந்தது. சமாதான உடன்படிக்கை, ஆயுதக் குறைப்பு - படைக் குறைப்பு ஒப்பந்தம், ஏவுகணை - அணு ஆயுத விரிவாக்கத் தடை ஒப்பந்தம் என்கிற பெயரில் அமெரிக்காவுடன் சோவியத் ஒன்றியம் கூடிக் குலாவிக் கொண்டிருந்தபோதே, உலகிலேயே மிகப் பெரிய கடற்படையைக் கட்டியமைத்தது. அணு ஆயுத - ஏவுகணைத் தயாரிப்பிலும் விண்வெளி - ஆயுத சோதனையிலும் போட்டி போட்டது.

ஆசிய, ஆப்பிரிக்க, தென் அமெரிக்கக் கண்டங்களில் இராணுவ முகாம்களை நிறுவுவதில் அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் போட்டி போட்டது. எல்லாவற்றிற்கும் மேலாக மத்திய ஐரோப்பாவை மறுபகிர்வு செய்வதற்கான போட்டியில் இறங்கியது. அமெரிக்காவின் "நேட்டோ"வுக்குப் போட்டியாக "வார்சா" இராணுவக் கூட்டை உருவாக்கி நவீன ஆயுதங்களால் நிரப்பியது. நேருக்கு நேர் மோதிக் கொள்ளும் அளவுக்குப் படைகளைக் குவித்தது.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தைப் போலவே ஆஃப்கான், எத்தியோப்பியா, தெற்கு ஏமன், சோமாலியா போன்ற நாடுகளில் அதிரடி ஆட்சிக் கவிழ்ப்புகளை நடத்தித் தனது கைப்பாவை அரசுகளை நிறுவியது. இந்தியா, ஈராக் போன்ற நாடுகளுடன் இராணுவ ஒப்பந்தங்களைப் போட்டது. இவையெல்லாம் அமெரிக்க ஏகாதிபத்தியத்தைக் கட்டுப்படுத்தி உலக அமைதியை நிலைநாட்டுவதற்கான போராட்டங்கள் - முயற்சிகள் என்று சித்தரித்தது. உலக சமாதான அமைப்பு, ஆசிய - ஆப்பிரிக்க சமாதான அமைப்பு போன்ற பல கைக்கூலிகளின் அமைப்புகளை நிறுவியது.

சோசலிச நாடுகளின் கூட்டமைப்பு என்கிற பெயரில், ஒரு பொருள் உற்பத்தி நாடுகளாகக் கிழக்கு ஐரோப்பிய நாடுகளை மாற்றி, தனது தொங்கு சதை நாடுகளாக சோவியத் ஒன்றியம் அமைத்துக் கொண்டது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின்

**ஏகாதிபத்தியங்களுடன் சமாதான சக வாழ்வு என்ற வர்க்கச் சமரசக் கோட்பாட்டை அறிவித்து, முன்னாள் அமெரிக்க அதிபர் நிக்சனுடன் (வலது) கூடிக் குலாவிய முன்னாள் சோவியத் யூனியன் அதிபர் குருச்சேவ் (இடமிருந்து இரண்டாவது).**





படிப்பகம்

www.padippakam.com

''காட்'', ''உலக வங்கி'', ''ஐ.எம்.எஃப்'' ஆகியவற்றுக்கு மாற்றாகக் கிழக்கு ஐரோப்பிய நாடுகளைக் கொண்ட மையச் சந்தை, பொருளாதார - நிதி நிறுவனங்களை நிறுவி, உலகு தழுவிய வேலைப் பிரிவினையைப் புகுத்தியது.

நேரு - இந்திரா காந்தி, நாசர், சதாம் உசைன், கடாஃபி போன்றவர்களை ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராளிகளாகச் சித்தரித்து, இவர்கள் ஆளும் நாடுகளின் சுயதேவை, சுயசார்புப் பொருளாதாரத்துக்கு உதவி என்கிற பெயரில் அங்கெல்லாம் தனது அதிகார வர்க்கத் தரகு முதலாளிகளை ஊட்டி வளர்த்தது. மூன்றாம் உலக நாடுகளின் ஏகாதிபத்திய எதிர்ப்புக்கு உதவுவதாகக் கூறிக் கொண்டு ஆயுத விற்பனையிலும், இராணுவ ஒப்பந்தத்திலும், தொழில் கூட்டுகளிலும் ஈடுபட்டது, சோவியத் சமூக ஏகாதிபத்தியம்.





**அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் சதி செய்து சோவியத் யூனியனைச் சிதைத்த கோர்ப்சேவ் (இடது படம்); அவரின் சதிக்கு உடந்தையாக இருந்து ரசியாவின் அதிபரான யெல்ட்சின் (வலது) அமெரிக்க அரசுச் செயலர் ஜேம்ஸ் பெக்கருடன்.**

சோவியத் ஒன்றியத்தில் பொதுவுடைமைக் கட்சித் தலைமையைத் திருத்தல்வாதிகள் கைப்பற்றிய பிறகு, அரசுச் சொத்துடைமையைத் தமது ஏகபோகச் சுரண்டல் ஆதிக்கத்துக்கான கருவியாகப் பயன்படுத்தும் அதிகார வர்க்க முதலாளித்துவப் பொருளாதார ஆதிக்கத்தை நிறுவினர். அதன் உல்லாச - ஊதாரி வாழ்க்கைக்கும், சுயநலனுக்குமானதாக உற்பத்தியை அக்கும்பல் மாற்றியது. அதோடு பிற ஏகாதிபத்தியங்களுடன் போட்டி போட்டுக் கொண்டு சோவியத் பொருளாதாரம் முழுவதையுமே இராணுவமயமாக்கியது. அந்நாட்டுப் பொருளாதாரமே மீள முடியாத நெருக்கடியில் சிக்கியது.

மேற்கண்டவாறு சோவியத் ஒன்றியத்திலும், அது வெளி உலகுடன் கொண்ட உறவிலும் ஏற்பட்ட மாற்றங்களை அவ்வப்பொழுது ஆய்ந்தறிந்து பின்வரும் முடிவுகளை ஆதாரபூர்வமாக உலகம் முழுவதுமிருந்த மார்க்சிய - லெனினிய இயக்கத்தினர், முன்வைத்தனர்.

''சோவியத் ஒன்றியத்தின் கம்யூனிசக் கட்சித் தலைமை மட்டுமல்ல; அடிப்படையில் அக்கட்சியே நவீனத் திருத்தல்வாதக் கட்சியாகிவிட்டது. சோவியத் ஒன்றியம் இனிமேலும் சோசலிச நாடு அல்ல. அங்கு ஏகபோக அதிகார வர்க்க முதலாளித்துவ பாசிசம் நிறுவப்பட்டுவிட்டது. சோவியத் ஒன்றியம் சமூக ஏகாதிபத்தியமாகிவிட்டது. அதாவது சொல்லில் சோசலிசம், செயலில் ஏகாதிபத்தியம் என்பதாகிவிட்டது. பிற ஏகாதிபத்தியங்களுடன் கூட்டும் போட்டியும் என்ற உறவு கொண்டிருந்த அந்த சமூக ஏகாதிபத்தியம், பிறகு மேல்நிலை வல்லரசாக உயர்ந்தது. அது, இன்னொரு மேல்நிலை வல்லரசான அமெரிக்காவுடன் உலக மேலாதிக்கத்துக்கான போட்டியில் இறங்கி, மூன்றாவது உலகப் போருக்கான தயாரிப்பிலும் ஈடுபட்டது.''

மார்க்சிய - லெனினிய இயக்கத்தினர் முன்வைத்த மேற்கண்ட மதிப்பீடு குறித்து சி.பி.(எம்) கட்சியின் அணுகுமுறையே வேறுவிதமாக இருந்தது. சோவிய ஒன்றியத்திலும் வெளிநாடுகளுடன் அது கொண்ட உறவிலும் ஏற்பட்ட மாற்றங்களை யதார்த்தமாகவும் உண்மை விவரங்களை அடிப்படையாகக் கொண்டும் முடிவுகள் எடுப்பதற்குப் பதில், இந்தியாவில் தனது அரசியல் போட்டியாளராகக் கருதிய சி.பி.(ஐ) மற்றும் இந்தியப் பொதுவுடைமைக் கட்சி (மா-லெ) ஆகியவற்றுடனான தனது உறவை வைத்து முடிவுகள் எடுத்தது. சி.பி.(எம்) கட்சி.

ஒன்றுபட்ட இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி பிளவுபட்டு சி.பி.(எம்) என்ற தனிக்கட்சியை அமைத்துக் கொண்டபோது, அதற்கு எதிராக சி.பி.(ஐ) கட்சியைத்தான் சோவியத் ஒன்றியம் உட்பட கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் கம்யூனிஸ்டு கட்சிகள் அங்கீகரித்தன. இதற்கு மிக முக்கியக் காரணம், சோவியத் ஒன்றிய கம்யூனிஸ்டு கட்சியின் 20-ஆவது மற்றும் 22-ஆவது காங்கிரசு முடிவுகளை டாங்கே தலைமையிலான சி.பி.(ஐ) முழுமையாக ஏற்றுக் கொண்டது. இன்னும் சொல்வதானால் அதற்கு முன்பே திருத்தல்வாத நிலைப்பாடுகளை சி.பி.(ஐ) கட்சி பின்பற்றி வந்தது.

இந்த நிலையில் தனிக்கட்சி அமைத்துக் கொண்ட சி.பி.(எம்) கட்சித் தலைவர்களுக்கு முன்பிருந்த ஒரே வழி, சி.பி.ஐ. மற்றும் அதன் ஆதரவுக் கட்சிகளான சோவியத் மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் கம்யூனிஸ்டு கட்சிகளின் நிலைப்பாடுகளை நிராகரிப்பதாகவும், எதிர்த்துக் கடுமையாகச் சாடுவதாகவும் காட்டிக் கொள்வதுதான். அதனால்தான் பின்வருமாறு சி.பி.(எம்) கட்சி நிலை எடுத்தது.

''சோவியத் ஒன்றியத்தின் கம்யூனிசக் கட்சி 20-வது காங்கிரசில் முன்வைக்கப்பட்ட சமாதான சக வாழ்வு, சமாதானப் பொருளாதார போட்டி, மற்றும் சமாதான வழி மாற்றம் ஆகிய கோட்பாடுகள் உலக அளவில் வர்க்க சமரச - வர்க்கக் கூட்டுறவுப் பாதைக்கு முழுவதுமாக வழி வகுத்துவிட்டது'' என்று சி.பி.(எம்) கட்சி 1969-இல் சாடியது.

''சமாதான சக வாழ்வு என்ற கொள்கை பல்வேறு நாடுகளின் வர்க்கப் போராட்டங்களையும் தேசிய விடுதலைப் போராட்டங்களையும் நேரடியாக நாசப்படுத்துவதற்கும், ஏகாதிபத்திய எதிர்ப்பு தோல்வி அடைவதற்கும், இக்கால கட்டத்தின் புரட்சிகர வாய்ப்புகளை அழிப்பதற்கும் வழி வகுக்கும்'' என்று சி.பி.(எம்) அச்சம் தெரிவித்தது.

''அதேபோல, சோசலிசத்திற்கான அமைதி வழி மாற்றம் என்பதைப் பொது விதியாக்கி, ஒரு தரப்பாக அழுத்தம் தரும் திருத்தல்வாதக் கண்ணோட்டம் புரட்சிகர உணர்வைக் குன்றச் செய்யும், சோசலிசத்துக்கான நாடாளுமன்ற மாயைகளைப் பரப்பும். இதை நமது ஒன்றுபட்ட கட்சி உட்பட உலகின் பெரும்பான்மையான கம்யூனிஸ்டு கட்சிகள் நாடாளுமன்றப் பாதையை ஏற்றுக் கொண்டது தற்செயலானதல்ல'' என்று சி.பி.எம். கட்சி புரட்சி வசனம் பேசியது.

''அதேபோல, மக்கள் அரசு, அனைத்து மக்கள் கட்சி மற்ம் இலாப ஊக்கம் ஆகியவை குறித்த சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டு கட்சியின் முழக்கங்கள் உலகப் புரட்சியின் அடித்தளத்தை - சோசலிச முகாமை உயிராதாரமான முறையில் கீழறுக்கச் செய்கிறது. இவற்றைத் தடுக்காவிட்டால் எதிர்ப் புரட்சிக்கான ஆபத்துக்கு வழிவகுக்கும். இம்மாதிரியான முழக்கங்களும், சக்திகளும் புரட்சிகர இயக்கத்தின் முன்னேற்றத்துக்கு மீண்டுமொருமுறை ஆபத்தை விளை

www.padippakam.com

விக்கும்'' என்று சி.பி.(எம்) கட்சி ஆதங்கப் பட்டது.

சோவியத் ஒன்றியப் பொதுவுடைமைக் கட்சித் தலைமை மற்றும் அதன் கோட்பா டுகள் மீதான சி.பி.(எம்) கட்சியின் மேற்கண்ட விமர்சனங்கள், முடிவுகள் எல்லாம் சந்தர்ப்பவாத நோக்குடன் முன் வைக்கப்பட்டவைதான்; உண்மையான, புரட்சிகர உணர்வுடன் முன் வைக்கப்பட் டவை அல்லவென்பது அடுத்த சில ஆண்டு களிலேயே நிரூபணமாகிவிட்டது. சி.பி.(எம்) கட்சிக்கு உள்ளும் வெளியும் இருந்த (நக்சல்பாரி) கம்யூனிச புரட்சியா ளர்கள், அக்கட்சிக்கு எதிரான சித்தாந்தப் போராட்டத்தைத் துவக்கிய போது இந்த உண்மை வெளியிட்டது.

சோவியத் ஒன்றியத்தின் கம்யூனிசக் கட்சியின் 20-ஆவது மற்றும் 22-ஆவது கட்சிக் காங்கிரசுக்குப் பிறகு அங்கே ஏகாதி பத்தியத்துடன் சமாதான சகவாழ்வு, சமா தானப் பொருளாதாரப் போட்டி, சமாதான வழி மாற்றம் என்ற திருத்தல்வாதக் கோட்பா டுகளை நடைமுறைப்படுத்தி இவற்றோடு பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம், பாட்டாளி வர்க்கக் கட்சி என்பனவற்றைக் கைவிட்டு அனைத்து மக்கள் கட்சி, அனைத்து மக்கள் அரசு மற்றும் முதலாளித்துவ ஊக்கம் ஆகிய கொள்கைகளையும் அமலாக்கினர். இவற் றையும் மேலும் பல யதார்த்த - நடைமுறை விவரங்களையும் முன் வைத்து, சோவியத் ஒன்றியத்திலும் அதன் சர்வதேச உறவுக ளிலும் ஏற்பட்ட மாற்றங்கள் குறித்த கறா ரான மதிப்பீடுகளை சி.பி.(எம்) கட்சியின் ஆந்திரா மற்றும் ஜம்மு - காசுமீர் மாநிலக் கமிட்டியின் பெரும்பான்மையினர் மத்தியத் தலைமையிடம் கோரினர். அவர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதில் தருவதற்கான முயற்சியில் இறங்கிய சி.பி.(எம்) தலைமை தனது திருத்தல்வாத எதிர்ப்பு முகத்திரையைத் தாமே கிழித்துக் கொண்டனர். சி.பி.(ஐ) கட்சியைப் போல தாமும் சோவியத் ஒன்றியத் திருத்தல்வாதத் தலை மையின் ஆதரவாளர்கள்தாம் என்பதை காட்டிவிட்டனர்.

சோவியத் ஒன்றியத்தின் கம்யூ னிஸ்டு கட்சியினுடைய திருத்தல்வாதத் தலைமை ஏகாதிபத்தியத்துடன் சமரச மற்றும் கூட்டுறவுக் கொள்கைகளைப் பின்பற்றுகிறது என்பதுதான் சி.பி.(எம்) கட்சியின் விமர்சனமே தவிர, சோவியத் ஒன்றியம் அமெரிக்காவின் ஒரு கூட்டா ளியாகி விட்டது அல்லது அமெரிக்க ஏகாதிபத்தியத்தோடு உலக மேலதிக் கத்தைப் பகிர்ந்து கொள்ளவும் செல்வாக்கு மண்டலங்களைப் பங்கு போட்டுக் கொள்ளவும் சோவியத் ஒன்றியம் வேலை செய்கிறது என்பது முற்றிலும் தவறான கருத்து என்று நிரா கரிப்பதாகக் கூறிவிட்டது.

மேலும் பின்வருமாறு சி.பி.(எம்) கட்சி தெரிவிக்கிறது. ''இதை ஏற்றுக் கொண்டால் சோவியத் ஒன்றியம் ஒரு சோசலிச நாடு அல்ல; அதாவது அது ஒரு ஏகாதிபத்திய நாடு; சோவியத் ஒன்றிய சோசலிசக் குடியரசுகளில் ஒரு எதிர்ப்பு ரட்சி நடந்துவிட்டது; உலக புரட்சிகர சக்திகள் ஒரு பிரம்மாண்டமான பின்ன டைவை பெற்றுள்ளன; சோசலிச உலகின் ஒரு பாதியை - இந்த சகாப்தத்தின் குணாம் சமாகிய தீர்மானமான பலமாகிய, சோசலிச உலகின் தீர்மானமான பலத்தை முறியடித்து வாகை சூடுவதில் ஏகாதிபத்தியம் வெற்றி பெற்று விட்டது என்றெல்லாம் பொருள் படும். இது ஏகாதிபத்தியத்தின் இறுதி வீழ்ச்சிக்கான ஒரு சகாப்தம் அல்ல வென்றும் அதன் முன்னேற்றத்துக்கான சகாப்தம் என்றும் பொருள்படும்''

''எனவே, சோவியத் ஒன்றியக் குடியர சுகள் ஏகாதிபத்தியத்தின் ஒரு கூட்டாளி என்கிற வரையறுப்பை நாங்கள் நிராகரிக் கிறோம். திருத்தல்வாதத் தலைவர்கள் (ஏகா திபத்தியத்துடன்) கூட்டுறவு கொள்கி றார்கள்; ஆனால், சோவியத் ஒன்றியக் குடி யரசுகள் ஒரு சோசலிச நாடு. சோசலிச அரசு நீடிப்பதற்கு திருத்தல்வாதத் தலைவர்கள் ஆபத்து விளைவிக்கிறார்கள். ஆனால், அவர்களுடைய கொள்கைகள் சோசலி சத்தின் பலன்களை நிரந்தரமாக நிர்மூல மாக்கி ஒரு பிற்போக்கு ஒழுங்கு முறையை நிலைநாட்டுவதற்குள் அந்நாட்டு மக்கள் அவர்களைத் தோற்கடிக்க முடியும்'' என்ற கணிப்பும் நம்பிக்கையும் தெரிவித்தது சி.பி.(எம்) கட்சி.

இதன் மூலம் சோவியத் ஒன்றியம் ஒரு சமூக ஏகாதிபத்தியமல்ல; இன்னமும் ஒரு சோசலிச நாடுதான் என்ற தனது முடிவை, மதிப்பீட்டை அறிவித்தது. இந்த முடிவும், மதிப்பீடும் யதார்த்த உண்மை விவரங் களை அடிப்படையாகக் கொண்டவை அல்ல; செருப்புக்குத் தக்கபடி காலை வெட்டிக் கொள்வதைப் போல, முன் கூட்டி எடுக்கப்பட்ட முடிவுக்கு தான் இதுவரை கூறிவந்த கருத்துக்கு ஏற்ப எடுக்கப்படும் நிலைப்பாடுதான் என்பது சி.பி.(எம்) தனது தரப்புவாதங்களை முன் வைக்கும் - நியா யப்படுத்தும் முறையே காட்டிக் கொடுத்து விடுகிறது.

சோவியத் ஒன்றியத்தில் முதலாளித் துவம் - அதிகாரவர்க்க - முதலாளித்துவம் - நிலைநாட்டப்பட்டு விட்டது என்பதை ஆதாரபூர்வமாக மார்க்சிய - லெனினிய இயக்கத்தினர் முன் வைத்தபோது, திருத்தல் வாதிகளால் தலைமை தாங்கப்படும் ஒரு கட்சி திருத்தல்வாதக் கொள்கைகளை அமல்படுத்தும் ஒரு அரசும் சமுதாயமும் எப்படி சோசலிசமாக இருக்க முடியும் என்ற கேள்வியெழுப்பியபோது, சோவியத் ஒன்றி யத்தில் முதலாளித்து மீட்புக்கான ஒரு ஆபத் திருப்பதாக மட்டுமே சி.பி.(எம்) கட்சியினர் ஒப்புக் கொண்டனர்.

''கேடு விளைவிக்கும் திருத்தல்வாதக் கொள்கைகள் சோவியத் ஒன்றியத்தில் ஏற்ப டுத்தும் பொருளாதாரத் தாக்கம் குறித்து விரி வானதொரு ஆய்வை சி.பி.(எம்) மையக் குழு செய்யவில்லை என்பதை உணர வேண்டும். சோவியத் ஒன்றியத்தில் சோச லிச அமைப்பு நீடித்திருக்கிறது என்று அறியும் அதேசமயம், முதலாளித்துவ ஊக்க மளிப்பு என்ற கண்ணோட்டம் மற்றும் கொள்கையாலும் தனிநபர் இலாபம் என்ற கருத்தாலும் ஒரு புதுவகையான முதலாளித் துவம் மீண்டும் அங்கு நிலைநாட்டப்படுவ தற்கான ஆபத்திருப்பதை அது சுட்டிக் காட்டுகிறது'' என்று சொன்னது சி.பி.(எம்) தலைமை.

ஆக, சோவியத் ஒன்றியம் ஒரு ஏகாதி பத்தியம் அல்ல, சோசலிச நாடுதான்; அங்கு ஒரு புதுவகையான முதலாளித்துவம் மீண்டும் நிலைநாட்டப்படுவதற்கான ஆபத் திருக்கிறது; சோசலிச அரசுக்குத் திருத் தல்வாதத் தலைவர்கள் ஆபத்து விளை விக்கிறார்கள்; ஆனால், அவர்களு டைய கொள்கைகள் சோசலிசத்தின் பலன்களை நிர்மூலமாக்கி ஒரு பிற்போக்கு ஒழுங்கு முறையை நிலை நாட்டுவதற்குள் அந்நாட்டு மக்கள் அவர்களைத் தோற்கடிக்க முடியும் என்பவை சி.பி.(எம்) கட்சி 1970-இல் முன்வைத்த கணிப்பு, எச்சரிக்கை, நம்பிக்கை. அதன் பிறகு அடுத்த 20 ஆண்டுகளாக, 1991-இல் கோர்பி- யெல்த்சின் கும்பல் சோவியத் ஒன்றியத் தையும், அந்நாட்டுக் கம்யூனிஸ்டு கட்சி யையும் கலைக்கும் வரை சோவியத் ஒன்றியம் ஒரு சோசலிச அரசையும், சமு தாயத்தையும், கம்யூனிஸ்டு கட்சியை யுமே கொண்டிருப்பதாக சி.பி.(எம்) கட்சி சாதித்து வந்தது. அப்படியானால் அதன் எச்சரிக்கையும் நம்பிக்கையும் என்னவாயின?

**சி.பி.எம்., சோவியத் ஒன்றியத்தில் ஏற்பட்ட மாற்றங்களைப் பற்றி முடிவு எடுப்பதற்கு உண்மை விவரங்களை அடிப்படையாகக் கொள்ளவில்லை. மாறாக, இந்தியாவில் தனது அரசியல் போட்டியாளராகக் கருதிய சி.பி.(ஐ) மற்றும் இந்தியப் பொதுவுடைமைக் கட்சி (மா-லெ) ஆகியவற்றுடனான தனது உறவை வைத்து முடிவுகள் எடுத்தது.**

(தொடரும்)

www.padippakam.com

6-ஆம் பக்கத் தொடர்ச்சி

கத்தைக் கூட கருணாநிதி அணி பெற்றிருக்க முடியாது.

உண்மையில் கருணாநிதியின் தோல்விக்கும் ஜெயாவின் வெற்றிக்கும் மிக முக்கியமாக அமைந்த காரணம், தமிழக மக்கள், ஏழை எளிய, நடுத்தர மக்கள் வாழ்க்கையை சமீப காலத்திலும் உடனடியாகவும், நேரடியாகவும் பாதித்தது. எப்போதோ(!) நடந்த ஜெயா - சசி கும்பலின் இலஞ்ச ஊழல் - அதிகார முறை கேடுகளைவிட, இப்போது அவர்கள் எதிர்கொள்ளும் அடிப்படை தேவைகள் மற்றும் பொருளாதார - வாழ்க்கைப் பிரச்சினைகள்தாம்.

சாதாரண மக்கள், கருணாநிதியின் ஆட்சி ஒரு பொற்கால ஆட்சி என்ற கருதவில்லை. ''வருமானம் இல்லை. அதே சமயம் விலைவாசி கிடுகிடுவென உயருகின்றன, அடிமட்ட இலஞ்சம் ஒழியவில்லை'' - இதுதான் மக்கள் பேசிக் கொள்வது. இதைக் கேட்கும் நிலையில் கருணாநிதி இல்லை. கொங்குச் சீமையிலே ஆலை, விசைத்தறி, பஞ்சாலை, பனியன் தொழில்கள், வார்ப்படத் தொழில்கள் மூடப்பட்டு முடங்கிக் கிடக்கின்றன. நெல்லை - விருதுநகர் மாவட்டங்களில் தீப்பெட்டி - அச்சு - பட்டாசுத் தொழில்கள் இயந்திரமயமாக்குவதால் 10 லட்சம் பேருக்கு வேலை இல்லை. வேலூர் - திண்டுக்கல் மாவட்டங்களில் தோல் பதனிடும் ஆலைகள் மூடிக் கிடக்கின்றன. கைத்தறித் தொழில்கள் - கட்டுமானத் தொழில்கள் முடங்கிக் கிடக்கின்றன.



**கிரிமினல் ஜெயாவின் பதவியேற்பு விழாவில் கலந்து கொண்ட (இடமிருந்து) சித்தார்த்த சங்கர் ரே, சங்கரையா மற்றும் மூப்பனார்.**

விவசாயிகளுக்கோ அடி மேல் அடி. விவசாய இடு பொருட்களின் விலை கிடுகிடுவென உயர்வு, விளை பொருட்கள் விலை போகவில்லை. கரும்புத் தோட்டங்கள் தீ வைத்து எரிக்கப்படுகின்றன. வெங்காய மூட்டைகள் வீதியில் கொட்டப்படுகின்றன. தேயிலை விலை வீழ்ச்சிக்கு எதிராகப் போராடிய மக்கள் மீது துப்பாக்கிச் சூடு - நிர்வாண ஊர்வலம். கள்ளச் சாராயம் ஆறாக ஓடுகிறது. ரௌடித்தனமும் பகற்கொள்ளையும் புரியும் கிரிமினல் கும்பல்கள் குறையவில்லை.

இவ்வளவு இருந்தும் ''தொடரட்டும் இந்தப் பொற்காலம்'' என்றார் கருணாநிதி. பாலங்கள் போட்டோம், சாலைகள் அமைத்தோம், கணினிக் கல்வி பெருக்கினோம், சென்னையை வாகன உற்பத்தி நகராக்கினோம், கணினி மென்பொருள் பூங்கா நிறுவினோம், அந்நிய முதலீடு பன்மடங்கானது, அமெரிக்காவுக்குக் கணினிப் பட்டதாரிகள் ஏற்றுமதி அதிகரித்தது'' என்கிறார் கருணாநிதி. எல்லாம் சரி! இவற்றால் நகர்ப்புற, நடுத்தர வர்க்கத்தினரில் கூட ஒரு சிறு பிரிவினருக்குப் பொற்கால ஆதாயமாக இருக்கலாம். உழவர் சந்தைகளும், வருமுன் காப்போம் திட்டமும், சமத்துவபுரங்களும், சில இலவசத் திட்டங்களும் யானைப் பசிக்கு சோளப் பொறிதான்.

கருணாநிதி அரசால் ஏழை, எளிய, சமானிய மக்களுக்கு ஒரு நன்மையும் கிடையாது. நரசிம்ம ராவ், ஜெயலலிதாவின் 1991-96 ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்டு சிதம்பரம் - மாறன் - வாஜ்பாய் போன்றவர்களால் தீவிரமாக அமலாக்கப்பட்ட உலகமயம், தனியார்மயம், தாராளமயம் என்ற மக்கள் விரோத கொள்கைகளின் பாதிப்புகள் கடந்த ஐந்தாண்டுகளில் கடுமையாக மக்களைப் பாதித்திருக்கிறது.

இதனால் மக்களுடைய மனநிலையை நன்கு புரிந்து கொண்ட காங்கிரசு, த.மா.கா., பா.ம.க. மற்றும் போலி கம்யூனிஸ்டுகள் ஆகிய கணிசமான ஓட்டு வங்கியைப் பெற்றுள்ள கட்சிகளை அணி சேர்ப்பதிலும், ம.தி.மு.க.வை பா.ஜ.க. - தி.மு.க. அணியிலிருந்து வெளியேற்றி, கருணாநிதியைத் தனிமைப்படுத்துவதிலும், பெரும்பான்மை சாதியினரின் ஆதரவைப் பெறுவதிலும் ஜெயலலிதா வெற்றி கண்டார். சில சிறிய சாதிக் கட்சிகளோடும் இரு தலித் அமைப்புகளோடும் தனிமைப்படுத்தப்பட்ட கருணாநிதி வீழ்த்தப்பட்டார்.

முக்குலத்தோருடைய திடமான ஆதரவைப் பெற்றுள்ள ஜெயலலிதாவின் கட்சி, எம்.ஜி.ஆர். காலத்திலிருந்தே தனக்கென நிரந்தரமானதொரு ஓட்டு வங்கியைப் பெற்றிருக்கிறது. படிப்பறிவில்லாத பாமர மக்கள் மட்டுமே எம்.ஜி.ஆர் - ஜெயலலிதாவின் பின்பலம் என்று பலரும் நம்புகின்றனர். கள்ளச் சாராயம், ஆற்று மணல் திருட்டு, புறம்போக்கு நிலங்களை வளைத்துப் போட்டு விற்பது போன்ற சட்ட விரோத, சமூக விரோத தொழில்கள் முதல் அரசு ஒப்பந்தக்காரர், சாலை போக்குவரத்து, வீடியோக் கடை, வீடு - வீட்டு மனை விற்பனை, கந்து வட்டி நிதி நிறுவனங்கள் என்று பல வழிகளிலும் தொழில் புரியும், அல்லது அரசியலையும், தரகு வேலையையுமே முழுநேர தொழிலாக கொண்ட ஒரு பொறுக்கி அரசியல் கும்பல்தான் எம்.ஜி.ஆர். - ஜெயலலிதாவின் ஓட்டு வங்கியைப் பராமரித்து வருகிறது. இவர்கள், கருணாநிதி ஆட்சியினால் முடக்கப்பட்டு, இத்தொழில்களில் ஆளும் கட்சிப் போட்டியாளர்களைக் கண்டார்கள். இவர்கள் ஆத்திரத்துடன் அரசியல் வேலை செய்து கருணாநிதியை வீழ்த்துவதற்கு அடித்தளமாக அமைந்தனர்.

ஆனால், ஒரு உண்மையை ஜெயலலிதா அணியினர் மறந்து விட்டனர். தொடரும் புதிய பொருளாதாரக் கொள்கையின் அதிதீவிர ஆதரவாளரான ஜெயலலிதா, காங்கிரசு, பா.ஜ.க. கும்பல்கள் மக்களை மேலும் கடுமையாகப் பாதிக்கும் நடவடிக்கைகள் எடுப்பது தவிர்க்க முடியாது. கூடவே ஜெயலலிதாவின் போலீசு பயங்கரவாத அடக்குமுறை கொள்கைகள், பழிவாங்கும் நடவடிக்கைகள், தொடரும் கிரிமினல் குற்றங்கள் தவிர்க்க முடியாது. விரைவிலேயே மக்கள் ஆத்திரத்துக்கு உள்ளாகும். அதற்குள்ளாகவே அரசியலை முழுமையாகக் கிரிமினல் மயமாக்குவதில் ஜெயலலிதா வெற்றி பெற்று விடுவார். அப்போதாவது ஜெயலலிதா - சசிகலா போன்ற கிரிமினல் - பொறுக்கி அரசியல் தலைமையோடு, இந்தப் போலி ஜனநாயகத்தையும் அடியோடு தூக்கி எறிந்து விட வேண்டும். இல்லை என்றால் சுழற்சி முறையில் மீண்டும் அத்தகைய சமூக விரோதிகள் ஆட்சிக்கு வருவது தவிர்க்க முடியாது.

www.padippakam.com

# அமெரிக்காவின் இராணுவ ஆதிக்கத்துக்குக் கூஜா தூக்கும் பா.ஜ.க.

அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ், அமெரிக்காவின் பாதுகாப்புக்காக ''தேசிய ஏவுகணை பாதுகாப்பு'' எனும் இராணுவத் திட்டத்தை நடைமுறைப்படுத்தப் போவதாக அறிவித்திருக்கிறார். தற்போது ஆராய்ச்சி நிலையிலுள்ள இத்திட்டம், 2004-இல், ஜார்ஜ் புஷ் அடுத்த தேர்தலைச் சந்திக்கும் பொழுது, பரிசோதனை நிலைக்கு வளர்ந்து விடும். ''அமெரிக்காவை எந்தவொரு நாடாவது ஏவுகணை மூலம் தாக்க முற்பட்டால், உலகின் எந்தவொரு பகுதியில் இருந்து அந்த ஏவுகணை அனுப்பப்பட்டாலும், அந்த ஏவுகணை பறக்கத் தொடங்கிய ஒரு சில நிமிடங்களிலேயே, அதன் பறக்கும் பாதையைக் கண்டுபிடித்து, நிலத்தில் இருந்தோ, கடலில் இருந்தோ வான்வெளியில் இருந்தோ அந்த ஏவுகணையைத் தாக்கி அழிப்பதுதான் தேசிய ஏவுகணை பாதுகாப்புத் திட்டம்'' என அமெரிக்க அரசு கூறுகிறது.

உலக மக்களின் கடும் எதிர்ப்பை சந்தித்த போர் வெறியன் ரீகனின் நட்சத்திர போர்த் திட்டத்தைதான், ஜார்ஜ் புஷ், பெயரை மாற்றிவிட்டு அறிவித்திருக்கிறார். ''அமெரிக்காவை எதிர்க்கும் லிபியா, ஈராக், ஈரான், வடகொரியா போன்ற போக்கிரி நாடுகளும் அணு ஆயுத பலம் பெற்றுள்ளதால், அமெரிக்காவின் பாதுகாப்பிற்காக இத்தகைய உயர் தொழில்நுட்ப பாதுகாப்பு அவசியம்'' எனத் தனது ஆயுதவெறியை நியாயப்படுத்துகிறது அமெரிக்கா. முன்னாள் சோவியத் ஒன்றியத்திற்கும், அமெரிக்காவுக்கும் இடையே கையெழுத்தான ஏவுகணை தடுப்பு ஒப்பந்தம், இத்தகைய உயர் தொழில்நுட்ப ஆயுதங்களைத் தயாரிக்கத் தடையாக இருப்பதால், அந்த ஒப்பந்தத்தை ஒருதலைபட்சமாக தலைமுழுகப் போவதாகவும் அமெரிக்கா கூறிவிட்டது.

முன்னாள் சோவியத் ஒன்றியத்திற்கும் அமெரிக்காவுக்கும் இடையே ஏவுகணைத் தடுப்பு ஒப்பந்தம் கையெழுத்தான பொழுது, அந்த ஒப்பந்தம் உலக சமாதானத்திற்கான மாபெரும் தொடக்கம் என இரு தரப்பாலும் வருணிக்கப்பட்டது. இப்பொழுது இந்தக் காகித ஒப்பந்தத்தை வெளிப்படையாகவே கை கழுவத் தயாராகி விட்ட அமெரிக்கா, தனது தேசிய ஏவுகணை பாதுகாப்புத் திட்டத்தை உலக நாடுகள் அங்கீகரிக்க வேண்டும் என்பதற்காக இந்தியா உள்ளிட்ட பல நாடுகளுடன் பேச்சு வார்த்தை நடத்தத் தொடங்கிவிட்டது. இதன் மூலம், இனி அமெரிக்காவின் பாதுகாப்பு தான் உலகத்தின் பாதுகாப்பு எனச் சொல்லாமல் சொல்லிவிட்டது.

அமெரிக்காவுக்கும், முன்னாள் சோவியத் ஒன்றியத்திற்கும் இடையே கையெழுத்தான பல்வேறு ஆயுதக் குறைப்பு ஒப்பந்தங்களும், அவற்றுக்கு இடையே நடந்த உலக மேலாதிக்கத்திற்கான போட்டியில் சமநிலையைப் பேணுவதற்காகப் போடப்பட்டவையே தவிர, உலக சமாதானத்திற்கும், அந்த ஒப்பந்தங்களுக்கும் எள்ளளவும் சம்பந்தம் இருந்ததில்லை. சோவியத் ஒன்றியம் சிதைந்த பிறகும், ரசியா ஆயுத பலத்தில் கிட்டதட்ட அமெரிக்காவுக்குச் சமமாக இருந்த போதிலும், அரசியல் - பொருளாதார போட்டியில் மிகவும் பின்தங்கிப் போய்விட்டது. இதனால், ரசியா தனது அணு ஆயுதங்களின் எண்ணிக்கையை ஆயிரமாகக் குறைத்துக் கொள்ளவும் முடிவு செய்துவிட்டது. இந்த நிலையில், ஒரு புதிய மேம்பட்ட தொழில்நுட்பத்தைக் கைகொள்ளுவதன் மூலம், தன்னை உலகின் ஒரே மேலாதிக்க வல்லரசாக நிலைநிறுத்திக் கொள்ள முயலுகிறது, அமெரிக்கா. தனது முன்னாள் எதிரியான ரசியா, பொருளாதாரத்தில் தனக்குப் போட்டியாக இருக்கும் பிரான்ஸ், ஜெர்மனி, ஜப்பான்; அணு ஆயுத பலம் பெற்றுள்ள 'கம்யூனிச' சீனா — இந்த நாடுகளையும் தனது இராணுவ மேலாதிக்கத்துக்கு அடிபணியச் செய்து விடலாம் எனக் கருதுகிறது அமெரிக்கா.

தென் அமெரிக்கக் கண்டத்தின் நவீன காலனிய நாடுகள் தொடங்கி, அமெரிக்காவின் ஏகாதிபத்தியக் கொள்ளையில் பங்கு போட்டுக் கொள்ளும் ஐரோப்பிய நாடுகள் வரை, அமெரிக்காவின் பாரம்பரிய கூட்டணி நாடுகள் ஒன்று கூட இந்தப் போர்வெறித் திட்டத்தை ஆதரிக்கவில்லை. அதேசமயம், இந்தத் திட்டத்தை ''ஆஹா'' எனப் பாராட்டி, கை தூக்கிய ஒரே நாடு இந்தியாதான். ஒரே அரசு பா.ஜ.க. கூட்டணி அரசுதான்!

ஜார்ஜ் புஷ் இந்தத் திட்டத்தை அறிவித்த அன்று இரவு, அவரின் அரசில் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக இருக்கும் கண்டோலீசா ரைஸ், இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் வெளியுறவுத் துறை அமைச்சராக இருக்கும் ஜஸ்வந்த் சிங்கை தொலைபேசியில் கூப்பிட்டுப் பேசுகிறார். மறுநாள், கட்சித் தலைமையைத் துதிபாடி அறிக்கை விடும் பிழைப்புவாதத் தொண்டனைப் போல, இந்தியாவின் வெளியுறவுத் துறை அமைச்சகம், புஷ்ஷின் திட்டத்தைப் புகழ்ந்து தள்ளி அறிக்கை விடுகிறது.



தேசிய ஏவுகணை பாதுகாப்புத் திட்டம் பற்றி பேச்சுவார்த்தை நடத்த வந்த அமெரிக்காவின் துணை அரசுச் செயலர் ரிச்சர்ட் ஆர்மிடெஜுடன் கைகுலுக்கும் வாஜ்பாயி.

இந்தியாவின் வெளியுறவு மற்றும் இராணுவத் துறை அமைச்சராக இருக்கும் ஜஸ்வந்த் சிங், ''கூஜாவாக இருந்தாலும் அமெரிக்காவின் கூஜாவாக இருப்பதைத்தான்'' பெருமையாக நினைப்பவர். அதனால்தான், இந்தியா சோவியத் சார்பு நாடாக இருந்த காலத்தை, பாழாய்ப் போன நாட்கள் எனக் கூறினார். அ.தி.மு.க. தொண்டன் போயஸ்


படிப்பகம்

www.padippakam.com



அமெரிக்காவின் இராணுவ மேலாதிக்க தேசிய ஏவுகணை பாதுகாப்புத் திட்டத்தை எதிர்த்து தென்கொரியத் தலைநகரில் நடந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம்.

தோட்டத்து மாடியில் ஜெயாவைப் பார்த்தவுடன் எப்படி புளகாங்கிதம் அடைவானோ, அதுபோல ஜஸ்வந்த் சிங் புஷ்ஷுடன் வெள்ளை மாளிகையில் ஒரு பத்து நிமிடம் இருந்ததை பெரும் பாக்கியமாகப் பேசிக் கொண்டு திரிகிறார். புஷ்ஷின் முட்டாள்தனம் உலகமறிந்தது. ஆனால், ஜஸ்வந்த் சிங்கோ 'புஷ்ஷைப் போல் புத்திசாலி உண்டோ?' எனத் துதிபாடிக் கொண்டு திரிகிறார். இதனால் தான், அமெரிக்கா தனது திட்டம் பற்றி அறிக்கை விட, ஆர்.எஸ்.எஸ். கும்பலுக்குள் இருந்து இந்த விசுவாசியைத் தேர்ந்தெடுத்தது போலும்!

அமெரிக்க இராணுவ மேலாதிக்கத்தைச் சமாளிக்க, இனி ரசியாவும், சீனாவும் ஆயுதக் குவிப்பில் ஈடுபடுவது தவிர்க்க முடியாததாகி விடும். சீனாவைக் காட்டி இந்தியாவும், இந்தியாவைக் காட்டி பாகிஸ்தானும், ஆயுதக் குவிப்பில் ஈடுபடலாம். இப்படி உலகை அழிவின் விளிம்பில் கொண்டு நிறுத்தப் போகும் இந்தத் திட்டம், விண்வெளியையும், ஆயுதமயமாக்கப் போகிறது. ஆனால், இந்திய அரசோ, புஷ்ஷை அணு ஆயுதங்களைக் குறைக்க வந்திருக்கும் சமாதானக் காவலனாகப் புகழ்ந்து தள்ளுகிறது.

ஈராக்கில் ஐந்து இலட்சம் குழந்தைகள் இறந்து போகக் காரணமாக இருந்த; ஈராக், யூகோஸ்லாவியா நாடுகளின் மீது குறைந்த அளவு திறன் கொண்ட அணுகுண்டுகளை வீசிய; லிபியா, சூடான் நாடுகளின் மீது திடீர் வான்வழித் தாக்குதல் நடத்திய அமெரிக்காதான் உலகின் அமைதிக்கும், சமாதானத்துக்கும் அச்சுறுத்தலாக இருக்கும் நாடு. அப்படிப்பட்ட பயங்கரவாத நாடான அமெரிக்கா லிபியா, ஈரான், ஈராக், வடகொரியா நாடுகளைப் போக்கிரி நாடுகளெனக் குற்றஞ் சுமத்துகிறது. அமெரிக்காவின் இந்த அடாவடித்தனத்தைக் கேள்வி கேட்க வக்கற்ற பா.ஜ.க., ''நாங்கள் தேசிய ஏவுகணை பாதுகாப்புத் திட்டத்தை ஆதரிக்கிறோம்; நீங்கள் பாகிஸ்தானைப் பயங்கரவாத நாடாக அறிவியுங்கள்'' எனப் பேரம் நடத்துகிறது.

ஆசியாவில் சீனாவைத்தான் அமெரிக்கா தனக்கு தலைவலி தரும் நாடாகப் பார்க்கிறது. அமெரிக்காவின் இந்த சீனா எதிர்ப்பில் பா.ஜ.க. கூட்டணி அரசும் குளிர் காயத் துடிக்கிறது. இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு ஆலோசனைக் குழுவின் தலைவராக உள்ள கே. சுப்பிரமணியம், ''பாகிஸ்தான், ஈராக், சௌதி அரேபிய நாடுகளுக்கு ஏவுகணைகளையும், அணு ஆயுதத் தொழில்நுட்பத்தையும் விற்கும், சீனாதான் பசிபிக் கடல் பகுதியில் அபாயகரமான நாடு; இதற்கு நேர்மாறாக இந்தியாவிற்கும், அமெரிக்காவிற்கும் இடையே எந்த மோதலும் கிடையாது. நமது பொதுவான எதிரி சீனாவை எதிர்த்து நாம் கூட்டணி அமைக்கலாம்'' என எழுதி, சீனாவிற்கு எதிராக அமெரிக்காவைக் கொம்பு சீவிவிடுகிறார்.

பா.ஜ.க. கூட்டணி அரசு அமெரிக்காவின் அடிவருடிகள் மட்டுமல்ல; அண்டை ஏழை நாடுகளை அமெரிக்காவின் மேலாதிக்கத்திற்குப் பலியிடத் துணை போகும் ஐந்தாம் படைகள். இந்து மதவெறியர்களைப் பொருத்தவரை தெற்காசியாவில் இந்தியாவை அமெரிக்கா அதன் பேட்டை ரௌடியாக அங்கீகரிப்பதற்காக எந்தக் கேவலமான செயலையும் செய்யத் தயாராக இருக்கிறார்கள்.

பொருளாதாரத்தை அமெரிக்காவின் கொள்ளைக்கு அகலத் திறந்து விட்ட பா.ஜ.க., காசுமீர் பிரச்சினையில் அமெரிக்காவின் தலையீட்டை ஏற்றுக் கொண்டது; அமெரிக்கா போக்கிரி நாடாக முத்திரை குத்தியுள்ள ஈரானுக்கு வாஜ்பாயி செல்லும் முன், அது பற்றி அமெரிக்க அரசுக்குத் தெரிவித்து விட்டுதான் பெட்டி, படுக்கையைத் தூக்கியிருக்கிறார். பத்திரிக்கையாளர்கள் ஜஸ்வந்த்சிங்கிடம் ''தேசிய ஏவுகணை பாதுகாப்பு தொடர்பாக இந்தியாவின் நிலை'' பற்றிக் கேட்ட பொழுது, ''அமெரிக்காவின் துணை அரசுச் செயலர் ரிச்சர்ட் ஆர்மிடெஜ் இந்தியாவின் நிலைப் பற்றிக் கூறுவார்'' எனப் பதில் அளித்திருக்கிறார். இனி வருங்காலத்தில் சீனாவின் அணு ஆயுத பலத்தைச் சமாளிக்க, இந்தியா, அமெரிக்காவின் படைதளத்தை வைத்துக் கொள்ளக் கூடச் சம்மதிக்கலாம் என முதலாளித்துவ இராணுவ வல்லுநர்களே, இந்தப் 'புதிய இந்தியா - அமெரிக்கா' உறவு பற்றிக் கருத்துத் தெரிவித்துள்ளனர். இப்படி அரசியல், பொருளாதாரம், இராணுவம், வெளிநாட்டு விவகாரங்களில் அமெரிக்காவிடம் நாட்டை அடகு வைத்து விட்ட ஆர்.எஸ்.எஸ். கும்பலுக்கு, 'தேசியம்' பற்றிப் பேச என்ன தகுதி இருக்கிறது?

கிழக்கிந்திய கம்பெனி ஆட்சியின் தொடக்கத்தில், வெல்லெஸ்லி பிரபு, இந்தியாவின் சமஸ்தான மன்னர்களைத் தனது கைப்பிடிக்குள் கொண்டுவர துணைப் படைத் திட்டத்தைக் கொண்டு வந்தான். இதன்படி, சமஸ்தான மன்னர்கள் ஆங்கிலேயப் படையை தங்கள் படைகளோடு சேர்த்துக் கொண்டார்கள். இது, அண்டை நாட்டில் (சமஸ்தானம்) இருந்து, தங்களது நாட்டைப் பாதுகாக்கும் எனக் கனவு கண்டார்கள். ஆனால் நாடே வெள்ளையனுக்கு அடிமையானது.

இன்று, வெல்லெஸ்லி பிரபுவுக்குப் பதிலாக அமெரிக்கா; சமஸ்தான மன்னர்களுக்குப் பதிலாக பா.ஜ.க. கூட்டணி அரசு; துணைப் படைத் திட்டத்திற்குப் பதிலாக தேசிய ஏவுகணை பாதுகாப்பு. நாடு எந்த நிலையை நோக்கி இழுத்துச் செல்லப்படுகிறது என்பதை நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்.

● பஷீர்

www.padippakam.com

## கோவை உயிரியல் பூங்கா:

# மேட்டுக்குடியின் உல்லாசத்திற்கு பழங்குடியினரின் வாழ்வு பறிப்பு

**கோ**வை மாநகரிலிருந்து ஏறத்தாழ 30 கி.மீ. தொலைவிலுள்ள ஆனைக்கட்டி மலைப்பகுதி, இயற்கை எழிலும் வன வளமும் நிறைந்த பகுதியாகும். மலைக் குன்றுகளும் பள்ளத்தாக்கும் சமவெளியும் உள்ளடக்கிய 20,000 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட மலை சார்ந்த இவ்வனப் பகுதியில் பழங்குடியின மக்கள் பெரும்பான்மையின ராக உள்ளனர். காட்டு விலங்குகள் வாழ்வ தற்கான சூழலும் மிதமான தட்ப வெப்ப நிலையும் இயற்கை வளமும் நிறைந்த இப்ப குதி இன்று போர்க்களமாகக் காட்சியளிக் கிறது.

கடந்த சில மாதங்களாக இப்பகுதியில் காட்டு யானைகள் கூட்டம் கூட்டமாக வந்து அட்டகாசம் செய்து வருகின்றன. விவசாய நிலங்களையும் பயிர்களையும் நாசப்படுத்தி யதோடு, ஒரு துணி வியாபாரியை காலால் மிதித்துக் கொன்றுள் ளன. யானைகளை மீண்டும் காட்டுக்குள் விரட்ட வனத்துறை யினர் ''ராக்கெட்'' வெடி வைத்தும் கூட, அவை வெளியேறாமல் திரும் பவும் சுற்றி வருகின் றன. யானைகளின் அட்டகாசம் பற்றியும் மக்கள் பயபீதியில் வாழ்வதைப் பற்றியும் நாளேடுகள் அன்றாடம் செய்திகளைத் தாங்கி வருகின்றன.

கூட்டமாக வந்து தாக்கும் இந்த யானைகள் மதம் பிடித் தவை அல்ல; தமது குட்டிகளுடன் குடும்ப மாக உள்ளவைதான். இந்த யானைகள் இதற்கு முன் இப்படி கிராமங்களுக்கு வந்து பயிர்களை நாசப்ப டுத்தி அட்டகாசம் செய்ததுமில்லை. அப்ப டியானால், இப்போது மட்டும் யானைகள் இவ்வாறு நடந்து கொள்வது ஏன்?

ஆனைக்கட்டி மலையில் 24 வீராண்டிப்புதூர் பகுதியில் மலைசார்ந்த காட்டுப் பகுதியைக் கொண்ட 18 குக்கிராமங்கள் உள்ளன. இதில் தூவைப் பதி என்ற ஒரு கிராமம் உள்ளது. இங்கு கொடுங்கரைப் பள்ளம் அருகில் உள்ள ஆற்றுக்கு ஆண்டு தோறும் கோடை காலங் களில் யானைகள் கூட்டமாக தண்ணீர் குடிக்க வருவது வழக்கம். ஏறத்தாழ ஒரு வார காலத்துக்கு யானைகள் இங்கு தங்கி இளைப்பாறிவிட்டுத் திரும்பச் சென்று விடும்.

இவ்வாண்டில் தூவைப்பதி கிராமத்தில் 400 ஏக்கர் பரப்பளவுக்கு நிலத்தைச் சுற்றி முள்கம்பி வேலி அமைக்கப்பட்டுள்ளது. இதனால் காட்டு யானைகளும் பிற விலங்கு களும் வழக்கமாகப் பயன்படுத்தி வந்த இயற்கை வழித்தடங்கள் அடைபட்டுப் போனது. எனவே அவை கிராம மக்கள் பயன்படுத்தும் வழித்தடங்களில் வந்து திரும்பிச் செல்ல வழிதவறி அட்டகாசம் செய்கின்றன.

யானைகளின் அட்டகாசத்துக்கும் தாக்கு தலுக்கும் காரணமாக இருப்பது முள்கம்பி வேலி. எதற்காக இந்த முள்கம்பி வேலி? அது ஓர் ஆக்கிரமிப்பின் அடையாளம். இதன் பின்னணியில் பழங்குடி மக்களின் வாழ்வுரிமை பறிக்கப்பட்டு, அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள துயரக் கதை புதைந்து கிடக்கிறது.

★ ★ ★

**கோ**வை பி.எஸ்.ஜி. குழுமத்தின் பயனீர் மில் நிறுவனத்தின் நிர்வாக இயக் குனர் ஜி. ரங்கசாமி நாயுடு. இவரது தலை மையில் பறவையியலாளர்கள், சூழலியலா ளர்கள், கால்நடை விஞ்ஞானிகள், தொழில திபர்களை உள்ளடக்கிய ஓர் அமைப்பு, உயி ரியல் பூங்காவைத் தொடங்குவதெனத் தீர்மானித்து, அதற்கு ''கோவை உயிரியல் பூங்கா'' என்றும் பெயர் சூட்டியது. இந்த உயிரியல் பூங்காவைத் திறந்தவெளி காட்சி யகம், நீலகிரி உயிர்ச் சூழலின் தனித்த பகுப் பாய்வு மையம், புதுவித விலங்கு அருங் காட்சியகம், சுற்றுலா மையம், விலங்கு காட்சியக விரிவாக்கம் முதலானவற்றைக் கொண்டதாக அமைப்பதென முடிவு செய்து அரசாங்கத்திடம் அனுமதியும் பெற்றனர்.


கோவை அருகே, ஊருக்குள் புகுந்து அட்டகாசம்:

'ராக்கெட்' வெடி வைத்து யானைகளை விரட்ட திட்டம்

தினத்தந்தி 20—5—2001

மாலைமுரசு

'ஆபரேஷன் ஜம்போ' தோல்வி

முதல் கட்ட நடவடிக்கை தோல்வி

காட்டுக்குள் செல்ல மறுக்கும் யானைகள்

ஊருக்குள் வராமல் தடுக்க மின்சாரவேலி அமைப்பு

வனத்துறையினர் கண்காணிப்பு

கோவை மாவட் டத்தின் மலை சார்ந்த கிரிராமங்களை ஆக்கிர மித்து பழங்குடி மக்களை வெளியேற் றுவது, உயிரியல் பூங்கா - ஆய்வு - காட்சியகம் மூலம் எதிர்காலத்தில் கோடி கோடியாய் சம்பாதிப் பது என்பதே அவர் களின் திட்டமாகும். இதன் விளைவாக பழங்குடி மக்களின் வாழ்வுரிமை பறிக்கப் படுவதோடு காட்டு விலங்குகளுக்கு இடர்பாடும், சுற்றுச் சூழல் பாதிப்பும் ஏற்படும் என்று அறிந்தும் கூட அர சாங்கம் இப்பூங் காவைத் தொடங்க அனுமதி அளித்துள் ளது. இருப்பினும், தமது வாழ்வுரி மையும் காட்டு விலங் குகளின் சுதந்திரமான நடமாட்டமும் பறிக் கப்படுவதை எதிர்த்து பழங்குடி மக்கள் போராடியதால் 1986-இல் தொடங்

கப்பட்ட இத்திட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது.

பின்னர், தூவைப்பதி கிராமத்தில் உயிரியல் பூங்கா அமைக்கும் திட்டத்தை மூடிமறைத்து, கோழிப் பண்ணையும் செங்கற்சூளையும் அமைக்க குத்தகை அடிப்படையில் ஐந்தாண்டு காலத்திற்கு நிலம் தேவைப்படுவதாக ஜி. ரங்கசாமியின் ஆட்கள் நைச்சியமாகப் பேசி பழங்குடி மக்களின் நிலங்களைக் கைப்பற்றத் தொடங்கினர். அதைத் தொடர்ந்து நஞ்சன், பீமன், கரட்டி, பொன்னன் ஆகிய நான்கு பழங்குடி விவசாயிகளைக் கோவைக்குக் கடத்தி வந்து குத்தகைக்குத் தரப்பட்ட நிலங்களை விலைக்கு வாங்கியதாக மிரட்டி பத்திரப் பதிவு செய்து நிலத்தைப் பறித்துக் கொண்டு விரட்டியடித்தனர். கிராம நிர்வாக அதிகாரியான ஜீவா மோகன்ராஜ், வெளிப்படையாகவே ரங்கசாமியின் அடியாளாகச் செயல்பட்டார். ஏழை விவசாயிகளிடம் நைச்சியமாகப் பேசி, அவர்களுக்குச் சாராய விருந்து வைத்து அடிமாட்டு விலைக்கு நிலங்களைப் பறித்து பத்திரப் பதிவும் செய்து ஏழை விவசாயிகளை மோசடி செய்தார். கணிசமான அளவுக்கு நிலங்களைக் கைப்பற்றியதும், ''நாங்கள் கொடுக்கும் பணத்தைப் பெற்றுக் கொண்டு நிலப்பட்டாக்களை எங்களிடம் கொடுத்து விடுங்கள். இல்லையென்றால் நீங்கள் நீதிமன்றத்துக்கு அலைந்து அற்பமான தொகையைத்தான் பெற வேண்டி வரும்'' என்று மிரட்டி அறியாமையிலுள்ள விவசாயிகளின் நிலங்களை அபகரித்துக் கொண்டார். வேட்டு என்பவரது பட்டாவைப் புதுப்பித்துத் தருவதாக ஆசைகாட்டி, அற்பமான தொகை கொடுத்து நிலத்தைப் பறித்து ரங்கசாமியிடம் ஒப்படைத்துள்ளார்.

இப்படிப் பலர் நிலத்தைப் பறிகொடுத்து பரிதவிப்பதை உணர்ந்த பழங்குடி மக்கள், இனி உயிரியல் பூங்காவுக்காக நிலத்தைக் கொடுக்கக் கூடாது என்று முடிவு செய்து எதிர்ப்பு தெரிவித்து வந்தனர். இந்நிலையில் 1995-ஆம் ஆண்டு ரங்கசாமியின் அடியாட்கள் தூவைப்பதி கிராமத்தில் 3 மலைக் குன்று, பள்ளத்தாக்கு, சமவெளி - விவசாய நிலங்களையும் விலங்குகளின் இயற்கை வழித்தடங்களையும் ஆக்கிரமித்து 400 ஏக்கர் பரப்பளவுக்கு முள்கம்பி வேலி அமைக்க முற்பட்டனர். பழங்குடியின மக்கள் இந்த அட்டூழியத்துக்கு எதிராக ஓரணியில் திரண்டெழுந்து போராடியதால், முள்கம்பி அமைப்பதைத் தற்காலிகமாக நிறுத்தினர். பின்னர் போலீசு துணையுடன் முள்கம்பி அமைக்க முயற்சித்தனர். மீண்டும் பழங்குடி மக்கள் உறுதியாக நின்று போராடியதால் போலீசும் தற்காலிகமாகப் பின்வாங்கிக் கொண்டது.

இருப்பினும் தரகுப் பெருமுதலாளி ரங்கசாமியின் வெறி அடங்கிவிடவில்லை. கடந்த மார்ச் 14-ந் தேதியன்று ரங்கசாமியின் அடியாட்கள் பெரும்படையாக வந்து முள்கம்பி வேலி அமைக்க முற்பட்டனர். அவர்களை தூவைப்பதி மக்கள் கல்லெறிந்து விரட்டியதும், மறுநாள் இந்த அடியாட்படையுடன் ஆயுதம் தரித்த 200-க்கும் மேற்பட்ட போலீசு படை வந்திறங்கி கம்பி வேலி அமைக்கக் கிளம்பியது. போலீசுப் படையை எதிர்த்து பழங்குடி மக்கள் கல்லெறிந்து போராடத் தொடங்கியதும், சமரச நாடகமாடிய மாவட்ட போலீசு கண்காணிப்பாளர், வட்டாட்சியர் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடத்த முன் வந்தார். வட்டாட்சியரோ, ''நீங்கள் நிலத்தை விட்டு வெளியேறி விட வேண்டும்; உங்களுக்கு வேறிடத்தில் 50 சென்ட் அளவுக்கு நிலம் கொடுக்க கலெக்டர் மூலம் ஏற்பாடு செய்கிறேன். இதை ஏற்காவிட்டால் அருகிலுள்ள கேரளாவுக்கு சட்டி எடுத்துக் கொண்டு ஓடுங்கள்'' என்று திமிராகக் குரைத்தார். இதை ஏற்க மறுத்த பழங்குடி மக்கள், கிராம பஞ்சாயத்தில் இதுபற்றி பேசி எமது முடிவைத் தெரிவிக்கிறோம் என்று கூறி திரும்பிவிட்டனர்.

இச்சமயத்தில், ஆனைக்கட்டி மலை சார்ந்த கிராம மக்களின் தலைவராக இருந்து இப்போராட்டத்தை வழிநடத்தி வந்த இராமசாமியின் வீட்டுக்கு ரங்கசாமியின் அடியாட்கள் தீ வைத்து பெருத்த சேதத்தை விளைவித்தனர். பழங்குடியினர் பகுதியில் நிலம் வாங்கியிருந்த இந்திரா சுப்பிரமணியம் என்ற பொறியியலாளர், ரங்கசாமியின் உயிரியல் பூங்காவுக்கு தனது நிலத்தைத் தர மறுத்ததால், அடியாட்கள் அவரைத் தாக்கியதோடு, அவரது நிலத்துக்கான பாதையையும் அடைத்து விட்டனர்.

இந்த அடியாள் படைக்கு உறுதுணையாக தி.மு.க. பகுதி செயலர் சின்னசாமி, சிவா, நாகராஜ், செல்வன் முதலானோரைக் கொண்ட உள்ளூர் ரெளடிக் கும்பல் கூலிப்படையாகச் செயல்பட்டு வருகிறது. கடந்த மார்ச் 29-ந் தேதியன்று சாராய போதையில் வந்த இந்த கும்பல் பெண்களை மானபங்கப்படுத்தி, சங்கப் பலகையை அடித்து நொறுக்கி, கொட்டியன் என்ற 70 வயது முதியவரைத் தாக்கி மண்டையை உடைத்தது. இதை எதிர்த்து பழங்குடி மக்கள் திரண்டதும் கண்முன் தெரியாமல் அவர்களையும் தாக்கி விட்டு தப்பியோடியது. அதேநாளில் அங்கு வந்த வட்டாட்சியர், ''உடனடியாக நிலத்தை விட்டு வெளியேறி விடுங்கள்'' என்று மீண்டும் எச்சரித்து விட்டுச் சென்றார். பழங்குடியின மக்கள், ''உயிரே போனாலும் இந்த மண்ணை விட்டு வெளியேற மாட்டோம்!'' என்று உறுதியாக நின்றனர்.



''உயிரியல் பூங்கா அமைக்காதே! வாழ்வுரிமையைப் பறிக்காதே!'' - சாலை மறியல் போராட்டத்தில் பழங்குடி மக்கள்.

இந்நிகழ்வுக்குப் பிறகு, பழங்குடி மக்கள் வெளியே வர அச்சப்படுமளவுக்கு போலீசு துணையுடன் ஆனைக் கட்டியில் ரெளடிக் கும்பல் கோரத் தாண்டவமாடியது. பேருந்துகளில் போலீசும் ரெளடிகளும் 'சோதனை' மேற்கொண்டு பழங்குடி மக்களை அச்சுறுத்தினர். ரெளடிக் கும்பலால் படுகாயமடைந்த முதியவர் கொட்டியன் உள்ளிட்ட 5 பேருக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கக் கூட முடியாமல் பழங்குடி மக்கள் பரிதவித்தனர்.

இந்நிலையில், மார்ச் 31-ஆம் தேதியன்று ஒரு இளைஞர் தன்னை பூலுவம் பட்டி ராஜீவ் காந்தி நற்பணி மன்றத்தைச் சேர்ந்த சமூக சேவகர் என்று கூறிக் கொண்டு கிராம மக்களைச் சந்தித்து ஆறுதல் கூறினார். காயமடைந்தவர்களுக்கு மருத்துவமனையில் சிகிச்சை பெற உதவி செய்வதாகவும் கூறினார். அவரது பேச்சை நம்பி காயமடைந்தவர்களுடன் அவர்களது உறவினர்களுமாக 20 பேர் அன்று இரவு புறப்பட்டனர். ஆனால், அவனோ போலீசின் கையாள். தன்னை நம்பி வந்த அப்பாவிகளான பழங்குடி மக்களை துடியலூர் போலீசு நிலையத்தில் ஒப்படைத்துவிட்டு ஜான் பாஸ்கோ என்ற அந்த இழிபிறவி தப்பியோடி விட்டான்.

அந்த நள்ளிரவில், மாவட்ட நீதிபதி வீட்டில் 20 பேரையும் கொண்டு வந்து நிறுத்திய போலீசு, அவர்கள் மீது பிணையில் வெளிவர முடியாத குற்ற வழக்கு தொடுத்து சிறையிலடைப்பதற்கான உத்திரவையும் பெற்று உடனே கோவை மத்திய சிறையில்

www.padippakam.com

அடைத்தது. ஒரு மாதத்திற்கும் மேலாக சிறையில் வாடிய அவர்களது பரிதாப நிலையை அறிந்த ஜனநாயக உணர்வுள்ள சில வழக்கறிஞர்களின் முயற்சியால் இப்போது அவர்களுக்கு நிபந்தனைக்குட்பட்ட பிணை கிடைத்துள்ளது.

முன்னணியாளர்கள் சிறையில் இருக்கும்போது, ரங்கசாமி 500-க்கும் மேற்பட்ட தனது ஆட்களைக் கொண்டு ஒரு வாரத்திற்குள் தூவைப்பதி கிராமத்தின் 400 ஏக்கர் பரப்பளவை ஆக்கிரமித்து முள்கம்பி வேலியை அமைத்து முடித்து விட்டார். இந்த அட்டூழியத்துக்கு 300-க்கும் மேற்பட்ட ஆயுதம் தாங்கிய போலீசார் பாதுகாப்பாக நின்றனர்.

இன்று தூவைப்பதி பழங்குடி மக்கள் பாரம்பரியான தங்களது நிலத்திலிருந்தும் வீடுகளிலிருந்தும் விரட்டியடிக்கப்பட்டு பரிதவிக்கின்றனர். விவசாய வேலைகளுக்குச் செல்ல முடியாமலும் கால்நடைகளுக்கு மேய்ச்சல் நிலமின்றியும் நாடோடிகளாக்கப்பட்டுள்ளனர். யானைகளின் அட்டகாசம், காட்டு விலங்குகளின் தாக்குதல், போலீசின் பொய் வழக்கு, ரங்கசாமியின் கூலிப் படையினரது அச்சுறுத்தல் முதலான அனைத்தையும் எதிர்கொண்டு ஆனைக்கட்டி பகுதியில் குமுறிக் கொண்டிருக்கின்றனர். இந்த உண்மைகளை உள்ளூர் பத்திரிக்கைகள் நன்கறிந்துள்ள போதிலும், தரகுப் பெருமுதலாளி ரங்கசாமியின் ஆதிக்கத்தைக் கண்டு அஞ்சி காந்தீயக் குரங்குகளாகி நிற்கின்றன.

தூவைப்பதி பழங்குடி மக்களின் வாழ்வுரிமையைப் பறித்து உயிரியல் பூங்கா அமைப்பது மட்டுமல்ல; கோவாவில் மீனவர்களை துரத்தியடித்துவிட்டு உல்லாச விடுதிகள் - சுற்றுலாத் தலங்கள்; ஒரிசாவில் பழங்குடி மக்களை விரட்டியடித்துவிட்டு பாக்சைட் சுரங்கங்கள்; பாரம்பரிய விவசாயத்தை நாசமாக்கி கிழக்கு கடற்கரை நெடுக இறால் பண்ணைகள்; தருமபுரி - சேலம் மலைக்குன்றுகளை ஆக்கிரமித்து கிரானைட் கற்களை கொள்ளையடித்தல் - என்று தரகுப் பெரு முதலாளிகளும் அவர்களின் எஜமானர்களான அந்நிய ஏகாதிபத்தியவாதிகளும் நாட்டையும் மக்களையும் தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவந்து சூறையாடத் துடிக்கின்றனர். இவர்களுக்குத் துணை போகும் ஓட்டுக் கட்சித் துரோகிகளோடு சேர்த்து இந்த ஆதிக்கக் கும்பலை ஒழித்துக் கட்டி நமது நாட்டையும் மண்ணையும் மீட்டாக வேண்டும்.

இந்தச் சூழலில் தமது வாழ்வுரிமை பறிக்கப்பட்டதற்கு எதிராகப் போராடும் தூவைப்பதி பழங்குடி மக்களுக்கு ஆதரவாக நிற்கப் போகிறோமா? அல்லது ரங்கசாமியின் உயிரியல் பூங்காவை ரசிக்கப் போகிறோமா?

**தகவல்: பு.ஜ. செய்தியாளர்கள், கோவை.**

**11-ஆம் பக்கத் தொடர்ச்சி**

அறவே முடங்கிவிட்டது. அரசாங்கம் கொடுக்கும் வேலை உத்திரவாதத் திட்டங்கள் யானை பசிக்கு எள்ளுருண்டை கொடுப்பது மாதிரி பெயருக்கே நடக்கிறது. அதிலும் பாதிக்கு மேல் அதிகாரிகளின் ஊழலும், பதுக்கலும் தின்று விடுகின்றன.

இன்னொரு பக்கம் இந்திய உணவுக் கழகத்தில் 50 மில்லியன் டன் உணவுப் பொருட்கள் கையிருப்பில் உள்ளன. மழையில் நனைந்து கொண்டும், வெயிலில் காய்ந்து கொண்டும், எலி, பூச்சிகள் அரித்து நாசமாக்கியும் கேட்பாரின்றி வீணாய்க் கொட்டிக் கிடக்கிறது. மலைபோல் குவிந்திருக்கும் உணவுப் பொருட்களோடு, வாங்கும் திறனின்றி பட்டினியால் சாகும் பிணங்களின் மலை போட்டிப் போட்டுக் கொண்டு உயர்வதைக் கண்ட பிறகும், முறையான நிவாரண உதவிகளைச் செய்ய மறுக்கும் ஆட்சியாளர்கள் 'வல்லரசு' தினவெடுத்துத் திரிகின்றனர்.

1993-94-இல் எடுக்கப்பட்ட தேசிய மாதிரி கணக்கெடுப்பின்படி வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர் விகிதம் 36 சதமாக இருந்தது. 2000 2001-இல் எடுக்கப்பட்ட விவரப்படி அது 25.9 சதமாக குறைந்துள்ளது. இதற்கு அரசின் புதிய பொருளாதாரக் கொள்கையே காரணம் என்று மார்தட்டிக் கொள்கிறார் பிரதமர் வாஜ்பாயி. அதோடு 2007-ஆம் ஆண்டுக்குள் 'பசியற்ற இந்தியாவை உருவாக்குவோம்' என்றும் சவடாலடிக்கிறார்.

ஆனால், நடைமுறையில் புதிய பொருளாதாரக் கொள்கை நாட்டின் ஒட்டுமொத்த விவசாய உற்பத்திக்கே சவக்குழி வெட்டுவது ஒருபுறமிருக்கட்டும்; பசியற்ற இந்தியாவை உருவாக்கப் போகும் இந்த ஆட்சியாளர்களின் அக்கறையே வெறும் உதட்டளவில் ஆனதுதான்.

ஐந்து மாநிலங்களில் ஏற்பட்டுள்ள நிலைமைகளில் அக்கறை எதுவுமில்லாத மாநில அரசுகளை எதிர்த்து உச்சநீதி மன்றத்தில் பொதுநல வழக்கொன்று பதிவு செய்யப்பட்டது. ஜனநாயகத்தின் அவலம் சந்தி சிரிப்பதைப் பொறுக்காத உச்சநீதி மன்றம் நான்கு மாநில அரசுகளையும், உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு கண்டித்துள்ளது. தம் சொந்த மக்கள் சாவதைக் கண்டு நெஞ்சு துடிக்காத இக்கேடுகெட்ட ஆட்சியாளர்களை உச்சநீதி மன்றம் குட்டிய பிறகுதான் ஆளுக்கொரு நிவாரண அறிக்கை விடத் தொடங்கியுள்ளனர். ஆனால், இந்தக் கண்டனங்கள், அறிக்கைகள் எல்லாம் கண் துடைப்பு வேலைகள்தான்.

இப்போதும் நிவாரண உதவிகளுக்காக மக்கள் கூட்டம் கூட்டமாகக் காத்திருப்பதும், அதே ஊரில் இந்திய உணவுக் கழகத்தில் உணவுப் பொருட்கள் பூட்டிக் கிடப்பதும் தொடரவே செய்கிறது. இதற்கு எதிராக பழங்குடியின மக்கள் என்ன செய்ய முடியும்?

ஏற்கனவே பட்டினி கிடப்பவர்கள் ஆட்சியாளர்களைக் கண்டித்து போலி கம்யூனிஸ்டுகள் வழியில் உண்ணாவிரதம் இருக்க முடியாது. நிவாரண உதவிகளில் ஊழல் செய்பவர்களை நம்பி ஓட்டுக் கட்சிகளின் பாணியில் மனு கொடுக்க முடியாது. ஒரே வழி உணவுக் கிடங்குகளைச் சூறையாடுவதுதான்.

அதைத்தான் வெள்ளோட்டம் பார்த்தனர் ராஜஸ்தானில். உதய்பூர் நகரில் பட்டினியால் பாதிக்கப்பட்ட மக்கள் இந்திய உணவுக் கழகத்தை நோக்கி பேரணியொன்றை நடத்தினர். ஏறக்குறைய 3000 பேர் கலந்து கொண்ட பேரணியின் முன்னே மாபெரும் சுத்தியல் ஏந்தி செல்லப்பட்டது. நம்பிக்கையான இத்தொடக்கம் உணவுக் கிடங்குகளை மட்டுமல்ல, அரசு இயந்திரத்தையே நொறுக்காமல் ஓயாது.

**— இளங்கவி**

**இராசஸ்தானில் பழங்குடி இனப் பெண்கள் இந்திய உணவுக் கழகத்தின் முன் நடத்திய ஆர்ப்பாட்டம்: வெடிக்கப் போகும் உணவுக் கலகத்தின் அறிகுறி.**




படிப்பகம்

www.padippakam.com

# மறுகாலனியாதிக்கத்தை முறியடிப்போம்!

## - புரட்சிகர அமைப்புகளின் மே தின அறைகூவல்

மே தின வரலாறு இரத்தத்தால் எழுதப்பட்டது. ''எட்டு மணிநேர உழைப்பு; எட்டு மணி நேர ஓய்வு'' என்கிற மாபெரும் வெற்றியை ஈட்டிய அந்நாளை உலகெங்கும் உள்ள தொழிலாளர் வர்க்கம் பெருமிதத்தோடும் எழுச்சியோடும் நினைவு கூர்கிறது. தனது ஒற்றுமையை, வலிமையை வெளிப்படுத்தவும், முதலாளி வர்க்கத்தின் போலி ஜனநாயக வேடத்தைத் திரைகிழித்துப் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கு அறைகூவல் விடுக்கும் வரலாற்றுக் கடமையை நினைவுபடுத்தவுமே மேதினம் போராட்ட நாளாகக் கடைபிடிக்கப்படுகிறது.

ஆனால், திரிபுவாத சி.பி.ஐ., சி.பி.எம். கட்சிகளுக்கோ 'புரட்சித் தலைவி'யை முதல்வர் நாற்காலியில் அமர்த்துவதுதான் மே தின உறுதிமொழி என்றாகிவிட்டது. இந்நிலையில் மக்கள் கலை இலக்கியக் கழகம், புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி, விவசாயிகள் விடுதலை முன்னணி, புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி ஆகிய புரட்சிகர அமைப்புகள் தமிழகமெங்கும் பேரணி, பொதுக்கூட்டம், துண்டு பிரசுர விநியோகம், கலை நிகழ்ச்சிகள் மூலம் மே தினத்தை மறுகாலனியாதிக்கத்திற்கு எதிரான போராட்டமாக நடத்தின.

நாடு பன்னாட்டு நிறுவனங்களின் வேட்டைக்காடாக மாறி வருவதையும், ஓட்டுக் கட்சி பிழைப்புவாதிகள், போலி கம்யூனிசக் கட்சிகள், துரோகத் தொழிற்சங்கங்கள் எவ்வாறு தொழிலாளர், விவசாயிகளுக்கு எதிராக ஒன்றுபட்டு நிற்கின்றன என்று அம்பலப்படுத்தியும், மறுகாலனியாக்கத்திற்கு எதிரான போராட்டம் பரந்துபட்ட உழைக்கும் மக்களின் ஆதரவோடு போர்க்குணத்தோடு முன்னெடுக்க வேண்டிய அவசியம் குறித்தும் மேதின கூட்டங்களில் மையக் கருத்தாகப் பேசப்பட்டது.

### மதுரையில்...

மே தினத்தன்று மதுரையில் ம.க.இ.க., பு.மா.இ.மு., வி.வி.மு. சார்பாக மிதிவண்டி பேரணி நடத்தப்பட்டது. சுப்பிரமணியபுரத்தில் காலை பத்து மணிக்குத் தொடங்கிய பேரணி மதுரை நகர் முழுவதும் சுற்றி வந்து தொடங்கிய இடத்திலேயே மாலையில் முடிந்தது. மறுகாலனியாதிக்க எதிர்ப்பு, தேர்தல் புறக்கணிப்பு முழக்கங்களுடன் பேரணி, உழைக்கும் மக்கள் குடியிருப்புகள் உள்ள பாதைகளைத் தேர்வு செய்து சென்றது, பெரும் வரவேற்பைப் பெற்றது.

### சென்னையில்...

அம்பத்தூரில் டன்லப் தொழிற்சாலை யருகே தொடங்கி அம்பத்தூர் - பழைய பேருந்து நிலையத்தில் பொதுக்கூட்டம் நடந்த இடத்திற்கு எழுச்சியுடன் நடைபோட்டது மே தினப் பேரணி. இப்பேரணியில் நாடு மறுகாலனியாவதை எதிர்த்த முழக்கங்கள் விண்ணதிர முழங்கின. கருப்பு அங்கியும், அமெரிக்கத் தொப்பியும் அணிந்து உலக வர்த்தகக் கழகத்தைச் சித்தரித்து வேடமிட்டு வந்தவரை, தோழர்கள் விரட்டியடிப்பதைப் போல் நடத்தி வந்த காட்சி மக்களின் கவனத்தை ஈர்த்தது.

சிறப்புரையாற்றிய தோழர். லோகநா, தன் கரும்பு,நெசவு, பால் மற்றும் விவசாயத் துறைகளிலும், சிறு தொழில்கள் உற்பத்தியிலும் தன் கொடிய கரங்களை நுழைத்து ஆதிக்கம் செலுத்த முயற்சிக்கும் பன்னாட்டு நிறுவனங்களின் இலாப வெறியைத் தோலுரித்துக் காட்டி, அதற்கு இங்குள்ள ஆட்சியாளர்கள் எட்டப்பனாக மாறித் துரோகமிழைப்பதையும் தொகுத்துப் பேசியது மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது.

ஓட்டுக் கட்சிகளின் இடையறாத தேர்தல் பிரச்சாரச் சூழலுக்கு நடுவிலும் குழுமி நின்ற மக்கள் ம.க.இ.க.வின் புரட்சிகரக் கலை நிகழ்ச்சி முடியும் வரை கருத்துகளைக் கேட்டனர். தேர்தல் பாதை திருடர் பாதை என்று வலியுறுத்தி நக்சல்பாரி பாதையை முன்மொழிந்த பாடல் வரிகளோடு நிகழ்ச்சி நிறைவு பெற்றது.



மறுகாலனியாதிக்கத்தை எதிர்த்து சென்னையில் நடந்த மே தின எழுச்சிப் பேரணி

### உசிலம்பட்டியில்...

மே தினத்தையொட்டி அறைக் கூட்டம் நடத்தப்பட்டது. மறுகாலனியாதிக்கத்தை எதிர்த்த முழக்கங்கள் அடங்கிய சுவரொட்டிகள் நகரெங்கும் பரவலாக ஒட்டப்பட்டன. உழைக்கும் மக்களின் வாழ்க்கை பிரச்சனைகளைத் தொகுத்து, நமக்குள்ள உரிமைகளைப் பெறுவதற்கான போராட்டத்தை அறிவிக்கும் நாள் மே நாள் என்று விளக்கிப் பேசப்பட்டது.

தகவல்:
ம.க.இ.க., பு.மா.இ.மு.,
வி.வி.மு., பு.ஜ.தொ.மு.,
தமிழ்நாடு.

# வாசகர் கடிதம்

★ அரசியல் கட்சிகளை நம்பி வேதனைக்குள்ளான 47 சதம் மக்கள் தேர்தலைப் புறக்கணித்ததற்காக தேர்தல் நேசர்கள் திட்டித் தீர்த்துக் கொண்டிருக்கும் வேளையில் தேர்தல் புறக்கணிப்பு ஏன்? கட்டுரை புதிய நம்பிக்கையைத் தோற்றுவிக்கும் விதத்தில் அமைந்திருந்தது.

—பி. தர்மராஜ்,
திருச்சி.

★ சட்டம் சாதாரண மக்களை ஒடுக்கும். அரசியல்வாதிகள் அதைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்பதைச் சொல்லிய வடிவம் சிறப்பு. சரியான நேரத்தில் பொருத்தமான தலையங்கம். அடிப்படை வசதிக்காக சில கிராமங்கள் தேர்தலைப் புறக்கணித்தாலும் ஒரு புரட்சி நடத்தப்பட வேண்டும் என்ற திசையில் இந்த அமைப்பு முறைக்கு எதிராகக் கலகம் செய்ய வேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டியது தேர்தல் புறக்கணிப்பு ஏன்? கட்டுரை.

— வாசகர் வட்டம்,
திருச்சி.

★ உலகமயமாக்கல், தனியார்மயமாக்கல் என்ற அடிப்படையில் பா.ஜ.க. அரசாங்கம், இருக்கின்ற அத்தனை துறைகளையும், தனியாருக்குத் தாரைவார்த்து விட்டு, இந்தியாவின் முதுகெலும்பாகக் கருதப்படும் உழைக்கும் மக்களின் வாழ்க்கையைக் குழிதோண்டிப் புதைத்துக் கொண்டிருக்கிறது என்பதை விளக்கிய கோவை மாநாடு கட்டுரை சிறப்பு.

— வே. கணேசமூர்த்தி,
பரமக்குடி.

★ போலி ஆயுத பேர ஊழல் மூலம் மதவாத சக்திகளின் போலியான தேசப்பற்று வெளுத்துவிட்டது. அதற்கு வக்காலத்து வாங்குகிறார் ''ஆனாரூனா''. இதுதான் இன்றைய இந்தியா பக்கத்தைக் கண்டபின் நெஞ்சு பொறுக்கவில்லை.


— கே. ஷபியுல்லா,
ஏரிப்புதூர்.



Published and Owned by A. SHANMUGARAJ, 25, Arunachalam St., Jothiramalingo Nagar, Chennai - 600 083.

PUTHIYA JANANAYAGAM (TAMIL FORTNIGHTLY) REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPER FOR INDIA UNDER NO. 42648/85 Regd. No. TN/Chief.PMG- 544 / 2001

# இதுதான் இன்றைய இந்தியா




இதோ இந்தப் படத்தில் சென்னை நுங்கம்பாக்கத்திலுள்ள "எச்.எஃப்.ஓ" என்ற நடன விடுதி (டிஸ்கொத்தே கிளப்) மூடப்பட்டிருப்பதைத்தான் நாம் பார்க்கிறோம். "மராமத்துப் பணிகள் நடைபெறுவதால் எச்.எஃப்.ஓ. மூடப்பட்டிருப்பதாக" அவ்விடுதியின் கதவில் ஒட்டப்பட்டுள்ள அறிவிப்பு கூறுகிறது. கருணாநிதியின் மருமகனும் தொழில் அமைச்சருமான மாறனின் மகன் தயாநிதி மாறனுக்குச் சொந்தமானதாகக் கூறப்படும் இவ்விடுதி, ஜெயா பதவிக்கு வந்தவுடனேயே மூடப்பட்டதால் பரபரப்புக்குள்ளானது.

"இந்த விடுதியை ஏன் மூடினார்கள்? எதற்காக மூடினார்கள்? திறப்பார்களா, மாட்டார்களா?" எனத் துருவி துருவி விசாரித்து செய்தி வெளியிட்ட இந்து நாளிதழ், அதில், "இனி சென்னைவாசிகள் எங்கே போய் நடனமாடுவார்கள்?" என்று தனது வருத்தத்தையும் கொட்டித் தீர்த்தது. "வெண்ணெய் திரண்டு வரும்பொழுது தாழி உடைந்தது போல, சென்னையில் டிஸ்கோ நடனக் கலாச்சாரம் பரவிக் கொண்டிருக்கும் பொழுது இப்படி நடந்து விட்டதே" எனத் தனது ஆதங்கத்தையும் வெளிப்படுத்தியது. டிஸ்கோ நடனப் பிரியர்களான மேட்டுக்குடி கும்பலோ, "பொழுதுபோக்கு விசயத்தில் அரசியல் விளையாடி விட்டது; பாழாய்ப் போன, அசிங்கமான அரசியல்தான் காரணம்" எனக் கண்டித்து பேட்டி கொடுக்கிறார்கள்.



மாறன் குடும்பத்து நடன விடுதி மூடிக் கிடப்பதால், சென்னை மக்களின் வாழ்க்கை குடிமுழுகிப் போய்விடவில்லை. போதை யேற்றிக் கொண்டு களிவெறியாட்டம் போட சென்னையில் பல நடன விடுதிகள் இருக்கும் போதும், ஒரு விடுதி மூடப்பட்டுக் கிடப்பதை, மேட்டுக்குடி கும்பலின் வாழ்வுரிமை பறிக்கப்பட்டதைப் போல ஊதிப் பெருக்குகிறார்கள்.

இதோ இங்கே ஊர்வலமாகச் செல்பவர்கள் சென்னையில் மூடப்பட்டுக் கிடக்கும் "ஸ்டாண்டர்டு" கார் ஆலைத் தொழிலாளர்கள். பல ஆண்டுகளாக மூடப்பட்டுக் கிடக்கும் இத்தொழிற்சாலையைத் திறக்கக் கோரி அந்த ஆலைத் தொழிலாளர்கள் போராடி வருவதன் தொடர்ச்சியாக இந்த ஊர்வலம் நடத்தப்பட்டது. இன்று, ஆலைமூடல் தான் தொழிலாளி வர்க்கத்தின் தலைக்கு மேல் கத்தியாகத் தொங்கிக் கொண்டிருக்கிறது.

ஒரு நடன விடுதி மூடப்பட்டதற்கான காரணத்தைத் தோண்டித் துருவிப் பார்க்கும் இந்து, ஆலை மூடலுக்கு முதலாளியும், அரசாங்கமும் சொல்லும் காரணங்களைத் தான் வாந்தியெடுக்கிறது. "இனி சென்னைவாசி நடனமாட எங்கே போவான்?" எனக் கேள்வி கேட்பவர்கள், "மூடிக் கிடக்கும் ஆலைத் தொழிலாளியின் குடும்பம் அடுத்த வேளை சோத்துக்கு எங்கே போகும்? என்ன செய்யும்?" என அக்கறைப்படுவதில்லை. "நடன விடுதியை மூடினால், 'டிஸ்கோ' கலாச்சாரம் என்னவாகும்?" எனக் கவலைப்படுபவர்கள், அடுத்தடுத்து பொதுத் துறை ஆலைகள் மூடப்படும் பொழுது, அதில் வேலை பார்த்த தொழிலாளர்களின் எதிர்காலம் என்னவாகும்? என்பதை ஒரு நிமிடம் கூட நினைத்துப் பார்ப்பதில்லை. மாறாக, "இதுதாண்டா தாராளமயம்" எனக் கைதட்டி வரவேற்கிறார்கள்.

ஒருபுறம், தாராளமயம் பரப்பும் "டிஸ்கோ" கலாச்சாரம்; மறுபுறம், தாராளமயத்தால் வேலையிழந்து, வாழ்க்கையிழந்து நிற்கும் தொழிலாளர்கள். தொழிலாளர்களின் வாழ்க்கையைவிட, அவன் குடும்பத்தின் எதிர்கால நலனை விட, இந்த அரைகுறை ஆபாச நடனக் கலாச்சாரமா பெரிது?

●●●